கல்கி

KALKI
30.3.86
ரூ. 1.50



அதிவேக ரயில் திட்டம் அம்போதானா?


எனது கூந்தலை சுத்தம் செய்து கண்டிஷன் செய்ய...
எனது மேனி நிறம் காத்திட... அங்கமெங்கும் பொங்கும்
எழில் பேணிட... எனதருமை க்ரௌனிங் க்ளோரி!
Dimple Kapadia
Godrej
BEAUTY SOA
for silky hair
கூந்தலுக்கும், மேனி எழிலுக்கும், நிறத்திற்கு
உதவும் ஒரே அழகு சாதன சோப்!
CHAITHA: B G 357 TAM

கே.கே நகரில் ஒரு பூகம்பம்!



• சக்தி விநாயகர் — விடிவுக் கிடைக்குமா?

"தில்லுமுல்லு தெரிந்தால் தக்கார் பதவி!'' என்ற தலைப்பில் சென்ற வாரம் (மார்ச் 23 இதழில்) வெளியான கட்டுரை சென்னை கே. கே. நகர் வட்டாரத்தில் ஒரு பூகம்பத்தையே ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையாகாது! வியாழன் காலையிலிருந்தே டெலிஃபோனிலும் நேரிலும் பலர் நம்முடன் பேசியிருக்கிறார்கள். கோபமாகப் பேசியவர்கள், சாந்தமாகப்பேசியவர்கள், உணர்ச்சி வசப்பட்டுப் பேசியவர்கள், ஆவேசமாகப் பேசியவர்கள், ஆக்கபூர்வமாகப் பேசியவர்கள், பிரபலஸ்தர்கள், சாமானியர்கள் அனைவருக்கும் நன்றி.

* * * * *

கே. கே. நகர் சக்தி விநாயகர் கோயில் நிர்வாகம் சரியில்லை என்பதாக, ஒரு நிருபர் நம்மிடம் கொண்டு வந்து கொடுத்த ஒரு பேட்டி — தகவல் கட்டுரையிலிருந்து தோன்றவே வருந்தினோம். இந்த நிருபர், கோயில் டிரஸ்டியாக சில காலம் இருந்த குருமூர்த்தி என்பவரைச் சந்தித்துப் பேசியிருந்தார். குருமூர்த்தி தமது பேட்டியில் தற்போதைய தக்கார் செயலாளர்களான அழகப்பன், வெங்கடராமன் முதலியவர்கள் மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருந்தார்.

'ஒரு கோயிலின் பராமரிப்பில் இப்படி பூசல்கள் இருப்பதால் கோயிலின் வளர்ச்சி தானே பாதிக்கப்படும்? அப்பகுதி மக்களுக்குத்தானே துன்பம்? எத்தனை பேர் இறைவனுக்குக் காணிக்கைகள் செலுத்தினர்களோ? அவர்கள் மனங்கள் என்ன பாடுபடும்?' என்று தோன்றியது.

ஆனால் மறுதரப்பு வாதத்தை அறியாமல் குருமூர்த்தியின் குற்றச்சாட்டுக்களைப் பிரசுரிப்பது தவறு என்று தோன்றவே, நடுநிலை கருதி வேறு ஒரு நிருபரை அழைத்து அழகப்பனைப் பேட்டி கண்டுவரச் செய்தோம். அழகப்பனும் குற்றச்சாட்டுக்களை மறுத்ததுடன் குருமூர்த்தி மீது பல குற்றச்சாட்டுக்களைப் பதிலுக்குச் சுமத்தினர்.

'யார் சொல்வது சரி என்று நீதி வழங்குவது நம் கடமைக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட விஷயம். ஆயினும் இருதரப்பு வாதங்களையும் பிரசுரித்தால் என்ன? இதிலிருந்து புரையோடிப் போயிருக்கும் இந்த விஷயம் முற்றி, ஒரு ரண சிகிச்சை போல் ஏதும் நடந்து, மொத்தத்தில் ஆலயத்துக்கு ஒரு நல்ல கதி பிறந்தால் அது அந்த வட்டார மக்களுக்கு நன்மைதானே?' என்று தோன்றியது. பிரசுரித்து விட்டோம்.

ஆனால் ஒன்று. இதற்கு முந்தைய மார்ச் 16 இதழில் பிரசுரிக்கப்பட்ட "அடுத்த இதழில்... அறிவிப்பு,'' அழகப்பனிடம் மறுப்பைக் கேட்டுப் பெறுவதற்கு முன்னதாகவே அச்சாகிவிட்டது. அதனால் அந்த அறிவிப்பு நடுநிலையில் அமையாமல் அழகப்பன் — வெங்கடராமன் தரப்புக்குப் பாதகமாகவே இருக்கிறது. இந்த அறிவிப்பு ஏற்படுத்தியுள்ள மனக் கஷ்டத்துக்காக வருத்தம் தெரிவித்துக்

தொடர்ச்சி கடைசிப் பக்கம்...

அதிவேக ரயில் திட்டம் அம்போதானா?



* தமிழ்நாடு அரசாங்கத்தினால் அமைக்கப் பட்ட இரு நிறுவனங்கள் 1968ல் சென்னை மாநகரின் பல்வேறு பகுதி களின் போக்குவரத்து நெரிசல் பற்றி ஓர் ஆய்வை நடத்தின. அதன் மூலம் திருவொற்றியூரிலிருந்து அடையாறில் கஸ்தூரிபாய் நகர் வரையான பகுதிதான் சென்னையிலேயே போக்குவரத்தில் மிக மிக நெரிசல் நிறைந்தது என்று கண்டு பிடிக்கப்பட்டது. ஆய்வு நடத்திய நிறு வனங்கள் 1. மெட்ராஸ் ஏரியா டிரான்ஸ் போர்ட் ஸ்டடி யூனிட்; 2. எம்.எம்.டி.ஏ.

* 'பீச்' ஸ்டேஷனிலிருந்து திருவொற்றியூர் பகுதிக்கு ஏற்கெனவே அகல இருப்புப் பாதை இருக்கிறது. அதேபோல, லஸ் பகுதியிலிருந்து அடையாறு வரை நல்ல முறையில் பஸ் வசதியிருக்கிறது. எனவே பீச் ஸ்டேஷனிலிருந்து, லஸ் வரை இந்தப் பறக்கும் ரயிலைவிட முடிவு செய் யப்பட்டது.

* 'அது சரி! ரயில் பறக்குமா?' என்கிறீர் களா? 'ஊகூம். ரயில் பறக்காது. பூமி மட்டத்திலிருந்து ஓர் அங்குலம்கூட மேலெழாது. சாதாரணமான பிராட் 'கேஜ் பாதையில் இப்போது பயன்படுத் தப்படும் ரயில்கள்தான் ஓடப் போகின் றன. ஆனால் பயணம் முன்னிலும் துரித மாகநடந்துமுடியும்என்பதால் அதிவேக ரயில்,பறக்கும் ரயில் என்கிறோம்.

* ஆனால் ஒன்று. பீச் ஸ்டேஷனிலிருந்து கொஞ்சதூரம்தரைமட்டத்திலும், அதன் பின் பூமியிலிருந்து ஐந்தரை மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்ட பிளாட் பாரத்திலும் இந்த ரயில் ஓடும். அந்த அளவில் இது "பறக்கும் ரயில்" தான்.

* முதல் ஸ்டேஷன் பீச்; அடுத்தது கோட்டை; பிறகு சென்ட்ரல். இப் போதுள்ள மின்சார ரயில் பாதைக்கு இணையாகவே பீச்சிலிருந்து, சென்ட்ரல் வரை புதிய ரயில் பாதை இருக்கும். ஸ்டேஷன்கள் புதிதாய் அமைக்கப் படும். சென்ட்ரலைத் தாண்டினவுடன், அடுத்த ஸ்டேஷன் சிந்தாதிரிப்பேட்டை! சென்ட்ரலை விட்டுப் புறப்படுகையில் தரைமட்டத்திலிருந்த ரயில், சிந்தாதிரிப் பேட்டையை அடையும்போது தரை யிலிருந்து ஐந்தரை அடி உயரத்தில் இருக்கும். அப்புறம் லஸ் வரை உயரத் தில்தான் ஓடும். இடைபட்ட ஸ்டேஷன் கள்: வாலாஜா ரோடு, பாரதி சாலை, லாயிட்ஸ் ரோடு ஆகிய மூன்று.

* சிந்தாதிரிப்பேட்டையிலிருந்துலஸ்வரை வழி நெடுகத் தூண்கள் எழுப்பப்பட்டு, அதன்மேல்தளம்அமைக்கப்பட்டு அதன் மேல் போகவும் வரவும் தனித்தனியே இரண்டு பாதைகள் போடப்படும். தரை மட்டத்திலிருந்து சுமார் மூணு, மூணரை



• நடக்கும், பறக்கும் ரயில் திட்ட வேலைகள்.

சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க 'ராப்பிட் டிரான்ஸிட் ஸிஸ்டம்' (Rapid Transit System) எனப்படும் பறக்கும் ரயில் திட்டம் போடப்பட்டது. ஆனால் அந்தத் திட்டம் நிறைவேறுமா அல்லது வேறு பல திட்டங்களைப் போல இதுவும் குறைப் பிரசவமாகி விடுமா?

மீட்டர் உயரத்தில் ஸ்டேஷன் உருவாகும். ஸ்டேஷனிலேயே டிக்கெட் கௌண்ட்டர், புத்தக ஸ்டால், சிற்றுண்டி ஸ்டால் இன்ன பிறவும் இருக்கும்.

* 1981ம் வருஷத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி இத்திட்டத்துக்கான மொத்தச் செலவு 56 கோடி. ஆனால் இன்றைய நிலவரப்படி மொத்தம் 100 கோடி செலவாகிற விஷயமாகிவிட்டது இது. இன்னும் தாமதிக்கத் தாமதிக்க விலைவாசி உயர்வு காரணமாகச் செலவு அதிகரித்துக் கொண்டுதான் போகப் போகிறது. முதலில் போட்ட திட்டப்படி இது 1991ல் முடிவடைய வேண்டும்.

* பெருநகரங்களின் போக்குவரத்துக்கென ரயில்வே பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் தொகையிலிருந்துதான் இந்தத் திட்டத்துக்கு நிதியுதவி வர வேண்டும். இந்த 100 கோடி திட்டத்துக்கு, மத்திய அரசு இதுவரை சுமார் ஏழரைக் கோடி ரூபாய்தான் நிதி அளித்துள்ளது. (கல்கத்தாவின் பாதாள ரயில் திட்டத்துக்குச் சென்ற ஆண்டு மட்டும் வழங்கப்பட்டது சுமார் 85 கோடி.)

* பறக்கும் ரயில் திட்ட வேலைகள் ஆரம்பமாகிவிட்டதா? ஓ! பூந்தமல்லி நெடுஞ்சாலையில் 71ம் வருஷமே ஆபீஸ் திறந்துவிட்டார்கள்: பீச் ஸ்டேஷனில் இதுவரை இருந்த சரக்குக் கிடங்கு, பார்சல் ஆபீஸ் இவற்றை மூடி, மாற்று ஏற்பாடுகள் செய்துவிட்டார்கள். கோட்டை ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் இருக்கிற மேம்பாலத்தின் ஒரு பகுதியை இடித்து, இன்னும் உயரமாக்குகிற வேலை நடந்து கொண்டிருக்கிறது. அதேபோல, ரிசர்வ் பாங்க் அருகில் இருக்கிற சுரங்கப் பாதைப் பகுதியிலும் புதிய ரயில் பாதை அமைக்கும் பணி நடைபெறுகிறது. சென்ட்ரல் ஸ்டேஷன் எதிரிலுள்ள மேம்பாலத்தின் உயரமும் அதிகரிக்கப்பட இருக்கிறது. பாலங்களை உயரப்படுத்துதல், அகலப்படுத்துதல், புதிதாய்க் கட்டுதல் போன்ற வேலைகளுக்கான செலவுகளையும் ரயில்வேயே ஏற்றுக் கொண்டுள்ளது.

* இந்த ரயில் பாதையின் மொத்த நீளம் 8.45 கி.மீ. தரை மட்டத்தில் 2.93 கி.மீ. உயரத்தில் 5.52 கி.மீ. இந்தத் திட்டத்தில் 21 ஹெக்டேர் நிலம் சம்பந்தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு 18.6 ஹெக்டேரை இலவசமாகவே ரயில்வேக்குத் தந்துவிட்டது. 2.2 ஹெக்டேர் நிலம் தனியாருக்குச் சொந்தமானது.

துரித ரயில் திட்டம் பற்றிச் சில சென்னைவாசிகளின் கருத்துக்களைக் கேட்டோம்.



எஸ். ஜலாலுதீன் (மளிகைக் கடைக்காரர்):

''முதலில் திருவொற்றியூரிலிருந்து, திருவான்மியூர் வரை புதிய ரயில் ரூட் போடப் போகிறார்கள் என்று சொல்லப்பட்டது. அப்புறம் பீச்சிலிருந்து அடையாறு வரை என்றார்கள். இப்போது பீச் முதல் லஸ் வரை என்கிறார்கள். கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாய்த்தான் இது இருக்கிறது. போகிற போக்கைப் பார்த்தால், அண்ணா சதுக்கத்திலிருந்து, ஆல் இந்தியா ரேடியோ வரை தான் ரயில் விடுவார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. இந்தத் திட்டம் நிறைவேறி, நாம் அந்த ரயிலில் பயணம் செய்வது கனவாகவே முடியப் போகிறதோ, என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. ஒருவேளை நமது பேரன் கொள்ளுப்பேரன் காலத்தில் அவர்கள் பயணம் செய்யலாம்!



திருமதி. ஞானம் (குடும்பத் தலைவி):

''சென்னை நகருக்குக் குடிதண்ணீர்ப் பஞ்சம் வரவே வராது. இதோ தெலுங்கு கங்கைத் திட்டம் என்றார்கள். இவர் 'தம்பி!' என்றார்; அவர், 'அண்ணா!' என்றார். விழாக் கொண்டாடினார்கள்; ஊரே அமர்க்களப்பட்டது. இன்னும் தண்ணீர் வந்த பாடில்லை. இப்போது புதிதாய் ரயில் திட்டமாம். எனக்கென்னவோ இதெல்லாம் நிறைவேறும் என்று தோன்றவில்லை.''

இதையும் தமிழ்நாடு அரசாங்கம் வாங்கி, ரயில்வேக்கு இலவசமாகத் தந்துவிட்டது. சுமார் ஒரு ஹெக்டேர் நிலம் ராணுவம் மற்றும் மத்திய அரசுக்கு உடைமையானது. இதை ரயில்வே விலைக்கு வாங்கியுள்ளது.

* இந்தப் பாதையில் ஓடப் போகிற ரயில் ஒன்பது பெட்டிகள் கொண்ட சாதாரண ரயில்தான். காரணம் லஸ்ஸிலிருந்து புறப்பட்ட ரயில் பீச் வந்து சேர்த்ததும், அதோடு நிற்காமல் கும்மிடிப்பூண்டி, அல்லது திருவள்ளூர் வரை போகவிருப்பதால், இரண்டுவிதமான ரயில்கள் விடுவது சாத்தியமில்லை.

* பீச் முதல் லஸ் வரையிலான இந்த ரூட்டில் தினம் சுமார் 300 தடவை ரயில்கள் ஓடும். ஒரு சமயத்தில் ஒரு ரயிலில் 3000 பேர் பயணம் செய்யலாம். ரயிலின் வேகம் மணிக்கு 30 கி.மீ.

* நெரிசல் நிறைந்த காலை மாலை வேளைகளில் ஐந்து நிமிடங்களுக்கு ஒரு ரயில் வீதம் வந்து போய்க் கொண்டிருக்கும். திட்டம் முடிவடைந்தவுடன், ரயில் மூலம் இப்பகுதியில் ஆறு லட்சம் பேர் தினமும் போய் வரலாம்.

* இப்போது பீச் முதல் லஸ் வரை பஸ்ஸில் போகச் சுமார் 45 நிமி. ஆகிறது. பறக்கும் ரயில் வந்துவிட்டால் 17 நிமிடத்தில் பறந்து போய்விடலாம். 90ம் வருஷம் பஸ்ஸில் போக சுமார்

ஆர். ராஜன் (சொந்த பிஸினஸ்):

''முத்துசாமி பாலத்திலும், இன்னும் சில இடங்களிலும் வேலை ஆரம்பமாகிவிட்டது. பீச் முதல் லஸ் வரை உள்ள இடைப்பட்ட தூரம் அப்படி ஒன்றும் அதிகமில்லை. சென்ட்ரலிலிருந்து திருவள்ளூர் வரை மின்சார ரயில் திட்டம் நிறைவேற்றப்படவில்லையா! இதுவும் நிறைவேறிவிடும்; எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இதையே தமிழகத்தில் இ. காங்கிரஸ் கட்சியை வேரூன்ற வைக்க வழி செய்யும் ராஜதந்திரமாகவும் நடத்திக் காட்டலாம்.



ஒன்னரை மணி நேரம் ஆகுமாம்! ஆனால் ரயில் பயணத்தில் இப்படி நேரம் அதிகரிக்க வாய்ப்பில்லை.

* இந்தப் பாதை அமைக்கிற வேலையில் ஈடுபடுகையில் பலவிதமான பிரச்னைகளை ரயில்வே நிர்வாகம் சந்திக்க வேண்டியிருக்கும். இவற்றை உடனுக்குடன் சமாளிக்கப் பல்வேறு அரசுத் துறை செயலாளர்கள், சென்னை மாவட்டக் கலெக்டர், போலீஸ் கமிஷனர், தலைமைச் செயலர், மத்திய அரசுத் துறை உயர் அதிகாரிகள் என்று பல பெரிய புள்ளிகள் அடங்கின குழு அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை அந்தக் குழு கூடி, திட்டம் நிறைவேறுவதில் உள்ள தடைகளைத் துரிதமாய்த் தீர்த்து வைக்கிறது. ஆனால் மிகப் பெரிய தடை நிதிப் பற்றாக்குறைதான். அதற்கு இந்தக் குழு என்ன செய்ய முடியும்?

* செயின்ட் பாட்ரிக் 'ஸெமெட்ரி' வழியே ரயில்பாதை அமைக்கப்பட வேண்டும். ரயில் பாதை உயரத்தில் இருக்கப் போகிறது என்றாலும், அதற்கான தூண்கள் அமைக்கும் பொருட்டு, சில கல்லறைகளை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டியிருந்தது. இதற்காக சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து, விஷயத்தை விவரமாய் எடுத்துச் சொல்லி, கல்லறையை வேறிடத்துக்கு மாற்ற அவர்கள் சம்மதத்தையும் பெற்றிருக்கிறார்கள். இதற்கு அனுமதி வழங்கியவர்களின் பரந்த மனப்பான்மையை எவ்வளவு போற்றினாலும் தகும்.

* பல பகுதிகளில் குடிசைப் பகுதிகளை அகற்ற வேண்டியிருக்கிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து தர ஒப்புக்கொண்டிருக்கிறது.

* ரயில்கள் ஓடத் தேவையான மின்சாரத்தைத் தமிழ்நாடு மின்வாரியம் வழங்க இருக்கிறது. இதற்கென சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப் போகிறார்கள்.

* இந்தப் பெரிய திட்டத்தின் தலைமை ப்ராஜெக்ட் மானேஜர் பொறுப்பில் இருப்பவர் மோகன். சீஃப் ஆபரேடிங் சூப்பரின்டென்டெண்ட் பொறுப்பு வகிப்பவர் தாமஸ் வர்கீஸ்.

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**

புகைப்படங்கள்: **சுபா**

மேலட்டையில்: அதிவேக ரயில் திட்டத்தின் மாடலை இரு மாணவர்கள் ஆர்வத்துடன் ஆராய்கிறார்கள்.

வண்ணப்படம்: **யோகா**

திருமதி ஜானகி கிருஷ்ணன் (பள்ளி ஆசிரியை):

''சென்னை மாநகரத்தின் அபரிமிதமான வளர்ச்சி, ஜனநெரிசல், அதனாலுண்டாகும் பிரச்னைகள், பற்றி மத்திய அரசாங்கத்துக்கும், ரயில்வேக்கும் நன்றாய்த் தெரியும். இந்தப் பிரச்னைகளைப் புதிய ரயில் திட்டம் பெருமளவில் சமாளிக்க உதவப் போகிறது என்பதும் அவர்களுக்குத் தெரியும். நிதித் தட்டுப்பாட்டைச் சமாளிக்கத்தான் தமிழக அரசு ஆண்டுதோறும் தவணை முறையில் உதவி செய்யப் போவதாய் அறிவித்துள்ளதே! எனவே திட்டமிட்டபடி ஐந்தாண்டுகளில் இல்லாவிட்டாலும், ஏழெட்டு வருடங்களிலாவது திட்டம் நிறைவேறிவிடும் பாருங்களேன்!





பத்மநாபன் (ஆடிட்டர்):

''முதலில் 56 கோடி திட்டம் என்றார்கள். இப்போது அது 100 கோடியாய் அதிகரித்துவிட்டது. 91 ம் வருஷம் முடியும் என்றார்கள். இதுவரை 10 கோடி ரூபாய் கூட தரப்படவில்லை. தெற்கு என்றாலே மத்திய அரசுக்கு மாற்றாந்தாய் மனப்பான்மைதான். இத்திட்டம் முடியும் போது செலவு 200 கோடியானாலும் ஆச்சரியப்படக் கூடாது. அவ்வளவு பணத்துக்கு எங்கே போவது! கல்கத்தாவின் பாதாள ரயில் திட்டத்தின் கதை நமக்குத் தெரியாததா என்ன?''



ஆசிரியர்: காலங்கள் எத்தனைன்னு கேட்டா, "மூணுன்னு சொல்லாம 'எட்டு'ன்னு சொல்றியே, உங்கப்பா என்ன செய்யறாரு?

மாணவன்: தினப் பத்திரிகை ஆசிரியர் சார்!

—ஆர். சாம்பசிவம்.

ஆசிரியர்: "உங்க பையன் ரொம்ப மோசம் சார்."

சாராய வியாபாரி: "ஏன்?"

ஆசிரியர்: "A B C D சொல்லுடான்னு A for Arrack, B for Beer, C for Chicken, D for Drink அப்படிங்கறான்."

— கெழ. ஆ. சந்திரவேல்.





ஹெட்கிளார்க்: நம்ம குப்புசாமிக்குத் திடீர்னு காது செவிடாயிடுச்சே சார்.... அவரை ஆபீஸ்ல வச்சுக்கிட்டு என்ன செய்யப் போறீங்க?

மேனேஜர்: கவலையை விடுங்க! புகார் பகுதியில் அவரைப் போட்டுடலாம்!

— கிரிஜா மணாளன்.

அஸிஸ்டெண்ட்: ராமசாமி நிமோனியா ஜுரத்துல இறந்துட்டார்னு எல்லோரும் உங்களைக் குறை சொல்றாங்க டாக்டர்!

டாக்டர்: நிமோனியா ல செத்தா நானெப்படி பொறுப்பாவேன்? அவருக்கு நான் மலேரியாக்கல்லவா மருந்து கொடுத்து வந்தேன்.

— கிரிஜா மணாளன்.






மானேஜர்: நாளைக்கு ரேஸுக்குப் போறதுக்கு லீவு வேணுமா? அதெல்லாம் தர முடியாது! நாளைக்கு 'காஷ் ஆடிட்' இருக்கு. தெரியுமில்லே?

காஷியர்: அதனால்தான் கேட்கிறேன்!


— கிரிஜா மணாளன்.

ஈடு இணை இல்லாத இளமை வேகம்...




விஜய் சூபர் மார்க் II

வேறு எந்த 150cc ஸ்கூட்டரும் தரமுடியாத
• சிக்கனம் • சக்தி • பாதுகாப்பு • உழைப்பு
அனைத்தும் அளிக்கும் அற்புதமான ஸ்கூட்டர்.



குறைந்த பெட்ரோல், நீண்ட பயணம் :

ஒரே ஒரு லிட்டர் பெட்ரோல் போதும் — 56 கிலோ மீட்டர் போகலாம்! ஜப்பானிய வெஞ்சுரி கார்புரேட்டர், இத்தாலிய வடிவமைப்பில் உருவான 9.6 BHP சக்தி கொண்ட சீறிப்பாயும் எஞ்சின், அமெரிக்க K & N ஏர்ஃபில்டர் — இவை மூன்றும் இணைந்த அமைப்பினால் ஏராளமான பெட்ரோல் மிச்சம்!




பாங்கான அமைப்பு, பாதுகாப்பான ஓட்டம் :

நடுப் பகுதியில் எஞ்சின் அமைந்த அழகான, வலுவான அமைப்பு—நெளியாத, வளையாத சீரான ஓட்டம் — மின்னல் வேகத்திலும் சறுக்காத பிரேக் பிடிப்பு—இவை யாவும் தருவது சொகுசான, பாதுகாப்பான பயணம்.

உழைப்பின் உறுதி :

1000 தாக்கட்டுப்பாடு சோதனைகளுக்குப் பின் அளிக்கப்படுவது 15 மாதம்/10,000 கி.மீ. உழைப்புக்கான வாரண்டி.



விஜய் சூபர் ஸ்கூட்டர் உலகில் சூபர் ஸ்டார்!

ஸ்கூட்டர்ஸ் இந்தியா லிமிடெட்
352, அண்ணா சாலை,
சென்னை-600 035.
போன் : 450654

விற்பனையாளர்கள் : • சென்னை : மெட்ராஸ் ஸ்கூட்டர்ஸ், போன் : 451774. • சரவணன் ஆட்டோ ஓர்க்ஸ். போன் : 470274 • மதுரை : பாபு ஆட்டோ எய்ட்ஸ். போன் : 33047 • தி ரைடர்ஸ். போன் : 32393 • சேலம் : விஜய் ஏஜென்சீஸ். போன் : 7123 • கோவை : • S.J. பாலகிருஷ்ணன் & கோ. போன் : 31759 ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (SI) லிமிடெட். போன்: 23363/64 • திருச்சி : விக்னேஸ்வரா & கோ. போன் : 28928 • திருநெல்வேலி : இந்தியா ஸ்கூட்டர். போன் : 4700 • ஈரோடு : ஆனந்தா ஆட்டோமொபைல்ஸ். போன் : 79204. • பாண்டிச்சேரி : பைலட் ஏஜன்சீஸ். போன் : 6460.

ADWAVE SIL 3090A

மறுக்கிறார்:

இரு எம்.எல்.ஏக்களும் ஒரு பஞ்சாயத்துத் தலைவரும் எழுதுகிறார்கள்

தங்களது 9.3.86ம் தேதி கல்கி இதழ் படித்தேன். தங்கள் கட்டுரையில் பிரதான பங்கு வகிக்கும் அகமலை கிராமம் எனது போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்டது.

இப்பகுதி மக்களின் 'சாலைத் தேவை' என்ற அடிப்படை பிரச்னையில் யாருக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. "சாலை வேண்டும்" என்ற அவர்களின் கோரிக்கையை மிகவும் உரிய முறையில் சட்டமன்றத்தில் எனது முதல் பேச்சிலேயே குறிப்பிட்டது மட்டும் இல்லாமல் அதற்கு அடுத்த சட்டமன்றத்திலும் தனிக் கேள்வி போட்டு சாலை வசதியிருந்தால்தான் அப்பகுதி மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதி முதல் எல்லாம் செய்ய முடியும் என்று எடுத்துக்கூறியவுடன் அமைச்சரும் அதை ஏற்றுக் கொண்டு மேற்குத் தொடர்ச்சி அபிவிருத்தி திட்டத்தில் இந்தச் சாலை போடுவதை சேர்த்துக்கொள்ளலாம், அதற்கு ஒரு கோடியே முப்பது லட்சம் ரூபாய் வரை ஆகும் எனவும் தெரிவித்தார்.

இந்த உறுதி மொழியினால் மட்டும் மனம் நிறைவடையாமல் அதற்குப் பின்னால் ஊரக வளர்ச்சித்துறை செயலாளர் ஆணையர் திரு. வீ. சுந்தரம் ஐ.ஏ.எஸ். அவர்களை நான் அணுகி, அகமலை மக்களின் பெரிய, நீண்ட நாள், குறையான இந்தச் சாலைப் பிரச்னை தொடர்பான மனுவினைக் கொடுத்தேன். அவரும் எங்கள் அகமலைப் பகுதி மக்களின் குறைகளை உணர்ந்து எனது கோரிக்கையின் நியாயத்தைப் புரிந்து கொண்டு ஒரு கோடியே ஐம்பது லட்சங்கள் வேண்டும் என்று நான் சொன்னதை ஏற்று அனுமதி அளித்திருக்கிறார்.

அதோடு, 'உடனே நீங்களே தமிழக நெடுஞ்சாலைத் துறைத் தலைமைப் பொறியாளரைச் சந்தித்து இந்தச் சாலை சம்பந்தமான குறிப்புக்களையும் தெரிவியுங்கள்' என்று சொன்னார். நானும் சென்னையில் அவரைச் சந்தித்து மனு மூலமாக விபரத்தைத் தெரிவித்தேன். தலைமைப் பொறியாளரும் நான் சொன்ன விபரங்களைக் கேட்டுக் கொண்டு சம்பந்தப்பட்ட சக அதிகாரிகளுக்கு ஆய்வுப் பணிகளைத் (சர்வே) துரிதமாக முடித்து மேற்கொண்டு விபரம் அனுப்ப ஆணை பிறப்பித்தார். அதன் பலனாகச் சில நாட்களுக்கு முன்னால் பொறியாளர்கள் குழு அகமலைக்கு நேரில் சென்று ஆய்வு நடத்தியுள்ளார்கள்.

பெரியகுளம் அகமலை நெடுஞ்சாலைக்கான சர்வே பணிகள் முடிந்து மிகவும் விரைவில் சாலை போடும் வேலை துவங்கிவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உண்மையான நிலையை மூடி மறைக்காமல் 'மக்கள் உணர இதைப் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

கே. எஸ். எம். ராமச்சந்திரன்,
போடிநாயக்கனூர். எம். எல். ஏ.

* * * * * *

கல்கி 9.3.86 இதழில் "ஓர் ஊரையே வறண்டு போகச் செய்த ஆளுங் கட்சி எம். எல். ஏ." என்னும் தலைப்பில் பல செய்திகளைக் குறிப்பிட்டு விட்டு, "தி.மு.க.வைச் சேர்ந்த துரை என்பவரும் எம்.எல்.ஏ.க்குச் சமமான ஆள் பலம் உள்ளவர். அதனால் அவர் தோட்டத்திற்கு மட்டும் இந்தக் கால்வாய்த் தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது" என்று வெளியாகியிருந்தது.

இங்கு பி.டி.ஆர். கால்வாய் நலக் கமிட்டியின் முயற்சியால்தான் ஒவ்வொரு முறையும் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. இக் கால்வாய்த் தண்ணீர் எங்கள் ஊரில் 100 ஏக்கருக்குப் பயன்படுகிறது. அதில் எனக்குச் சொந்தமாக இருக்கும் இரண்டு ஏக்கருக்கு மட்டும்தான் இத்தண்ணீர் பாய்கிறது. இதைத் தவிர என் தோட்டத்திற்கு அத்தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது என்பது உண்மைக்குப் புறம்பான செய்தி.

எல்.பி. துரை,
சிப்பலாக்கோட்டை, பஞ்சாயத்துத் தலைவர்.

* * * * * *

கல்கி 9.3.86 இதழைப் படித்தேன். "ஓர் ஊரையே வறண்டு போகச் செய்த ஆளுங்கட்சி எம்.எல்.ஏ." என்று தலைப்பிட்டு என்னைப் பற்றியும், எனது தொகுதியில் நடைபெற்றுள்ள வளர்ச்சித் திட்டங்களைப் பற்றியும், விமர்சித்துள்ளீர்கள்.

தந்தை பெரியார் வாய்க்கால் திட்டம் நிறைவேற்றப்பட்டதனால் சுமார் 3500 ஏக்கர் புஞ்சை நிலம் நீர்ப் பாசன வசதி பெறுகிறது. ஏதோ எனது சொந்த ஊரான

மறுக்கிறோம்!

தாடிச்சேரிக்கு மட்டும் நீர் செல்லுவது போலவும், மற்ற ஊர் கண்மாயிகளுக்கு நீர் மறுக்கப்படுவதாகவும் ஓர் உண்மைக்குப் புறம்பான செய்தியினை வெங்கிடா ஜலபுரத்து மக்கள் சிலர் கூறியுள்ளனர். தங்களின் கண்மாய்க்கு நீர் வரவில்லையென்றும் வந்த நீருக்கு அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்ததாகவும் கூறியுள்ளார்கள். இந்தத் திட்டத்தில் அடங்கியுள்ள அத்தனை கண்மாய்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணைக்கு ஒப்ப முறை வைக்கப்பட்டு, கிடைக்கின்ற பெரியாற்றின் நீரின் அளவுக்கு ஒப்ப நீர் வழங்கப்பட்டிருக்கிறது. அந்தந்தக் கண்மாய்களின் ஆயக்கட்டுக் குழுக்கள் உரிய அதிகாரிகளை அணுகி நீரினை முறைப்படி சிந்தாமல் சிதறாமல் கொணர்ந்துள்ளார்கள். கஷ்டப்பட்டுக் கொணர்ந்த நீரின் உதவியால் ஏக்கர் ஒன்றுக்கு 60 மூடை அளவில் மகசூல் அறுவடை செய்துள்ளார்கள். வெங்கிடா ஜலபுரத்துக்கு முறைப்படி அந்த ஊர் கண்மாய்க்கு நீர் அளிக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமென்றே அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு உண்மைக்குப் புறம்பான செய்தியினைக் கூறியுள்ளார்கள். இந்த ஆண்டு இத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைத்துக் கண்மாய்களுக்கும் முறைத் தண்ணீர் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

ஒரு பகுதியை வறண்டு போகச் செய்கின்ற அளவுக்கு என்னிடம் எந்த ஓர் அபூர்வ சக்தியும் கிடையாது. செயல்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு உள்நோக்கம் கற்பிப்பது என்றால் எந்தத் திட்டத்திற்கும் உள்நோக்கம் கற்பிக்கலாம்.

தேனி சட்டமன்ற தொகுதியில் புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலத்தில் அனைத்துக் கிராமங்களுக்கும் (118) போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது. தாடிச்சேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் வாயிலாக சுமார் 12 கிராமங்கள் பயனடைகின்றன. ஆய்வில் உள்ள கோவிந்த நகரம் கூட்டுக் குடிநீர் திட்டம், சின்ன ஓவலாபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் ஆகிய இரு திட்டங்களின் வாயிலாக தேனி தொகுதியின் அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்யப்படவுள்ளது.

தேனி சின்னமனூர் நகராட்சியின் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் சுமார் 1.5 கோடி செலவில் போர்க்கால அடிப்படையில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. தேனித் தொகுதி தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. சண்முகா நதி அணைத் திட்டம் சுமார் 7 கோடி செலவில் அரசின் அனுமதியை எதிர்நோக்கி உள்ளது. திப்பரவு அணைத் திட்டம் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்படுகின்றன. அனைத்து ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கும் நிரந்தர கட்டட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சத்துணவுக் கூடங்கள், துணை சுகாதார நிலையங்கள், சாக்கடை வசதிகள் அனைத்துக் கிராமங்களுக்கும் செய்யப்பட்டுள்ளன.

நீண்ட நெடுநாளைய கோரிக்கையான அம்பா சமுத்திர பாலம் வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வருகின்றது. அரண்மனை புதூர் பாலம் சுமார் 30 இலட்சம் செலவில் டெண்டர்கள் கோரப்பட்ட நிலையில் இருக்கின்றது. தேனியில் சுமார் 8 கோடி செலவில் 230 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்கும் பணிக்கு நில ஆர்ஜித வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இத்துணை வளர்ச்சிப் பணிகளைப் பிரசுரிப்பதற்குப் பதிலாக ஏதோ காழ்ப்புணர்ச்சியில் கூறப்பட்ட சிலரது பொய்யான கருத்துக்களுக்கு மதிப்பளித்துப் பிரசுரித்திருப்பது கண்டு மக்கள் வியப்படைகின்றனர்.

வே. இரா. ஜெயராமன்,
எம்.எல்.ஏ.
தேனி,

வளர்ச்சித் திட்டங்களை நாம் மறுக்கவில்லை. எந்த ஒரு கட்சியின் ஆட்சியானாலும் வளர்ச்சித் திட்டங்கள் மக்களின் வரிப் பணத்தில் நடக்கவே செய்யும். நடக்க வேண்டும். ஆட்சிக்கு வருபவர்களின் கடமை அது. இதில் பெருமைப்பட ஒன்றும் இல்லை. கடமைகளை நிறைவேற்றும்போது விருப்பு வெறுப்பின்றி ஆட்சி செயல்படுகிறதா; லஞ்ச ஊழல்கள் இல்லாதிருக்கிறதா, வரிப் பணம் வீணடிக்கப்படாமலும் சுபளீகரம் செய்யப்படாமலும் இருக்கிறதா என்பதையெல்லாம் வைத்துத்தான் ஆட்சியின் தரத்தை நிர்ணயிக்க முடியும். இந்த நோக்கில் பார்க்கும்போது வெங்கடா ஜலபுர மக்களின் குறைகள் நியாயமானவை, மெய்யானவை என்று அங்கு நேரில் சென்று பார்த்துப் பேசிய நமது நிருபர்கள் கருதியதால் அக்கட்டுரையைப் பிரசுரிக்க நேர்ந்தது.

— ஆ.ர்.)



மிர்ஸா
திஹார் சிறை
கரன்ஸி நோட்டாலே திறக்காது பூட்டா?
எம்.ஜி.ஆர் தூங்கறார்!
என்.டி.ஆர் தூங்கறார்!
அரசியலில் தூய்மை வேண்டும்!
ராஜ்ய சபைத் தேர்தலில் உங்க ஆள் லஞ்சம் கொடுக்கிறார்!
நான் அழுக்கில்லாத தூய்மையான சலவை செய்த 'நோட்' தான் கொடுத்தேன்!
ஆந்திர இ-காங்கிரஸ்



1986 மார்ச் 30
மலர் 44 இதழ் 35
குரோதன பங்குனி 17

கல்கி



ஷூட்டிங் முடிந்ததும் கலைக்கப்படும் செட்டுக்கள்!

மத்திய அமைச்சரால் மட்டும்தான் வரிகளைக் குறைக்க முடியுமா? நானும் குறைத்துக் காட்டுகிறேன் என்பதுபோல் தமிழக நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் பட்ஜெட்டில் சில பொருள்களுக்கு விற்பனை வரியைக் குறைத்திருக்கிறார்; வேறு சில பொருள்களுக்கு விற்பனை வரி விலக்கே அளித்திருக்கிறார். இதனால் வரி வருவாய் குறையாது என்றும் வரி ஏய்ப்பு குறைவதாலும் விற்பனை அதிகரிப்பதாலும் வரி வசூல் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கலாம். இந்த எதிர்பார்ப்பு தப்பித் தவறிப் பொய்த்துப் போய்விட்டால் என்ன செய்வது என்பதற்காக நிதி அமைச்சர் விற்பனை வரிக்குப் பதில் வேறு சில பொருள்கள் மீது 'வாங்கும் வரி' என்பதாக ஒரு புதிய வரியை விதித்திருக்கிறார். ரொம்ப முன் ஜாக்கிரதைதான்!

சமீபத்திய பஞ்சாயத்துத் தேர்தலுக்குப் பிறகு ஆளும் கட்சி,மக்களின் ஆதரவை இழந்து வருகிறதோ என்ற கிலி அதன் தலைவர்களைப் பற்றியிருக்கிறது. ஆதரவை இழக்க முக்கிய காரணம் மதுவிலக்கை ரத்து செய்ததுதான் என்ற எண்ணமும் ஆட்சித் தலைவர்களிடமும் ஆளும் கட்சித் தலைவர்களிடமும் வளர்ந்து வருகிறது. ''அப்பனுக்குச் சாராயம்; பிள்ளைக்குச் சத்துணவா?'' என்ற கோஷம் மக்கள் மனத்தைக் கவர்ந்திருப்பதாக எண்ணுகிறார்கள். இது காரணமாகத்தான் 'ஜனவரி 87 ல் மதுவிலக்கு' என்றும், 'இல்லை, அதற்கு முன்னரே மதுவிலக்கு' என்றும் ஆளுக்கு ஆள் கதறுகிறார்கள். நிதி அமைச்சரும் பட்ஜெட் உரையில் '87 ல் மதுவிலக்கு' என்ற பல்லவியைப் பாடியுள்ளார். ஆனால் மதுவிலக்கினால் ஏற்படக்கூடிய 250 கோடி வருவாய் இழப்பை எப்படி ஈடு கட்டப் போகிறது தமிழக அரசு என்பதற்கு பட்ஜெட்டிலோ நிதி அமைச்சரின் உரையிலோ சரியான விளக்கம் இல்லை. சத்துணவுத் திட்டத்துக்கு உலக வங்கி அளித்து வந்த உதவியும் குறிப்பிட்ட காலக்கெடு முடிந்துவிடவே இனி கிடைக்காது என்றே தோன்றுகிறது. இந்நிலையில் சாராய வருவாயும் இல்லையெனில்.....? எனவே, சத்துணவுத் திட்டத்தின் எதிர்காலமும் கேள்விக்குரியதாகிக் கவலை அளிக்கிறது.

ஆளுனர் உரையில் பத்து லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டு வசதி என்று தம்பட்டம் அடிக்கப்பட்டது. இதற்கு ஆண்டு ஒன்றுக்கு அறுநூறு கோடி ஒதுக்க வேண்டும் என்ற மதிப்பீடு தவறானது என்றும் உண்மையில் ஆண்டொன்றுக்கு ஆயிரம் கோடி ஒதுக்கியாக வேண்டும் என்றும் பின்னால் உணரப்பட்டது. இப்போது பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையோ 26 கோடிதான்! இந்த 26 கோடியினால் எத்தனை ஏழைகள் மெய்யாலுமே பயனடையப் போகிறார்கள்; எத்தனை பணம் அரசியல்வாதிகளின் பாக்கெட்டுக்குப் போய்விடப் போகிறது என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்!

தெலுங்கு கங்கை இங்கு ஓடுமா? நடக்குமா? வரவே வராதா? என்ற கேள்விகளுக்குப் பதிலே இல்லாத நிலையில், ஏற்கெனவே ஆந்திர அரசுக்குத் தந்த தொகைக்கு மேல் மேலும் 45 கோடி இந்த பட்ஜெட்டில் ஒதுக்கியுள்ளார் நிதி அமைச்சர்.

ஆக மொத்தம் தமிழக அரசின் திட்டங்கள் ஷூட்டிங் முடிந்ததும் கலைக்கப்பட்டுவிடும் மாபெரும் செட்டுக்கள் போல் உள்ளன. இப்படி மக்களை ஏமாற்றாமல் யதார்த்த நோக்கில் காரிய சாத்தியமான திட்டங்களை மட்டும் அறிவித்து, அவற்றுக்கு நியாயமான அளவில் நிதி ஒதுக்கீடு செய்து, செவ்வனே நிறைவேற்றி வைப்பது நல்லது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்



கோவி. மணிசேகரன் எழுதும்

மாண்புமிகு முதலமைச்சர்

சரித்திரத் தொடர்

தேசிய அரங்கில் தன்னந்தனியாக

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை வரவேற்றது. 'பிரிட்டன் வெளியேறினால் பிரதான கட்சிகளின் கூட்டணி ஆட்சி தற்காலிகமாக அமைக்கப்பட்டு, அந்த அரசு நேச நாடுகளுக்குத் துணையாக உலகப் போரில் - இறங்கும். ஆயுதம் ஏந்தியும் அஹிம்சா முறையிலும் இந்தியாவை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கும்' என்று காங்கிரஸ் கூறியது. 'பிரிட்டன் இந்தியாவிலிருந்து வெளியேறவிட்டால் காந்திஜியின் தலைமையில் நாடு தழுவிய அளவில் மிகப் பெரிய, மக்கள் இயக்கமாக அஹிம்சா முறையில் ஒரு போராட்டம் ஆரம்பிக்கப்படும்' என்றும் காங்கிரஸ் கூறியது. 'தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டால், காங்கிரஸ் கமிட்டிகள் இயங்க முடியாமல் செய்யப்பட்டால் அதன்பின் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தத்தமது மனசாட்சிப்படி நடந்து கொள்ள வேண்டும்' என்றது.

ஆகஸ்டு எட்டாம் தேதி மாலை அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியின் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மறுநாள் பொழுது விடியும் முன்னரே காந்தியும் மற்ற தலைவர்களும் சிறை செய்யப்பட்டிருந்தனர். காங்கிரஸ் கட்சிக்கே தடை விதிக்கப்பட்டது.

நாடு முழுவதிலும் எதிர்ப்பு வெடித்தெழுந்தது. அங்கும் இங்குமாகச் சில பிரதேசங்கள் சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டன. தொழிற்சாலைகளின் இயக்கம் நின்று போயிற்று. தலைவர்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள், கூட்டம் கூட்டமாகக் கடைத்தெருக்களிலிருந்தும், தொழிற்சாலைகளிலிருந்தும், கிராமங்களிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் வெளியேறிய வண்ணம் இருந்தனர், இக்கூட்டங்களின் மீது பல இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதில் முதல் சில நாட்களுள்ளாகவே அறு நூறு பேர் கொல்லப்பட்டார்கள். பின்னால் ஆகஸ்டு இயக்கம் என்று பெயர் பெற்ற இந்தப் புரட்சியின் விளைவாக இந்திய — பர்மா எல்லையில் ஜப்பானுக்கு எதிராகப் போர் நடத்திக் கொண்டிருந்த துருப்புக்களுக்கு சப்ளை தடைப்பட, அவை கிட்டத்தட்டச் செய



ராஜாஜி
வாழ்க்கை
வரலாறு — II

ராஜ்மோகன் காந்தி

விழுந்து ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுப் போயிற்று.

சிப்பாய்க் கலகம் என்பதாக அழைக்கப் படுகிற 1857 எழுச்சிக்குப் பிறகு பிரிட்டிஷ் ஆட்சி, இந்த 1942 மக்கள் புரட்சியின் போது தான் மீண்டும் மிகப் பெரிய ஆபத்தைச் சந் தித்தது. இந்த இயக்கத்தில் பங்கேற்ற பலர் அஹிம்சா மார்க்கத்தைக் கடைப்பிடிக்க வில்லை. அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தில் அஹிம்சைக் கொள்கையைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்பது தெளிவாக்கப்பட்டிருந் தாலும், மஹாத்மாவிற்கு அதனை வலியுறுத் திப் பேசி மக்கள் மனத்தில் பதிய வைப்ப தற்கு அவகாசம் இருக்கவில்லை.

'இந்தப் போராட்டத்தில் மஹாத்மா வன் முறையை அனுமதிக்கிறார்' என்ற பொய் யான செய்தி பல வன்முறைச் செயல்களைத் தூண்டியது. ரயில்கள் கவிழ்க்கப்பட்டன; தந்தி — டெலிஃபோன் இணைப்புக்கள் துண் டிக்கப்பட்டன; காவல் நிலையங்களும் தபால் நிலையங்களும் தீக்கிரையாயின. இதற்கு மறு புறமாக, பிரிட்டிஷ் ஆட்சியின் போலீஸ் படை எத்தனையோ இடங்களில் நிராயுதபாணி களான மக்கள் கூட்டத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. நூற்றுக்கணக்கான சந்தர்ப்பங்களில் தயக்கமின்றித் தடியடிப் பிரயோகம் செய்தது. பத்திரிகைகள் தணிக்கை செய்யப்பட்டதானது பிரிட்டிஷ் அரசுக்கு உதவிகரமாக இருந்தது. ஆனால், பொது மக்களின் வைராக்கிய மௌனம், தலைமறைவாகிவிட்ட புரட்சியாளர்களைக் கண்டுபிடிப்பதை சிரமசாத்தியமாக்கியது. இதனை பிரிட்டிஷ் அதிகாரிகள் "மௌனச் சதி" என்று வர்ணித்தனர். இது இவ்வாறு யினும் ஆகஸ்டு இறுதிக்குள் பிரிட்டிஷார் போராட்டத்தைப் பெருமளவிற்குக் கட்டுப் படுத்திவிட்டனர். இங்கொன்றும் அங் கொன்றுமாய்ச் சிதறலாகச் சில சம்பவங் களே தொடர்ந்தன. நவம்பர் இறுதிக்குள் ஓராயிரத்துக்கும் மேலானவர்கள் கொல்லப் பட்டிருப்பதாக லண்டனில் நாடாளுமன்றத் தில் அதிகார பூர்வமாகத் தெரிவிக்கப்பட் டது; ஆனால், உண்மை எண்ணிக்கை இன் னும் அதிகம் என்பதில் சந்தேகமில்லை. ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தேச பக்தர்கள் சிறைப்படுத்தப்பட்டார்கள். இவர்களில் பலர் யுத்தம் முடியும் வரை சிறைவாசம் அனுபவித்தார்கள். பிரிட்டன் இந்தியாவை விட்டு வெளியேறவில்லை; இந்தியா சுதந்திரம் பெறவில்லை. ஆனால், சுதந்திரமற்ற நிலை யினைத் தான் வெறுப்பதை இந்தியா ஐயத் துக்கிடமின்றி உணர்த்தியிருந்தது.'

பிரிட்டிஷ் அரசு மஹாத்மாவையும், காங் கிரஸ் காரியக் கமிட்டியையும் இருக்கும் இடம் தெரியாமல் செய்திருந்தது. இதனால் தேசிய அரங்கில் ஏற்பட்டிருந்த வெற்றிடத்தைப் பெருமளவுக்கு இட்டு நிரப்பினார் ஸி. ஆர். — காங்கிரஸிலிருந்து விலகிவிட்டிருந்த போதி லும்!

ஜப்பானியத் தாக்குதலை ஆயுதம் தாங்கி

எதிர்க்கவும், இந்தியாவில் நேச நாடுகளின் படைகள் தண்டு இறங்கவும் மஹாத்மா ஒப்புக்கொண்டிருந்தார் என்பதை பிரிட்டிஷ் அரசுக்கு அடிக்கோடிட்டுக் காட்டினார் ஸி. ஆர். பொது மக்களிடமோ அஹிம்சைக் கொள்கையை விட்டு விடாமல் பின்பற்று மாறு வற்புறுத்தினார். "இந்த நாசச் செயல்களால் காந்திஜிக்கு உதவுவதாக யாரேனும் நினைத்துக் கொண்டார்களானால், அவர்கள் தங்களைத் தாங்களே 'ஏமாற்றிக் கொள்கிறார்கள்; மஹாத்மாவுக்குக் குரூரமான முறையில் அவப்பெயரைத் தேடித் தருபவர்களும் ஆகிறார்கள்."

இந்திய விவகார அமைச்சர் அமெரி, காங்கிரஸானது 'நவீன சர்வாதிகாரிகளைப் போல்' ஒரு திடீர்ப் புரட்சி செய்து, ஆட்சியைக் கைப்பற்ற முயன்றதாகக் குற்றம் சாட்டினார். அன்றையச் சூழலில் இத்தகைய தாக்குதல்களை ராஜாஜி மட்டுமே சந்தித்து மறுக்கவும் முடிந்தது. அமெரியின் இந்தக் குற்றச்சாட்டு ஒரு 'பச்சைப் பொய்' என்றார்.

அமெரியின் உதவியாளரான டெவான்ஷைர் கோமான் இந்தியா விஷயத்தில் முன்னேற்றம் எதும் ஏற்படாததற்குக் காரணம் திட்டவட்டமான யோசனைகளுடன் யாரும் பிரிட்டிஷ் அரசை அணுகாததுதான் என்று லண்டனில் பிரபுக்கள் சபையில் கூறிய போது, ஸி. ஆர். உடனே ஒரு புதிய திட்டத்தைத் தயாரித்து அளித்தார். சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்பட அக்கறை மிக்க பிரிட்டிஷார் அடங்கிய கமிட்டி ஒன்று, ஸி. ஆரை பிரிட்டனுக்கு அழைக்குமாறு அயல் விவகார அமைச்சரைக் கேட்டுக்கொண்டது.

ஆனால் சமீபத்திய கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களை ஆட்சி அமைக்குமாறு அழைப்பதையோ, ஸி. ஆரை பிரிட்டனுக்குள் அனுமதிப்பதையோ ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் பிரிட்டிஷ் அரசு இருக்கவில்லை.

அது மட்டுமின்றி, காந்தியைச் சிறையில் சந்திப்பதற்கேஸி. ஆருக்கு அனுமதி வழங்க மறுத்தார் வைஸ்ராய். டெல்லியில் லின்லித்கோவைச் சந்தித்தார் ஸி. ஆர். தமது திட்டத்தால் விளையக் கூடிய சமரசத்தை ஏற்க முன்பு மகாத்மா மறுத்த போதிலும் இப்போது தயாராக இருக்கலாம் என்று தெரிவித்தார். மேலும், 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் பெயரால் நடக்கும் வன்முறைகளைக் கண்டிக்க காந்தி தமக்கு அதிகாரம் வழங்கக் கூடும் என்றும் வாதிட்டார். லின்லித்கோவும் ஸி. ஆரும் ஐம்பது நிமிடங்கள் பேசினார்கள். ஆனால் லின்லித்கோவின் பதில் ஒரு உறுதியான கைவிரிப்பாகவே இருந்தது. மகாத்மாவைச் சந்திக்க அனுமதி மறுத்த அவரிடம் "உங்கள் முடிவு தவறானது" என்றார்ஸி. ஆர்.

(தொடரும்)

தமிழாக்கம்: **சிதாரவி.**

நெஞ்சை உருக்கும் உண்மைக் கதை

அடுத்த இதழில்......

பத்மநாபன் சாகவில்லை

ஓர் அரிய வாய்ப்பு
ஜோதிடம்
தபாலில் கற்கலாம்

தம்முடைய முப்பதாண்டுகளுக்கும் மேலான ஜோதிட அநுபவமும் பரம்பரைக் கலைஞானமும், பலருக்கும் பயன்படும் முறையில் தபால் மூலம் ஜோதிடம் கற்பிக்க **ஜோதிடக்கலாநிதி டாக்டர் கே. என். சரஸ்வதி B.A, M.Ed D.Litt, (Astrological Science) (USA)** அவர்கள் ஓர் எளிய முறையை உருவாக்கியிருக்கிறார்.

இவர் ஜோதிட சக்கரவர்த்தியாக விளங்கிய **பிரம்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரி**களின் சிஷ்யையும் புதல்வியும் ஆவார்.

மாதம் ஒன்றுக்கு 36 பக்கம் அச்சடித்த பாடங்கள் வீதம் 10 மாதங்கள் பாடங்கள் தபால் மூலம் அனுப்பப் பெறும்.

10 மாத முடிவில் **"கடலங்குடி ஜோதிட ஆராய்ச்சி மையம்"** என்ற ஆராய்ச்சி அமைப்பின் சார்பில் சான்றிதழ் வழங்கப்படும்.

முதல் பாடம் ஏப்ரல் 86 முதல் வாரம் அனுப்பப்படும்

அட்மிஷன் பாரங்களுக்கும் மற்ற விவரங்களுக்கும் ரூ 2/50 M.O. செய்யவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

KADALANGUDI ASTROLOGICAL RESEARCH CENTRE

38, Natesa Iyer Street, T. Nagar, Madras-600 017.

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்
திருச்செந்தூர் — 628 215.

செந்திலாண்டவருக்குக் கோடி அர்ச்சனை



அறுபடை வீடுகளில் தனிச் சிறப்புற்று விளங்கும் திருச்செந்திலம் பதியில் வீற்றிருக்கும் செந்திலாண்டவருக்கு நாட்டு நலன் மற்றும் உலக அமைதியை முன்னிட்டுக் கோடி அர்ச்சனை செய்வதாக முடிவு செய்யப்பட்டு, 12.2.1986 முதல் கோடி அர்ச்சனை துவங்கித் தற்போது தினமும் நடந்துகொண்டு வருகிறது.

மேற்படி அர்ச்சனையில் சஹஸ்ரநாம அர்ச்சனை செய்ய விரும்பும் பக்தர்கள் அர்ச்சனை ஒன்றுக்கு ரூ. 25/— வீதம், மணியார்டரா கவோ, அல்லது வங்கி டிராப்ட் ஆகவோ, "நிர்வாக அதிகாரி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி அன்புடன் வேண்டு கிறோம். தொகையுடன் உபயதாரரின் பெயர், மற்றும் நட்சத்திரம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். தொகை கிடைத்தவுடன், அர்ச்சனை செய்து பிரசாதத்துடன் தொகைக்கான அர்ச்சனைச் சீட்டையும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

ஒரு நாள் அர்ச்சனை 60,000 நாமாவளிகள் செய்ய விரும்புகிறவர்கள் மொத்த மாக ரூ. 1500/— செலுத்தினால் அன்று முழுவதும் செலுத்துபவர் பெயரில் அர்ச்சனை செய்யப்படும். ஒருலட்சம் அர்ச்சனை நாமாவளிகள் செய்ய விரும்புகிறவர்கள் ரூ. 2500/— செலுத்த வேண்டும்.

பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு மூலவருக்குச் செய்விக்கப்படும் கோடி அர்ச்சனையில் அனைவரும் பங்கு கொண்டு அர்ச்சனை செய்வித்துச் செந்திலாண்டவர் அருள் பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

கே. நந்தகோபால்,	எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன், எம். எல். ஏ.,
துணை ஆணையர்/நிர்வாக அதிகாரி.	தக்கார்.

சித்தரஞ்சனி

35. நாகபாணனின் பிரமை!

பரமகோபமையும் தன்னைப் பார்த்தாலே நடுங்கிக் கொண்டிருந்தவனுமான காஷ்டானன் தன்னை விலகி நிற்கும்படி அதிகார தோரணையில் கட்டளையிட்டதைக் கண்ட நாகபாணன் அதிர்ச்சியின் எல்லையை அடைந்ததன்றி, தான் நின்ற இடத்தைவிட்டு இம்மிகூட நகராமல் காஷ்டானனை உற்று நோக்கி, "உனக்குப் பைத்தியம் ஏதுமில்லையே?" என்று வினவவும் செய்தான் ஏளனம் நிரம்பிய குரலில்.

காஷ்டானன் அந்த ஏளனத்தைப் பற்றிச் சிறிதும் கவலைப்பட்டதாகவோ, நாகபாணனைக் கண்டு அஞ்சியதாகவோ தெரியவில்லை. ஆகவே மிக நிதானமும் கண்டிப்பும் நிறைந்த குரலில், "பைத்தியம் எனக்கில்லை. உங்களுக்கும் இருக்கக் கூடாதென்று எண்ணுகிறேன். தவிர உங்களுக்கு ஓரளவு நன்றியறிவும் நாகரீகமும்கூட இருப்பதால் தவறில்லை" என்று பேசினான்.

நாகபாணன் நிதானத்தை மெல்ல இழக்கலானான். "நன்றியறிவா! நாகரீகமா! என்ன உளறுகிறாய்?" என்று வினவினான் நாகபாணன்.

அப்பொழுதும் நிதானத்தை இழக்காமலே பேசிய காஷ்டானன் "நீங்கள் தோல்வியுற்ற பிறகு உங்களைச் சாதவாகனர் சிறை செய்திருக்கலாம். கொன்றுகூட இருக்கலாம். ஆனால் ஆயுதமிழந்து துர்ப்பலமாகிவிட்ட எதிரியைக் கண்ணியமாக நடத்தினார். சுதந்திரமாகப் போகவும் அனுமதித்தார். அதற்கு உங்களுக்குச் சிறிது நன்றியிருக்கலாமென்று நினைத்தேன். இதோ நாங்கள் கொண்டு வந்திருக்கும் சடலம் தங்கள் படைத் தலைவர் க்ஷத்ரபருடையது. அவரது கடைசி வேண்டுகோளின்படி அவரை இங்கு அடக்கம் செய்ய வந்திருக்கிறோம். அதைத் தடை செய்யாதிருப்பதுதான் நாகரீகம். அது தங்களுக்கு இருப்பதாக நம்பித்தான் சாதவாகனர் எங்களை இங்கு அனுப்பியிருக்கிறார். உங்களுக்காகப் பிசாசாக நடித்தவளும் சாதவாகன மகிஷியுமான சித்தரஞ்சனி தனது வளர்ப்புத் தந்தையின் இஷ்டத்தை நிறைவேற்ற வந்திருக்கிறார். இவற்றையெல்லாம் தாங்கள் சிந்திப்பது நல்லது" என்று புத்தி சொல்லும் முறையில் பேசினான்.

காஷ்டானன் அறிவுரைகளை வழங்க வழங்க நாகபாணன் சினம் உச்ச நிலையை அடைந்ததால், "காஷ்டானனே! நீ பேசுவது யாருடன் என்று புரிந்து கொண்டு பேசுவது நல்லது. இந்தக் கோட்டை இன்னும் என் வசம் இருக்கிறது" என்று சுட்டிக்காட்டினான்.

"அதனால்?" காஷ்டானன் கேட்டான்.

"நான் இஷ்டப்பட்டாலொழிய இந்தச் சடலத்தை இங்கு அடக்கம் செய்ய முடியாது" என்றான் நாகபாணன்.

"அப்படியானால் உங்களை இங்கிருந்து வெளியேற்றிய பிறகு க்ஷத்ரபர் சடலத்தை அடக்கம் செய்கிறேன். அதுவரை இதைப் பழைய வழக்கப்படி தைலக்காப்பிட்டு வைக்கிறோம்" என்று கூறிவிட்டு, "மகாராணி திரும்புங்கள். வீரர்களே திரும்புங்கள் மீண்டும் எதிர்க்கரைக்கு" என்று உத்தரவிட்டுத் தானும் நதிக்கரையை நோக்கித் திரும்பினான்.

க்ஷத்ரபர் சடலத்தைத் தாங்கிய நால்வரும் காஷ்டானன் உத்தரவுப்படி திரும்ப முயன்றனர். அந்தச் சமயத்தில் மகாக்ஷத்ரபர் முற்றும் எதிர்பாராத நிகழ்ச்சியொன்று ஏற்பட்டது. நான்கு படகுகளில் யவன வீரர்களை அழைத்துக்கொண்டு யவனர் தலைவன் அஞ்சன்வேல் கோட்டைத் துறையில் வந்து இறங்கினான். தனக்குப் பலம் வலுத்துவிட்டதைக் கண்ட நாகபாணன் "காஷ்டானனே! ஒருவிதத்தில் எனது நாகரீகத்தைக் காட்டுகிறேன். நீயும்

சாண்டில்யன்



உன் வீரர்களும் திரும்பிச் செல்லலாம். க்ஷத்ரபன் சடலத்தைக் கீழே வைத்துவிட்டுச் செல்லுங்கள். அதை நான் அடக்கம் செய்கிறேன்'' என்று கூறினான் தைரியம் சொற்களில் உதிர்க்க.

அதுவரை ஏதும் பேசாமல் மௌனமாயிருந்த சித்ராஞ்சனி தனது முக்காட்டை நீக்கி, ''நாகபாணா! உன் பாவக் கரங்களால் என் தந்தைக்குச் சமாதி வேண்டாம். என்னை அவர் வளர்த்ததற்கு என் கையால் நானே அவரை அடக்கம் செய்கிறேன்'' என்று கூறிக் கனல் கக்கிய விழிகளால் நாகபாணனை நோக்கினாள்.

அவளைப் பற்றிச் சிறிதும் அஞ்சாத நாகபாணன், ''உன்னைத் திரும்பி அனுப்பப் போவதாக யார் சொன்னது?'' என்று வினவினான்.

''பெண்ணை உபயோகப்படுத்தி இங்கு வெற்றி சம்பாதிக்க முயன்ற வீரனென்று உன்னை அறிவேன். ஆனால் இந்த மாதிரி துக்க சமயத்தில் வீரத்தை ஓர் அபலையிடம் காட்டும் கயவனென்று உன்னை நான் இதுவரை நினைக்கவில்லை. உன்னால் ஆனதைச்



செய்" என்று சீறிவிட்டு, "காஷ்டானரே! வீரர்களே! வாருங்கள் என்னுடன்" என்று உத்தரவிட்டுத் திரும்பினான்.

"அவளை நகரவிடாதீர்கள்" என்று நாகபாணன் அங்கு வந்துவிட்ட யவனர் தலைவனுக்கு உத்தரவிட்டான்.

யவனர் தலைவனின் முகத்தில் தெரிந்தது அதிர்ச்சியா வியப்பா என்று புரியவில்லை நாகபாணனுக்கு. தான் உத்தரவிட்ட பிறகும் யவனனோ அவனது வீரர்களோ சற்றும் அசையாமல் நிற்பது மட்டும் புரிந்ததால் "ஏன் நிற்கிறீர்கள்? நான் இட்ட உத்தரவு காதில் விழவில்லை?" என்று சீற்றம் மிகுந்த சொற்களை உதிர்த்தான்.

யவனன் முகத்தில் சற்றுக் குழப்பம் உதயமாயிற்று. "மகாக்ஷத்ரபரே! நாம் தோல்வியுற்றோமா வெற்றி பெற்றோமா?" என்று வினவினான் குழப்பம் குரலில் ஒலிக்க.

"ஏன்? அதிலும் சந்தேகமிருக்கிறதா?" என்று கேட்டான் நாகபாணன்.

"இங்கு வரும்வரையில் இல்லை."

"இங்கு வந்த பிறகு?"

"சந்தேகம் வந்துவிட்டது."

"என்ன சந்தேகம்?"

"யார் உத்தரவை நிறைவேற்றுவது என்று தெரியவில்லை."

"இங்கு என்னைத் தவிர உத்தரவிட வேறு யார் இருக்கிறார்கள்?" என்று சீறினான் நாகபாணன்.

"இங்கு இல்லை...." என்று இழுத்தான் யவனன்.

"வேறு எங்கு இருக்கிறார்கள்?"

"அக்கரையில்....." இதைச் சொன்ன யவனன் "மகாக்ஷத்ரபரே! என்னை இங்கு அனுப்பியது சாதவாகனர். நம் இருவர் படைகளையும் முறியடித்த மகாவீரன்" என்றும் சொன்னான்.

நாகபாணன் சிறிது குழம்பினான். "என்ன உத்தரவிட்டான் சாதவாகனன்?" என்று கேட்டான் சினம் சொற்களில் கொந்தளிக்க.

"நமது படைத் தலைவர், இந்த க்ஷத்ரபர், இவர் உடலை அடக்கம் செய்யத் தடை யாராவது செய்தால் அவர்களைச் சிறை செய்து கொண்டு வருமாறும், இந்த மகாராணிக்கு யாராவது தீங்கு செய்ய முயன்றால் அவர்களைக் கொன்று விடுமாறும் கௌதமிபுத்ரர் உத்தரவிட்டிருக்கிறார்...." என்று இழுத்தான் யவனன்.

"உத்தரவை நிறைவேற்றவிட்டால்? இங்கு வந்திருக்கும் இந்த எனது அடிமை, புது மகாராணியை நாம் சிறை செய்து இங்கு வைத்துக்கொண்டால்?" என்று நாகபாணன் கேட்டான். மேலும் சொன்னான்: "யவனர் தலைவரே! இது நமக்கு நல்ல சமயம். சமரில் எதுவும் நியாயம். தானாக வந்த இவளையும் இந்தக் கோழை காஷ்டானனையும் நாம் சிறை செய்து எதிரியுடன் சமரசம் பேசினால்...?"

வார்த்தையை முடிக்கவில்லை மகாக்ஷத்ரபனான நாகபாணன். இடி இடி என்று பெரிதாக நகைத்தான் யவனர் படைத் தலைவன். "நாகபாணரே! உம்மைப் புத்திசாலியென்று நினைத்தேன். எதிரிகளை எடை போடக்கூடிய சாமர்த்தியசாலியென்று நினைத்தேன். தோல்வி உமது புத்தியை மழுங்க அடித்துவிட்டது" என்று யவனன் கூறினான் நகைப்பின் ஊடே. பிறகு நாகபாணனைக் கவனிக்காமல், "சாதவாகனர் படைத் தலைவரே! நீங்கள் க்ஷத்ரபரை அடக்கம் செய்யுங்கள். மகாராணி! மகாக்ஷத்ரபரின் அபராதத்தை மன்னித்துவிடுங்கள்" என்று காஷ்டானனையும் சித்ராஞ்சனியையும் நோக்கிக் கூறினான்.

''உம் சடலத்தை எடுத்து வாருங்கள்'' என்று சடலம் தாங்கிய வீரர்களுக்கும் உத்தரவிட்டுக் கோட்டைப் பகுதியை நோக்கி நடக்க முற்பட்டான்.

''நில் யவனு!'' என்று ஏக வசனத்தில் பேசிய நாகபாணன், ''இங்கு எனது உத்தரவின்றி எதுவும் நடக்க முடியாது. இந்தக் கோட்டை இன்னும் என்வசத்தில் இருக்கிறது'' என்று சீறி, ''டேய்! யாரங்கே?'' என்று கோட்டை மாளிகைப் புறத்தை நோக்கிக் கூவினான். அடுத்த விநாடி யவன வீரர்களின் பிடியில் இருந்தான். ''மகா க்ஷத்ரபரே! உமது படையில் மீதியுள்ள பகுதியும் எனது படையின் பாதியும் சாதவாகனரின் பெரும் படையிடம் சிக்கியிருக்கிறது. இங்கு ஏதாவது முறைகேடாக நடந்தால் அந்தப் படைகளை அழித்துவிடுவதாகச் சாதவாகனர் சொல்லச் சொன்னார்'' என்ற ஒரு பெரிய அதிர் வெடியை எடுத்து வீசினான் யவனர் தலைவன். ''பேசாமல் வாரும். உமது பிடிவாதத்தால் உமது படைகளைக் காவு கொடுப்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. எனது யவனர்கள் அழிவதை நான் விரும்பவில்லை'' என்று அதிகாரத்துடன் கூறிவிட்டு நடந்தான். காஷ்டானனும் சடலத்தைத் தாங்கியவர்களும் சித்தரஞ்சனியும் யவனனைத் தொடர்ந்தார்கள்.

சித்தரஞ்சனி தனது வளர்ப்புத் தந்தையின் சடலத்தைக் கோட்டை நந்தவனத்தில் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தாள். வீரர்கள் தோண்டிய குழியில் சடலம் இறக்கப்பட்ட பிறகு சித்தரஞ்சனி தனது மடியிலிருந்து பிடி அரிசியை எடுத்து அதன் மீது தூவினாள். காஷ்டானன் வீரர்கள் ஆயுதங்களைத் தாழ்த்திக் காலமான தலைவருக்கு அஞ்சலி செலுத்தினார்கள். யவனனும் பழைய தலைவனுக்குத் தலைவணங்கினான்.

அடுத்து சித்தரஞ்சனி கண்களில் நீரை உகுத்தவண்ணம் ஆற்றங்கரையை நோக்கி நடந்தாள். காஷ்டானன் அவளைப் பின் தொடரவில்லை யவனனும் நின்ற இடத்திலேயே நின்றான்.

''ஏன் நிற்கிறீர்கள்?'' என்று சீறினான் நாகபாணன்.

''இன்னும் ஒரு விஷயம் அறிந்து வரச் சொன்னார் சாதவாகனர்'' என்றான் காஷ்டானன்.

''என்னிடமும் சொன்னார்'' என்றான் யவனன்.

''இன்னும் எதை அறிய வேண்டும்?'' என்று வெறுப்பும் கோபமும் கலந்த குரலில் கேட்டான் நாகபாணன்.

காஷ்டானன் தேவையை மெதுவாகச் சொன்னான். நாகபாணன் முகம் மிதமிஞ்சிய திகிலாலும் அதிர்ச்சியாலும் பிரமையை அடைந்து கல்லெனச் சமைந்து நின்றுவிட்டான் பல விநாடிகள். ''இதைவிடச் சாதவாகனன் என்னைக் கொன்று போடலாமே'' என்று வெறுப்புடன் கூறினான்.

(அடுத்த இதழில் முடியும்)

மேகங்களுக்குப் பின்னால் ஒரு வானவில்

"அவர் இப்படித்தான் ப்ரதீப்.... நானும் எவ்வளவோ ட்ரை பண்ணிப் பார்த்துட்டேன். என்னோட ஹஸ்பண்டை சேஞ்ச் பண்ணவே முடியலே....."

"வாசனா! கணவனை மாத்த முடியலேன்னா, கணவனையே மாத்திடலாமே.... ஐ மீன்.... சேஞ்ச் யுவர் ஹஸ்பண்ட்."

ப்ரதீப் உரக்கச் சிரித்துவிட்டு, பின்னால் திரும்பி, பில்லியனில் அமர்ந்திருந்த வாசனாவைப் பார்த்துக் கண்ணடித்தான். வாசனா சோகையாகப் புன்னகைத்து,

"அது அவ்ளோ ஈஸியா ப்ரதீப்?" என்று கேட்டாள்.

"வொய் நாட் வாசனா? நீங்களும் உங்க கணவரும் ஒரு.... ம்.... மேட்ச் இல்லாத மாதிரி எனக்குத் தெரியறது. நீங்களும் அவரும் லவ் மேரஜா?"

"ஒரு எழவும் இல்லே....." என்று வாசனா இடக்கை விரல்களால் தன் நெற்றியில் அடித்துக்கொண்டாள். தொடர்ந்து, "என் க்ளாஸ் மேட் ஒருத்தியோட மேரேஜ் ஆல்பம் கொண்டு வந்து எங்கம்மா எங்கிட்டே காட்டினாள். அதுலே ஏதோ ஒரு கூட்டத்துலே இவர் இருந்துருக்கார். 'இதாண்டி ஒனக்குப் பார்த்திருக்கிற மாப்பிள்ளை'ன்னு எங்கம்மா வழிஞ்சா... அவர்களுக்கும் இவர் 'ப்ரின்ஸ் ஆஃப் வேல்ஸ்'ன்னு நெனைப்பு.... நானும் ஏதோ சரின்னுட்டேன். எதுக்கு ப்ரதீப் இப்போ பழசெல்லாம்?"

"ஐம் ஸாரி வாசனா.... ஒரு சுப முகூர்த்தத்துலே உங்களோட சுகங்களை நீங்க-இழந்துட்டீங்க.... இங்க பாருங்க.... ஆட்டோவை எப்படித் திருப்பறான்.... ராஸ்கல்...."

ப்ரதீப் ப்ரேக்கை மிதிக்க, அவன் ஸ்கூட்டர் சிணுங்கியது. அந்த நிமிஷத்தில்

"தோ பாருங்கோ... நா ப்ரதீப் கூட போறேன்... நீங்க மளமளன்னு வந்து சேருங்கோ..." என்று வாசனா கணவரின் பதிலுக்குக் காத்திராமல் ப்ரதீப்புடன் ஸ்கூட்டரில் கடுகிப் பறந்தாள்.

நிலை குலைந்தது. வாசனாவின் வலக்கரம் ப்ரதீப்பின் தோளைப் பற்ற, அவள் கன்னம் அந்த அயல் ஆடவனின் முகத்தோடு உரசியது.

"ஐம் ஸாரி...." என்ற ப்ரதீப் ஸ்கூட்டரை அமைதிப்படுத்தி, நிலைப்படுத்தினான்.

"பரவாயில்லையே... இந்நேரம் என்னோட ஹஸ்பண்டா இருந்தா பயத்துலே ஸ்கூட்டரைக் கீழே போட்டிருப்பார். பாருங்களேன், ஆறு மணிக்கு ரிஸப்ஷன்.... ரிஸப்ஷன்னு காத்தாலேந்து அடிச்சுக்கறேன். மைத்ரேயி, 'நாலு மணிக்கே வந்துருடி'ன்னு அடம் பிடிச்சா. இவர் ஸ்கூட்டர் மக்கர் பண்ணிடுத்து.... சனியன்...."

"வாசனா, ஸ்கூட்டர்-பெண்... ரெண்டுத்துக்குமே ஒடம்பு ரொம்ப முக்கியம்" என்று ப்ரதீப் அநாவசியமாகச் சிரித்தான்.

ரிஸப்ஷனுக்குப் போகும் வழியில் நடராஜனின் ஸ்கூட்டர் மக்கர் செய்தது. வள்ளுவர் கோட்டத்துக்கு எதிரே வண்டி நின்றது. வாசனா இன்னமும் உட்கார்ந்திருக்க, நடராஜன் ஸ்கூட்டரைத் திரும்பத் திரும்ப உதைத்தான்.

"என்ன லேட்டாகுமா? ஏற்கெனவே நாம லேட்டு...." என்று வாசனா முறைத்தாள். கடிகாரத்தைப் பார்த்தாள். மணிக்கட்டில் மழைத் துளிகள் விழ ஆரம்பித்தன. வாசனா கர்ச்சீப்பால் நெற்றியை ஒற்றினாள். புடவை கொசுவங்களை நீவி விட்டாள். இங்க் நீலத்தில் உடல், ஆரஞ்சு பார்டர் போட்ட பட்டு உடுத்தியிருந்தாள்.

புடவை கட்டிக் கொள்ளும் முறைகள் பற்றி வாசனா ஒரு வகுப்பே நடத்தலாம். சில மணி நேரங்கள் செலவிட்டுச் செய்த சிகை அலங்காரம். ஒரு பெண்ணின் இயற்கை அழகை, ஒப்பனையின் சாகஸங்களும், நேர்த்தியும் எவ்வளவு வசீகரம் மிகுந்ததாக்குகின்றன என்பதற்கு வாசனா ஓர் எடுத்துக்காட்டு.

மழைத் துளிகள் இப்போது அதிகரித்தன. வலுத்தன. வாசனா சாலைகளை ஒருமுறை ஸர்வே செய்தாள். சிக்னலில் வண்டிகள் அனைத்தும் காத்துக்கொண்டிருந்தன. இல்லை, வாசனாவின் அழகில் லயித்து வண்டிகள் அனைத்தும் நின்றுவிட்டன!

வாசனா, நடராஜனைப் பார்த்தாள். வியர்க்க, வியர்க்க ஸ்கூட்டரை உதைத்துக்

கொண்டிருந்தான்.

'ஏர்லாக்கோ,...ஏதோ ஒண்ணும்பேளே... அதுதானேன்னு பாருங்கோ' என்று கணவருக்குக் கட்டளையிட்டாள்.

நடராஜன் அமைதியாக, ''சரியாயிடும்...'' என்று டூல் பாக்ஸிலிருந்து அழுக்குத் துணி மூட்டை ஒன்றை எடுத்தான். ஒருகணம் நிமிர்ந்து, சென்னைக் காற்றை உள்ளிழுத்தான்.

''வானவில் பாரு வாசனு....'' என்றான். மென்மையான கதிரொளி வாசனுவின் முகத்தைத் தொட்டுப் பார்த்தது.

''போறும்.... நான் என்ன சின்னப் பாப்பாவா? வானவில்லாம்.... வானவில்லு'' என்று சிதறினாள்.

''நெஜம்மா வாசனு. உனக்குப் பின்னாடி பாரு வானவில்....'' என்று நடராஜன் நிதானமாகக் கார்புரேட்டரைக் கழற்ற ஆரம்பித்தான்.

''எனக்கு வெறும் மேகந்தான் தெரியறது....'' என்று அவள் கணவரைப் பார்வையால் சுட்டாள்.


''ஸாரி வாசனு..... இதை யார் எதிர்பார்த்தா? கார்த்தாலே நான் மாங்காடு வரைக்கும் போய்ட்டு வந்தேன். அப்போ ஸ்கூட்டர் ஒழுங்காத்தான் இருந்தது. நீ அந்த மக்கடைகிட்டே போய் நில்லு. ஏன் மழையிலே நனையறே வாசனு?''

கடவுளும், கணவரும் சேர்ந்து தன்னைப் பழி வாங்குவது போல இருந்தது. தவிப்போடும், கோபத்தோடும் கணவரைப் பார்த்தாள். இந்த முப்பத்தாறு வயதுக்கு சற்றும் பொருந்தாத வழுக்கைத் தலை. மழை மேகத்தின் நிறம். அவளுடைய தாழம்பூ நிறத்திற்குப் பொருத்தமா அவர் உடல் நிறம்? தினம் ஷேவ் செய்யப்படும் அந்த முகத்தில் பருக்கள்; அவை ஆற்றிய தழும்புகள். இப்படி அழகில்லாத கணவனைக் கொடுத்து, கடவுள் தன்னைப் பழி வாங்கிவிட்டாரா? வாசனு சீற்றத்துடன், ''நீங்க டாக்டருக்குப் படிச்சதுக்குப் பதிலா, பேசாமல் ஸ்கூட்டர் மெக்கானிசம் படிச்சிருக்கலாம். எம்.பி.பி.எஸ்.ன்னு போர்டு இருக்கு. ரெண்டு பேஷண்ட் வந்தாளா, நேத்திக்கு?''

''நான் எம். ஸி. ஹெச். முடிச்சதும் பாரேன்.''வாசனு....

''நாழியாறது.... கொஞ்சம் எடங் கொடுத்தால் அரட்டை அடிக்காதீங்கோ. எனக்கு ஆத்திரமா வர்றது எழவு....'' என்று கத்தினாள். சாலையில் போகும் ஆட்டோவைக் கூப்பிட்டாள்.

''மோபரீஸ் ரோடா.... நீ வேறம்மா.... ஜெமினியாண்டப்ரொசஷன்....எந்தவண்டியும் போவாது. இப்பத்தான் ஒரு சவாரியை எல்.ஐ.ஸி. யாண்ட உட்டுட்டு வர்றேன். ட்ராபிக் சார்ஜண்டு அல்லா வண்டியும் திரு



வான்மியூர் சுத்தித்தான் மவுண்ட் ரோடு போனுங்கறான்.'' என்று ஆட்டோ அவனை நிராகரித்தான்.

''என்ன வாசனு! ரிஸப்ஷனுக்குப் போகலே? ஹல்லோ நடராஜன்.... என்ன வண்டி ப்ரேக்டவுன்னு? மே ஐ ஹெல்ப் யூ?''

ப்ரதீப் வாசனுவின் அருகில் ஸ்கூட்டரை நிறுத்தினான். அவனுடைய ஆஃப்டர்–ஷேவ் லோஷனின் நெடி அவள் நாசியைத் தாக்கியது சுகமாக.

''தோ பாருங்கோ.... நா ப்ரதீப்கூட போறேன். நீங்க மளமளன்னு வந்து சேருங்கோ. வண்டியை எங்கேயாவது விட்டுட்டு, பஸ்ஸுலே வந்துடுங்கோ. கரெக்டா சோத்துக்கு வந்து நின்னுட்டு எம் மானத்தை வாங்கிடாதீங்கோ. ப்ரசன்டேஷனை நான் எடுத்துண்டு போறேன். கம். ப்ரதீப்....'' என்று வாசனு கணவரின் பதிலுக்குக் காத்திராமல் ப்ரதீப்புடன் ஸ்கூட்டரில் கடுகிப் பறந்தாள். மழை மேகங்கள் கலைய ஆரம்பித்திருந்தன.

பாகவதர் 'பிந்துமாலினி'யைத் துவம்சம் செய்ய ஆரம்பித்திருந்தார். இந்த ரிஸப்ஷன் கச்சேரிக்காக நாகர்கோவிலிலிருந்து வந்திருந்தார்.

மைத்ரேயியும், அவளின் புதிய கணவரும் அமர்ந்து, எழுந்து, அமர்ந்து எழுந்து பரிசுகளையும் வணக்கங்களையும் வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

''ஐம் வெரி ஸாரிடி..... என்னோட ஹஸ்பண்டாலே லேட்டாயிடுத்து.... இது, அவா எடுத்த ஸாரியா மைத்ரேயி?'' என்று வாசனு தோழியின் கரம் பற்றினாள்.

''ஷ்.... இதான் வாசனு....'' என்று மைத்ரேயி, கணவரின் தோளில் இடித்தாள்.

வசீகரன் என்ற பெயருக்கு ஏற்ப, மைத்ரேயியின் கணவன் வசீகரமாக இருந்தான். வாசனுவுக்கு அவனை உடனேயே தன் கணவருடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றியது. ஆண் கூட இத்தனை நிறமாக, இத்தனை அழகாக இருக்க முடியுமா! 'மைத்ரேயி, நீ இப்படி ஓர் இளவரசனுக்கெனக் காத்திருந்தேயாடி?'

வாசனுவுக்கு எல்லாமே வெறுமையாகப் பட்டது. காற்றில் கனவுகளை விதைத்து விட்டு, தான் எதற்கோ காத்திருப்பது போல் இருந்தது.

''டேய்..... வசீ.... லக்ஷ்மிக்கு ரொம்ப சீரியஸ்ங்கறாடா டாக்டர்....'' என்று ஒருத்தி வசீகரனிடம் அழுகையாகச் சொல்லி விட்டுப் போனாள்.

''என்னாச்சுடி மைத்? லக்ஷ்மி யாரு?''

''இவரோட அக்கா கொழந்தைடி வாசனு. ஒன்றரை வயசுதான் ஆறது. அதுக்கு மத்தியானத்துலேந்து மூச்சுவிட முடியலே. திடீர்னு.... இவருக்கு லக்ஷ்மிதான் உயிரு....'' என்று மைத்ரேயி கண்ணீரைச் சப்பினாள்.

வசீகரன் மாலைகளைக் கழற்றி எறிந்தான். கோட்டைக் கழற்றி மனைவியிடம் திணித்தான்.

''ஏய் ஹரிணி. டாக்டர் என்ன சொல்றார்? லக்ஷ்மி இப்போ எங்கே?''

''பக்கத்து நர்ஸிங் ஹோம்லே அட்மிட் பண்ணச் சொல்லறார். கொழந்தைக்கு மொகம் பூரா வீங்கிருக்குடா.... நாஸல் டி.பி.ங்கறார்.... நீ, மாமாவைக் கேளு. அவர் தான் டாக்டரோட பேசிண்டிருந்தார்.''

''மாமா!''

''ஒரு எழவும் புரியலேடா... டாக்டர் ஏதோ லங் இடீமாங்கறான். அதான் கொழந்தை மூச்சுவிடச் சிரமப்படறுங்கறான்.... ஜி.எச்.சுக்கு எடுத்துக்கொண்டுபோகச் சொல்றான். நீ எதுக்கும் கேஷ் எங்கிட்ட கொடுத்து வைடா. ஆப்பரேட் பண்ணுவா போலிருக்கு'' என்று பதறினார்.

மைத்ரேயி செய்வது தெரியாமல் நின்று கொண்டிருந்தாள். வாசனு, தன் கணவர் மண்டபத்திற்குள் நுழைவதைப் பார்த்தாள். அவருக்கு இங்கிருந்தபடியே சைகை செய்தாள்.

''ஹலோ மிஸஸ் மைத்ரேயி. ஐம் ஸாரி ஐம் லேட். வாசனு சொல்லியிருப்பா. எங்கே உங்க மிஸ்டரை....?'' என்று நடராஜன் மைத்ரேயியிடம் வினவ, அதற்குள்,

''வசீ, லக்ஷ்மியை எடுத்துக் கொண்டு வந்துருக்கா. ஜி. எச்.சுக்குப் போகப் போறாளாம். வாடா'' என்று வசீகரனின் அம்மா அங்கு வந்தாள்.

''ஏ வாசனு. உன் ஹப்பி ஒரு டாக்டர் தானே. அவரைக் கொழந்தையைப் பார்க்கச் சொன்னு?'' என்று மைத்ரேயி விழிகளில் மலர்களைக் காட்டினாள்.

''பேசாமல் இருடி. அவருக்கு ஸிரிஞ்சுலே நீடிலைப் பொருத்தி இஞ்ஜக்ஷன் போடத் தெரியுமான்னு கேளு. ஜோக் அடிக்காதே... ஹி இஸ் ஆப்டரால் எம்.பி.பி.எஸ்.''

''இரு வாசனு. உன் ஹப்பியைக் கூப்பிடேன். அக்கா ஒரு நிமிஷம்....'' மைத்ரேயி அவசரமாகப்போய், தன் நாத்தனாரிடமிருந்து குழந்தை லக்ஷ்மியைப் பறித்துக் கொண்டு வந்து நடராஜனிடம் நெருங்கினாள்.

குழந்தை, நடராஜனின் கரங்களில் கொள்ளாமல் துடித்தது. நடராஜன் ஜமுக்காள விரிப்பில் அமர்ந்து, குழந்தையை மடியில் கிடத்தி, அதன் முகத்தைப் பார்த்தார்.

''யாரிது?'' என்று வசீகரன் மனைவியைச் சற்று ஆத்திரத்தோடு கேட்டான்.

''வாசனுவோட ஹஸ்பண்ட்.... ஹி இஸ் எ டாக்டர்....'' என்று மைத்ரேயி, புடவைத் தலைப்பால் குழந்தைக்கு வீச ஆரம்பித்தாள்.

குழந்தையின் முகம் உப்பியிருந்தது. மூச்சு விடத்திணறியது. நடராஜன் குனிந்து குழந்தை மூச்சு விடுவதைக் கேட்டார். சங்கீதமாக மூச்சு வந்தது. விசில் சப்தம் போல் இருந்தது.

குழந்தையின் மூக்கை அவர் தொட்டதும் அது அதிகமாக அழ ஆரம்பித்தது. அவர் மடியிலிருந்தும் திமிறியது. புரண்டது. துடித்தது.

''என்னமோ லங் இடீமாங்கறான் ஸார்....

ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 | 10 | 1963



உதிர்வு 25 | 3 | 1985

ஜெ. யோகேந்திரம் அதீர் (அப்பன்)

இழந்துவிட்டோம் எங்கள் முழுமதி சந்திரனை
எங்கள் அருமை "அப்பனை
எம்மையெல்லாம் ஆழாத்துயரில் ஆழ்த்திவிட்டு
சென்றுயோ பாரதனை விட்டு
மறைந்தாயே அப்பனே! மண்ணுலகைவிட்டு
நித்தியம் நினை விளங்கும் அகல் விளக்கே!
இறைவன் பாதத்தில் நீ ஒரு மலராய்
சொர்க்கத்தின் வாசலில் நீஓர் ஒளிவிளக்காய் ஒளிவீசுவாய்
உன்னுடைய ஆத்மா சாந்தி அடைய
இறைவனை இறைஞ்சி நிற்கும்

அன்பு — அப்பா, அம்மா, சகோதரிகள், சகோதரர்கள்,
உற்றோர், உறவினர், நண்பர்கள்.

K. K. Nagar,
Trichirapalli
SOUTH INDIA

Atchuvely South,
Atchuvely
SRI LANKA



நன்மை கருதி ஒரு தந்திரம்

போட்டி : 48

சந்தேகத்துக்கிடமின்றி நன்மை உண்டாகுமெனில் பொய்யும் மெய்யேயாகும் என்கிறது தமிழ் மறை. நீங்கள் அல்லது உங்கள் நண்பர் முடிவான பெரிய நன்மையைக் கருதி ஒரு தந்திரம் செய்திருக்கலாம். அது கண்டது வெற்றியோ தோல்வியோ, சுவையான சம்பவமானால் கீழே வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப்பக்கத்தை முழுமையாகக் கத்திரித்து அனுப்புங்கள். உறையின் மீது, ''நன்மை கருதி ஒரு தந்திரம்'' என்று குறிப்பிடுங்கள். பிரசுரமானால் பரிசு. தவிர ஒருவருக்குக் குலுக்கல் முறையில் வி. ஐ. பி. ஸூட்கேஸ்.

முடிவு தேதி : 14.4.86

ஐந்து ஸூட்கேஸ்களே பாக்கி. ஐந்து போட்டிகளிலும் பங்கேற்று ஒன்றைத் தட்டிக் கொண்டு போகத் தவறாதீர்கள்!

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

என் பெயர் : ....

விலாசம் : ....

....

ஒருத்தன் நாஸல் டீ.பி.ங்கறான்.''

''ப்ளீஸ் கொயட்....'' என்று அவரை அமைதிப்படுத்திய நடராஜன், திரும்பவும் குனிந்து குழந்தை மூச்சு விடும் ஒலியைக் கேட்டார்.

''வாசனா....! கொண்டை ஊசி ஒண்ணு கொடேன்'' நடராஜன் நிமிர்ந்து தம் அழகிய மனைவியைப் பார்த்தார். வாசனாவின் முகம் சீற்றத்தில் சிவக்க அவள்,

''என்னது இது? சீரியஸ்னஸ் தெரியுமா உங்களுக்கு? கொழந்தையை ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு போக அவா பறக்கிறா. எதுக்கு இப்போ கொண்டை ஊசி?''

''ப்ளீஸ் வாசனா.... கொடேன்.''

நடராஜன் தம் மனைவி ஆத்திரத்தோடு நீட்டிய கொண்டை ஊசியைப் பிடித்து, அதன் முனைகளைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டு, ஊசியைக் குழந்தையின் வலது மூக்கினுள் நுழைத்தார். குழந்தை மிதிபட்டது போலத் துடித்தது; திமிறியது. கண்களில் நீர்ப் பெருக்கியது. நடராஜன் அதைப் பொருட்படுத்தாமல், கொண்டை ஊசியின் உதவியால் குழந்தையின் மூக்கிலிருந்து, கறுப்பாக இருந்த ஒன்றை வெளியே எடுத்துக் காட்டினார்.

''இதுதான் ஸார் லங் இடீமா.... நாஸல் டீ.பி. இதான். இதுதான் கொழந்தைக்கு எமனாக இருந்தது. பொம்மையிலேருந்து விசில் பட்டனைப் பிச்சி மூக்குலே போட்டுண்டு இருந்துருக்கு.... அவசரத்துலே அதை யாரும் கவனிக்கலே. இனிமேல் எந்த பயமும் இல்லே. வாசனா.... ஐம் ஸாரி. உன் கொண்டை ஊசி கொஞ்சம் வளைஞ்சுடுத்து.''

''நடராஜன்.... ஐம் க்ரேட்ஃபுல் டு யூ.... லக்ஷ்மி என்னோட கொழந்தை மாதிரி. அதை நீங்க காப்பாத்தியிருக்கீங்க....'' என்று மாப்பிள்ளை வசீகரன், டாக்டர் நடராஜனின் கரங்களைப் பற்றினான்.

''யூ ஆர் எ க்ரேட் டாக்டர்....'' என்று இன்னொருத்தி நடராஜனைப் பாராட்டினாள்.

குழந்தை இப்போது சாந்தமானது. நடராஜனைப் பார்த்துச் சிநேகமாக, வாய் கொள்ளாமல் சிரித்தது. அவர் முகத்தைக் கௌவி விளையாடியது.

''டாக்டர் சார்.... நீங்க தெய்வமாகத்தான் இருக்கணும். எம் பேத்தி உசிரை மீட்டுக் கொடுத்திருக்கேளே..'' என்று வசீகரனின் அன்னை நடராஜனின் கரம் பற்றி உணர்ச்சி பொங்க அழுதாள்.

மைத்ரேயி அவளின் புதிய கணவன், அவன் உறவினர்கள், ரிஸப்ஷனுக்கு வந்திருந்தோர் என்று பலரும் இப்போது நடராஜனைச் சூழ்ந்து கொண்டு பாராட்ட ஆரம்பித்தார்கள். நடராஜன் மென்மையாகப் புன்னகைக்க, வாசனாவுக்கு அந்த முகம் இப்போது உலகத்திலேயே அழகிய முகமாகத் தெரிந்தது.

'வானவில் பாரு வாசனா.'

'எனக்கு வெறும் மேகந்தான் தெரியறது.

அந்த மேகங்களுக்குப் பின்னால் ஒரு தூய வானவில்லையும் தன்னால் தரிசிக்க முடிந்ததை வாசனா உணர்ந்தாள்!

லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத்
தலைவர்களின் படைப்பு—

விஐபி


கன்கார்டு

வந்திறங்குது இப்போது—

இதோ, ஜெட் யுகக் கட்டழகுள்ள
புதிய விஐபி கன்கார்டு! நாகரீக
நரம்போடிய அலாதி ஸ்டைலிங்.
கண்டறியாத வர்ண வகைகள்:
பீச் க்ரீம் (செவ்விள மஞ்சள்),
டெஸர்ட் பிரவுன் (மணற் கபில
நிறம்), மிஸ்ட் க்ரே (பனிச்
சாம்பல்), க்ரீம் சாக்கலேட்,
மேலும் பலப் பல. உட்புறமோ
இடவசதி மிகுதி.

ஓடோடிப் பார்வையிடுவீர்:
அருகிலுள்ள வியாபாரியிடம்...
சொகுசு லக்கேஜ் புதுவரவுகள்.

ஆகாயமெட்டும் எங்கள் அதிநவீனக் கற்பனை.



**தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள்,
வருங்கால யோக வரவுகளோ மேலும் பலப்பல.**

LINTAS VIP M 10 2013 TM

சொர்க்கத்தின் கதவுகள்

லக்ஷ்மி

21

மஞ்சுளாவை ஏற இறங்கப் பார்த்தார் சுவாமிநாதன். உண்மையிலேயே பார்ப்பவர் கவனத்தை இருமுறை சுண்டி இழுக்கும் பெண்தான். கூர்மையான மூக்கின் இடது புறம், சிறிய மூக்குத்தி. காதுகளில் ஒரு சிகப்புக்கல் தோடு. கழுத்தில் மெல்லிய சங்கிலி. இடையில் உடுத்தியிருந்த மஞ்சள் நிற வாயில் சேலையும், ரவிக்கையுமாக, அவளது சிவந்த மேனிக்கு எழில் கூட்டின.

"பயல் இந்தப் பெண்ணைக் கண்டு ஏங்கி விழுந்ததில் ஆச்சரியமே இல்லை," என்று தான் சுவாமிநாதன் கணித்தார். அதேசமயம் மஞ்சுளாவின் குணத்தைப் பற்றி அவருக்கு மெத்த கவலையாக இருந்தது.

அழகான பெண். சாதாரண நிலையிலிருப்பவள். மேல் மட்டத்துப் பையன். கைநிறைய சம்பளம், படிப்பு, எல்லாம் இருப்பதால் வலை போட்டுப் பிடிக்கலாம் என எண்ணும் சூழ்ச்சிக்காரியாக இருந்துவிட்டால்... ஏற்கெனவே ஆத்திரத்தில் குமுறிக் கொண்டிருக்கும் அருணா அவரைக் கிழித்துப் போட்டு விடுவாள்.

டாக்ஸி 'கிர்'ரென்று ஓடிக் கொண்டிருக்க அவர் முதல் நாள் நினைவுகளில் மூழ்கிப் போனார். மஞ்சுளா வரப் போகிறாள் என்றதும், அவருக்கு வேறு எதிலும் மனம் நாட்டம் கொள்ளவில்லை. அஸ்வத், ஜூராகத்தான், செயல்படத் துவங்கி இருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டு விட்டிருந்தார் அவர்.

அருணாவையும், கணேசனையும் அவர் ஒருவராகவே சமாளித்தாக வேண்டும். எதிர்ப்பு முனைத் தாக்குதல்களையும் தாங்கியாக வேண்டும். அன்று தம்பியை அலுவலகத்தில் சந்தித்த பிறகு, அவர் மறுபடியும் எந்தவிதமான தொடர்பும் வைத்துக்கொள்ள விரும்பாமல் இருந்தார்.

"அவனுக்கா உணக்கை இருந்தால், என் வீடு தேடி வந்து விவரம் கேட்கட்டும்., இல்லாவிட்டால் போகட்டும்" என்று கசந்து போயிருந்தார். இப்போது அஸ்வத்தின் திட்டத்தால், அவரே தம்பியின் பங்களாவுக்குள் நுழைய வேண்டும்.

"என்ன செய்யப் போறேள்?" விமலா பயத்துடன் கேட்டபோது, அவர் பெருமூச்செறிந்தார்.

"வேறே வழி. உரலுக்குள் தலையை விட வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. பயப்பட்டால் முடியுமா? சிங்கக் குகைக்குள்ளே போய் மோதிவிட்டு வரேன்" வீரமாக வசனம் பேசியபடி உரக்கச் சிரித்தார் சுவாமிநாதன்.

"வேடிக்கையைப் பார்த்தாயா விமலா. 'இரண்டும் நாம் வளர்த்த குழந்தைகள். ரெண்டு பேர் கல்யாணம் கூட நாம்தான் ஏற்பாடு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுப் போச்சு பார்த்தாயா?"

"ஆனால் ஒண்ணை மறந்துடாதீங்கோ. ஏற்கெனவே முடிச்சு வைச்ச கல்யாணத்தோட முடிச்சு அவிழ்ந்து போகிறதுக்கு முன்னே, அதைச் சீர்செய்யப் பாருங்கோ. இல்லேன்னா நமக்கு ரெட்டை கல்தா கிடைக்கும்." முறுவலுடன் விமலா அவரை வழியனுப்பி வைத்தாள்.

முன்னறை சோபாவினுள் புதையப் புதைய உட்கார்ந்திருந்த கணேசன் கண்ணும், முகமும் சூடேறி ஜிவ்வென்றிருந்தன. அருணா அதுகாறும் ஏற்றி வைத்த 'உரு' அவரை நன்றாகவே மாற்றி இருந்தது.

"நமக்குப் பிறந்ததுன்னு பேரு. கடைசியில் பெரியப்பா குடும்பத்துக்கே வாரிசு மாதிரி ரெண்டுபேரும் நடந்துகொள்கிறார்கள். இதைப் பற்றி, அப்பாங்கற முறையில் ஏதேனும் கேட்டேளா? நான்தான் புலம்பிக்கொண்டே இருக்கேன். என்ன பிரயோஜனம்?" அருணா அரற்றினாள்.

ஐஸ்வர்யாவின் விஷயத்தைக் கேள்விப்பட்டது முதல் கணேசன் அரண்டு போயிருந்தார்.

"காதல், கத்தரிக்காய்னு இந்தப் பெண் குரங்குப் பிடியாய்ப் பிடிவாதம் பிடிச்சது. இப்பொழுது என்ன ஆச்சு? இதற்குத் தூபம் போட்ட உங்கண்ணாவா, இந்தச் சிக்கலை எடுக்கப் போகிறார்? ஐயோ என் சிநேகிதிகள் நடுவில் இந்த விஷயம் தெரிந்தால் எத்தனை அவமானம்? 'கிளப்'ல் எப்படித் தலைகாட்டு

வேன்'' கண்களில் கண்ணீருடன் சுவாமி நாதனைச் சபித்தாள் அருணா.

''அஸ்வத் விஷயமும் அப்படியே ஆகி விட்டால் என்ன செய்வது? இந்த அண்ணா வுக்கு ஏன் இப்படிப் புத்தி போயிற்று? வய தான காலத்தில், அஸ்வத்திற்கு எடுத்துச் சொல்லி மனத்தை மாற்றாமல், வக்காலத் தல்லவா வாங்கிக் கொண்டு வந்தார். மனத் தினுள் எண்ணமிட்டவராய்க் குமுறினார் கணேசன்.

''இனிமேல் பொறுக்க முடியாது. என் வயிற்றெரிச்சல் தீர, உங்கண்ணாவையும், மன்னியையும் ரெண்டு வார்த்தை கேட்டு விட்டு வரணும். புறப்படுங்கோ'' என்று சீறினாள் அருணா.





ஆறரை வயதுப் பையன் வெர்னன் நாளிதழில் இப்படி ஒரு விளம்பரம் கொடுத்திருந்தான்: "என்னுடைய தந்தை சென்ற ஆண்டு காலமாகிவிட்டார். எனக்கு ஓர் அப்பா வேண்டும். அவர் என்னிடமும் என் அம்மாவிடமும் அன்பு செலுத்த வேண்டும்".

132 பதில்கள் வந்தன. அவற்றிலிருந்து ஜான் என்பவரின் கடிதம் தேர்ந்தெடுக்கப்பட்டது. பார்த்த உடனே வெர்னனுக்கு ஜானின் கடிதம் பிடித்துவிட்டது. இருவருக்குமிடையே பல கடிதங்கள், ஃபோன் கால்கள். பிறகு வாரக் கடைசி விடுமுறை நாட்களில் சந்திப்பு. அப்புறத் திருமணம். சேர்ந்த ஓராண்டு திருமண வாழ்க்கையில் கணவனுக்கும் மனைவிக்குமிடையே சில சில்லறைத் தகராறுகள் ஏற்பட்டாலும் மொத்தத்தில் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாகவே இருக்கிறது என்கின்றனர்.

— கலா மூர்த்தி.

ஆதாரம்: சண்டே மார்னிங் போஸ்ட்.

வாயிற்புறக் கேட்டைத் திறந்து கொண்டு யாரோ வருவதுதெரிந்தது. கணேசன் எழுந்து சென்று எட்டிப் பார்த்தார். அண்ணு சுவாமி நாதன் மெல்ல நடந்து வந்து கொண்டிருந் தார்.

"சகுனி வந்தாச்சு" என்று அருணு பற் களைக் கடித்தபடி உள்ளே போகத் திரும்பி ஞள்.

"நீ கேட்க வேண்டிய சந்தர்ப்பம் வீடு தேடியே வருகிறது. உள்ளே போகாதே, நில்லு" என்று கணேசன் மனைவியை வற் புறுத்திஞர்.

"எல்லாரும் செளக்கியம்தானே" முன் புறம் செருப்புக்களைக் களேந்துவிட்டு, அறை யின் தரைமீது போடப்பட்டிருந்த ரத்தினக் கம்பளத்தின் மீது அடி எடுத்து வைத்தார் சுவாமிநாதன். அருணு முகத்தைக் குலுக்கி விட்டு, "அவரவர்கள் இருக்கிற இடத்தில் இருந்தால் சுகம்தான்" என்ருள் இடக்காக.

"உட்காருங்கோ. நானே உங்களேப் பார்க்க வரணும்னு இருந்தேன். நீங்களே வந்தது நல்லதாப் போச்சு," என்று தம்பி சொல்ல வந்ததை ஊகித்தபடி சோபாவின் மெத்தென்ற ஆசனத்தில் அமர்ந்தார் அவர். இந்தச் சொகுசையும் மீறிய ஒரு முள் அவ ரைக் குத்தக் காத்திருக்கிறது போலும்!

"சுருக்கமாகச் சொல்லிவிட்டுப் போயிட றேன். மஞ்சுளா பெங்களூரில் இருந்து வரா ளாம். அதனுல்..."

"எந்த மஞ்சுளா?" அருணு இடைமறித் தாள்.

சுவாமிநாதன் அவளே ஒருமுறை தீர்க்க மாகப் பார்த்தார். "இதோ பாரும்மா அருணு! இதற்குள்ளே உனக்கு அஸ்வத்தோட காதல் விவகாரம் எல்லாம் கட்டாயம் தெரிஞ்சிருக் கும். அப்படி இருக்கும் போது, எந்த மஞ்சு ளான்னு கேட்டால் என்ன சொல்றது? வேறே யாருமில்லே... உன் வருங்கால மரு மகள் மஞ்சுளாதான் வரா..." என்ருர் அழுத்தமாக.

"ரொம்ப அழகுதான்... யார் செஞ்ச ஏற் பாடோ? எல்லாரும் பொண்ணேப் பார்க்க, புறப்பட்டுப் போவார்கள். இங்கே பொண், நம்மைப் பார்க்க வராளோ?" அருணுவின் பேச்சில் ஏளனம் தொனித்தது.

"தனியாகப் புறப்பட்டு வர்ற பொண் ணுக்கு எத்தனே துணிச்சல் இருக்கணும். பலே கைகாரியா இருக்கணும்." கணேசன் ஒத்துப் பாடிஞர்.

"ஒண்ணும் தெரியாத என் பையனேக் கைக்குள்ளே போட்டுக் கொண்டு, வெட்கம் மானமில்லாமல் ரயிலேறி வீடு தேடி வர எத்தனே நெஞ்சழுத்தம் இருக்கணும். இதுக்கு நீங்க வேறே தூது நடக்கணுமா?" அருணு வெடித்தாள்.

சுவாமிநாதன் ஒரு யுத்தத்திற்குத் தயா ராக வந்திருப்பதால், பொறுமையை இழக் காமல் மெளனம் சாதித்தார்.

"ஏன் பேசாமல் இருக்கேள் அண்ணு." கணேசன் வெகுண்டவராய் அவரை உறுத் துப் பார்த்தார்.

"செய்யறதை எல்லாம் செஞ்சாச்சு. இனி வரப்போற மாட்டுப் பொண்ணுக்கு ஆரத்தி எடுக்க மன்னியையே அழைச்சுண்டு வரப் போறேன்னு சொல்ல வந்திருப்பார்" குரோதத்துடன் அருணு கூறியதை அவர் அசட்டை செய்வதுபோல் சிரித்தார்.

"அண்ணு! ஏன் வயிறு பற்றி எரியறது. நீங்க சிரிக்கிறேளே. இது உங்களுக்கே நியா யமா இருக்கா? எங்கள் குடும்பத்து மேல் உங்களுக்கு ஏன் இப்படி ஒரு வஞ்சனே?" கணேசன் பற்களேக் கடித்தார்.

"பேசி முடிச்சாச்சா, இன்னும் பேச ணுமா?" நிதானமாகக் கேட்டார் சுவாமி நாதன்.

ஒருகாலத்தில் சுவாமிநாதனின் முன் கோபம் மிகப் பிரசித்தமாக இருந்தது. "அண்ணு கோவிச்சுப்பான்" என்று தங்கை மாலதி முதல் அம்மா வரை அந்தக் குடும் பமே நடுங்கியது உண்டு. ஆனல் இப்போது பிறரது கோபத்துக்கு அவர் தணிந்து போக வேண்டிய நிலே ஏற்பட்டுவிட்டது. அதுவும், அவரது காரியத்திற்காக அல்ல, மற்றவர் களுக்காக. சுவாமிநாதன் உதட்டைக் கடித் துக் கொண்டார்.

"நாலு பேர் நடுவில் பேச முடியாமல்

தலைகுனியவச்சாச்சு. இனிமேல்என்னபேசற துக்கு?'' பொரிந்துவிட்டு அருணா, சோபாவில் தொப்பென்று விழுந்தாள்.

''இப்பொழுது என்ன நடந்துவிட்டதென்று நீங்கள் எல்லாரும் அலறிண்டிருக்கேள்? அஸ்வத் ஒரு பெண் மேல் ஆசைப்பட்டான். அவளையே கல்யாணம் செய்து கொள்வேன்னு ஆசைப்படறான்...''

''ஆ... ஆசை... அதன் பலனைத்தான், ஐஸ்வர்யா விஷயத்தில் பார்த்தோமே. இப்பொழுது இவனா?'' நொடித்தாள் அருணா. ஆத்திரம் அவள் விழிகளில் வெறியாக மின்னியது.

''அம்மா! அருணா! உனக்கு அந்தஸ்து, பணம் எல்லாம் ரொம்ப முக்கியமாக இருக்கலாம். கிளப் பார்ட்டி, பெரிய மனுஷர்கள் வீடுன்னு உன் மாட்டுப் பெண்ணை மதிப்போடு அழைத்துக் கொண்டு போக முடியலேயேன்னு ஏக்கம் இருக்கலாம். ஆனால், நீ நினைக்கிற மதிப்பு, வெறும் பணத்தைப் பின் பலமாக வைச்சுத்தான்னு நினைவில் வைச்சுக்கோ.''

''ரொம்பப்பேசாதிங்கோ அண்ணா. பணம் இல்லாவிட்டால் எவன் மதிப்பான்? எனக்கு வரப் போற சம்பந்தி, வெறும் வெத்து வேட்டுன்னா எனக்கு என்ன கௌரவம் இருக்கும்? சொல்லுங்கோ?'' தம்பி உறுமினார்.

சுவாமிநாதன் பதில் கூறாமல் தயங்கினார். கௌரவம் என்பது சம்பந்தி வழியாகத்தான் இவனுக்கு வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறானோ? இவனுக்கு என்று சுய கௌரவம் எங்கே போயிற்று?

''கௌரவத்தை, சுயமாகச் சம்பாதிக்கணும் கணேசா! வெறும் பணத்தாலயும், சம்பந்தம் செய்யற இடத்திலேயும் சம்பாதிக்க முடியாது. பெரிய பணக்கார சம்பந்தி வீட்டில் பெண்ணை எடுத்துவிட்டு, அந்தச் சம்பந்திகிட்ட, ''அப்பாயின்ட்மெண்ட்'' கேட்டுக் கொண்டு காப்பி சாப்பிடறது தேவலையா? இல்லே, சாதாரணகுடும்பத்தில், மகனுக்காக நாமே பெருந்தன்மையோட நாட்டுப் பெண்ணாக, ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்கிறது தேவலையா? அதிலயும், அவன் ஆசைப்பட்ட பெண்ணுக்கு, ஆதரவு தெரிவிச்சு அவன் மனசை சந்தோஷப்படுத்தினா எவ்வளவு நல்லது?'' சுவாமிநாதன் இதமான குரலில் கூறிவிட்டு எழுந்தார்.

''நீங்க ரெண்டு பேரும் எத்தனை எதிர்த்தாலும் இந்தக் கல்யாணத்தை நிறுத்தறது கஷ்டம். அதை ஒத்துக் கொண்டு வரப் போகிற பெண்ணை ஏத்துக்கிறது விவேகம். அவ்வளவுதான். என் கடமை, அந்தப் பெண்ணை இங்கே அழைச்சிண்டு வரது. நான் வரேன்'' அருணாகிறீச்சிட்டதோ, கணேசன் பேசியதோ அவர் காதுகளில் விழாத மாதிரி வேகமாக நடந்தார்.

''எப்படி என் செலக்ஷன்?'' அஸ்வத் ரயிலில் இருந்து இறங்கிய மஞ்சுளாவைச் சுட்டிக்காட்டிக் கேட்டபோது, சுவாமிநாதன் ''போக்கிரி!'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டார்.

''பெரிப்பா நமஸ்காரா'' மஞ்சுளா கன்னடம் கலந்த கிளிப் பிள்ளை தமிழில் பேசினாள். டாக்சியில் அருகில் அமர்ந்திருந்த பெண்ணை மீண்டும் பார்த்தார்.

''ஏம்மா மஞ்சு! தனியா வந்திருக்கியே. அப்பா, அம்மா...''

''உங்களைப் பத்தி ரொம்போ சொல்லி இருக்கு அஸ்வத். எனக்கு எல்லாமே நீங்க தான் பெரிப்பா! எங்க மனைலே பௌக்கேத்திடுங்கோ. ப்ளீஸ்'' வரிசையான பற்கள் பளிரிட அவள் சிரித்தபோது கன்னங்களில் குழி விழுந்தன.

''அஸ்வத்! கேட்டியா? உங்க வீட்லேவிளக்கேத்தறதுக்கு முன்னே, உங்கம்மா அப்பா, கண்ணிலே எரியற நெருப்பை நான் அணைச்சாகணும்னு மஞ்சுளாவுக்குத் தெரியுமோ?''

''பெரியப்பா! மஞ்சுவுக்குச் சகலமும்தெரியும். தைரியமும், நேர்மையும்இருக்கிறபெண் அவள். அதனால் அவளை நான் கைவிட மாட்டேன். பெரியப்பா! நீங்க எங்களைக் கைவிடாதீங்கோ'' என்று அஸ்வத் அவரது இருகரங்களையும் பலமாக எட்டிப் பிடித்தான்.

''இது என் கைடா, விடு'' என்று அவர் கேலி செய்யவும், சிரிப்பு அலை மோதியது.

(தொடரும்)

''என்னங்க இது நம்ம படம் இன்னும் ரிலீசே பண்ணலே, அதற்குள் நாலாவது வாரம்னு விளம்பரம் பண்ணியிருக்கீங்க?''

''இதுவரை தொண்ணூற்றொன்பது தடவை விநியோகஸ்தர்களுக்குப் போட்டு காட்டியிருக்கோமே!''

— இளை அ. கதிர்வேல்.



"கமலஹாசன் நடித்த "தூங்காதே தம்பிதூங்காதே" படத்தைபுதுவை ஆனந்தா தியேட்டரில் பார்க்கச் சென்றிருந்தேன். அங்கே நிகழ்ந்த காட்சி எனக்கு ஒரு கணம் வியப்பையும் அடுத்த கணம் வேதனையையும் அளித்தது.

ஆம்! கமலின் பெரிய 'கட் அவுட்' ஒன்றை தியேட்டரின் வாசலில் வைத்து இருந்தார்கள். அந்த 'கட் அவுட்'டிற்கு புதுவை கமலஹாசன் ரசிகர் நற்பணி மன்றத்தினர், குடம் குடமாகப் பால் அபிஷேகம் செய்து கொண்டிருந்தனர். அது மட்டுமா? தொடர்ந்து எலுமிச்சம்பழ அபிஷேகம் வேறு! இந்த வைபவம் 'முடிந்ததும், அதற்கு சந்தனம், குங்குமப் பொட்டு வைத்து, மாலை போட்டு, கற்பூர ஆரத்தி காட்டி மணியடித்து, தேங்காய்



உடைத்து ஏன், சில பிரஹஸ்பதிகள் அதன் காலில் கூட விழுந்து கும்பிட்டனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

இதையெல்லாம் பார்க்கையில் நமக்கு ஒருவிஷயம்நினைவுக்குவருகிறது! ஒவ்வொரு பேட்டியிலும், கமல், தமது ரசிகர் மன்றத்தை 'நற்பணி' மன்றமாக ஆக்கி, பல ஏழைகளுக்கு உதவி செய்து வருவதாகக் கூறுகின்றார். ஆனால் அவரது ரசிகர்களோ, இப்படி நேரத்தையும் பொருட்களையும் வீணாக விரயமாக்கி வருகின்றனர். பால் விற்கும்விலையில் அதனை, பத்துஏழைகளுக்கு, கூழுடனோ, கஞ்சியுடனோ கலந்து ஒருவேளைக்காவது பசியாற்றி, தங்களின் கொண்டாட்டத்தை வெளிப்படுத்தினால் என்ன?

கமலின் மேல் இவர்கள் தீராத அபிமானம் கொண்டு விளங்கட்டும்! அவரது படங்களை பலத்த சந்தோஷத்துடன் வரவேற்கட்டும். நாம் தடுக்கவில்லை! ஆனால் அதனை இப்படியா பொருட்சேதம் செய்து அமர்க்களப் படுத்துவது? 'நற்பணி' எனும்போது அதனை பிறருக்கு பயனுள்ள வகையில் செலவிட்டு, தங்கள் உற்சாகத்தை காட்டலாமே! இரசிகர்கள் சிந்திப்பார்களா?

நடாதூர் வ. திருமகள்,
இளங்கலை, இலக்கியம்
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி
புதுச்சேரி—3.

நிலவு சுடுவதில்லை!

நிலவு சுடுவதில்லையாமே...!
அன்பே உன்
கன்னத்தைக் காட்டு
தொட்டுப் பார்க்கிறேன்...!

— வி. ராஜாராமன்



அரசியல்வாதிகள்!

இரண்டு நூறு
ஆண்டுகளாய் — எம்மை
ஆண்டு கொண்டிருந்தவர்கள்,
ஒரு நாள்...
நடுநிசியில்,
தூங்கிக் கொண்டிருந்த
எங்களைத் தட்டி எழுப்பி,
"இன்று முதல் நீங்கள்
சுதந்திர மனிதர்கள்" என்று
சொல்லிவிட்டுப்
போனார்கள்.
இப்போதுதான் புரிகிறது.
வெள்ளையர்கள்
எங்களை
விட்டுவிட்டு மட்டும்
போகவில்லை.
இந்தக்
கொள்ளையரிடம்
விற்று விட்டும்
போயிருக்கிறார்களென்று!

ஜி. சிவக்குமார்,
மூன்றாமாண்டு வேதியியல்,
அருள்மிகு பழனியாண்டவர் கல்லூரி,
பழனி—2.



அரசிய
அன்பே
அரசியல்
நான் பே
கடித ம
ஒன்றுகூ
பரிசீலனை

வி. ர
இரா
சென்
கும்ப

ணவர்
பக்கங்கள்

ாதியா ?

என்ன
ாதியா ?
ட
கள்
இன்னும்
செய்யப்படவில்லையே...!



ஜாராமன்,
ாமாண்டுடி.பார்ம்(மருந்தியல்),
கா மருந்தியல் கல்லூரி,
காணம்.



வாழ்க்கை

1. வாழவே முடியாது என்று பலர் நினைப்பது போல் வாழ்க்கை அவ்வளவு மோசமானதல்ல. வாழ்வதே இன்பம் என்று சிலர் நினைப்பது போல் வாழ்க்கை அவ்வளவு சுலபமானதல்ல.
—ஹீட்டர்.

2. வாழ்க்கை வானவில்லாக நீண்ட நேரம் இருப்பதை விட, கணநேரம் கண்ணைப் பறித்து மறையும் மின்னலாக இருப்பதே நல்லது.

3. வாழ்க்கை என்பது போராட்டம். புண்ணில்லாத போராட்டமில்லை. வாழ்க்கை என்பது வேள்வி. தீ இல்லாத வேள்வி இல்லை. வாழ்க்கை என்பது கடல். புயல் இல்லாத கடல் இல்லை.

4. பூக்காத செடி, காய்க்காத மரம், புகழில்லாத மனிதன் இருக்கவே கூடாது.
— ஆங்கில பழமொழிகள்.

—ஜெ. மோகன்,
இளம் அறிவியல் முதலாமாண்டு,
கணிதம், கா. மு. கல்லூரி,
அதிராம்பட்டினம், தஞ்சை (மாவட்டம்).



கொய்த மலர்கள்

ஒரு விதவையின் கண்ணீரைத் துடைக்க இயலாத அல்லது பசியால் அழும் குழந்தைக்கு ஒரு கவளம் உணவு தர இயலாத, எந்த ஒரு தெய்வத்தையோ அல்லது மதத்தையோ நான் நம்புவது கிடையாது.

எவனுடைய இதயம் ஏழைகளுக்காக அழுகின்றதோ, அவனையே நான் மகாத்மா என்பேன்.

பிறரிடம் இருந்து நல்ல விஷயங்களைக் கற்றுக் கொள்ள மறுக்கும் மனிதன் இறந்தவனைப் போன்றவன்.


— சுவாமி விவேகானந்தர்.

எம். எஸ். பிரபாகரன்,
பி. எஸ்ஸி மூன்றுமாண்டு
(வேதியியல்),
ஏ.வி.சி. கல்லூரி,
மயிலாடுதுறை.

அரசாங்க ரகசியங்கள் பற்றிய ஜோக் ஒன்றை சோவியத் தலைவர் கோஸிஜின் ஒருமுறை சொன்னார்:

சோவியத் குடிமகன் ஒருவன் 'கோஸிஜின் ஒரு முட்டாள் என்று கூறியதற்காக 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டான். தலைவர் ஒருவரை அவமானப்படுத்தியதற்காக 1 ஆண்டும், அரசாங்க ரகசியத்தை வெளியிட்டதற்காக 9 ஆண்டும் அவனுக்குத் தண்டனை கிடைத்ததாம்!

வெ. இராமசாமி பி. காம்.,
அஞ்சல்வழி முதலாம் ஆண்டு,
13, கந்தசாமி தெரு,
பண்ணுருட்டி—607 106.



காத்தப்பன் இருக்கிறது வியாசர் பாடியிலே.

வியாசர்பாடியா இருந்தா என்ன? தரங்கம்பாடியா இருந்தா என்ன?

இந்த வெவகாரத்துல ரெண்டுலே ஒண்ணு பார்த்திட வேண்டியதுதான்.

என்னமா பேசிட்டான் அந்த மாரிமுத்துப் பய!

அவசரம்னு கைநீட்டிப் பணம் வாங்கினது நெசம். சொன்னபடி மாசம் கொஞ்சமா திருப்பிக் கொடுக்கலே. நெசம்.

அதுக்காவ?

மில்லு கேட்டண்ட நிக்க வச்சு என்னை கேள்வி கேட்டுப்பிட்டான்! 'இப்படிக் கழுத்தறுப்பேன்னு தெரிஞ்சிருந்தா ரெண்டு கையும் விரிச்சுக் காட்டியிருப்பேன். எப்படியாவது உதவி பண்ணுன்னு சுத்திச் சுத்தி வந்தியே, மறந்து போச்சா?' ன்னுல்லே கேட்டான்.

சுத்திச் சுத்தி வர்றதுன்னு என்ன அர்த்தம்? என்னை நாயின்னு நெனைச்சுக்கிட்டானு?

"அவன் பேசினதுல என் ஒடம்பும் மனசும் சூடேறிப் போய்க் கெடக்குது. குளிரணுமின்னு நீங்க உதவி செஞ்சே ஆகணும்."

"என்ன செய்யணும்?"

"அவனை நடக்க விடாமல் செஞ்சிடணும்!"



கேட்டதுக்கு அதுங்களுக்குக்கூட நன்றி இருக்குமின்னு இன்னும் டாப்புக்குப் போயிட்டான்.

''போடா, பொறுக்கி! அண்டிமீண்டு பத்திரமா எழுதிக் கொடுத்திருக்கேன்? உன்னால் ஆனதைப் பார்த்துக்க. சல்லிக் காக உனக்குத் திரும்பி வராது....!''

சொன்னதோட நிக்காம சட்டைக் காலரைப்பிடிச்சு அவன் கன்னத்துலரெண்டு அறை. காது சவ்வுல, 'குய்ங்'குன்னு அலறியிருக்கும். இன்னும் அவனைக் கீழே புரட்டித் தள்ளி வெளையாடியிருப்பேன். மில்லுல எங் கூட வேலை பார்க்கறவங்க வந்து எங்களை வெலக்கிப்பிட்டாங்க.

வெவகாரம் அதோட முடிஞ்சு போச் சுன்னு நெனைச்சிட்டிருப்பான் அந்தப் பரதேசிப் பய. விட்டிடுவேனா?

காத்தப்பன் நெனைப்பு வுந்திச்சு.

சும்மா லேசா சங்கை ஊதிவிட்டாப் போதும். அந்தமாரியோட ஒருகாலை வாங்கிடுவான். இன்னாருதான் செஞ்சாங்கன்னு

''உள்ளாறபோங்க....''ன்னுசொல்லிச்சு.

போனேன்.

''வணக்கம் அண்ணே....!''

கையைத் தூக்கிப் பெரிசா கும்பிடு போட்டேன்.

''வாடா சோமாறி! என்ன பெரிசா சலாம் வைக்கிறே? அப்படி உக்காரு. என்ன விசயம்?''

அந்தக் குரலு ஒண்ணே போதும். ஊரைக் கட்டிப் போட்டிடும்.

ஒரு கைலியை உடுத்திக்கிட்டு நாற்காலியிலே குந்தியிருந்தான். கைலி தரை வரைக் கும் எறங்கியிருந்திச்சு. கழுத்துல மைனர் சங்கிலி. சும்மா புசுபுசுன்னு மீசை.

மெதுவா நடந்த வெசயத்தை எடுத்து வச்சேன்.

''ஆமா, நீ அந்தாளுகிட்ட கடன் வாங்கினது நெசந்தானே....?''

''ஆமாண்ணே....''

இப்ப புரிஞ்சுக்க...!



எந்தக் கொம்பனும் கண்டுக்க முடியாது. இல்லாடி.

காத்தப்பன் பழைய ஆளு.

''தனபாலு! எவனாவது வாய்க்கொழுப்பா பேசினால் நம்மகிட்ட கேசைத் தள்ளி விடு. நான் பார்த்துக்கறேன்''ன்னு எத்தினியோ தபா எங்கிட்ட சொல்லியிருக்கான்.

ஒண்ணும் வேணாம். ஐந்நூறு மில்லி. மிலிட்டரி ஓட்டல்ல கொஞ்சம் தீனி. அவ்வளவுதான்.

பார்த்து ஒரு வருசம் ஆயிடுச்சு.

பேஜார் புடிச்சவன். எங்கியோ வியாசர் பாடியில போயி குடி பூந்திருக்கான். அடிக்கடி போயி பார்க்கவா முடியுது?

ஆளு என்ன? பழைய சினேகம் விட்டுப் போயிடுமா? என்னைப் பார்த்தா அப்படியே ஓடியாந்து கட்டிக்கிட மாட்டானா?

அப்பாடா! ஒரு வழியா வியாசர்பாடி வந்திட்டுது.

பஸ்ஸை விட்டு இறங்கி நாலஞ்சு சந்து பொந்துகள்ல பூந்து பொறப்பட்டு அவன் வீட்டுக்குப் போறேன்.

வாசல்லே அவன் சம்சாரம் குந்திக்கிட்டு அண்டை அசலோட பேசிட்டிருக்குது.

''அண்ணன் வீட்ல இருக்கா....?''ன்னு கேட்டேன்.

''சொன்னபடி திருப்பிக் கொடுக்கலே. அதுவும்....''

''நெசந்தாண்ணே....''

''ஏன்?''

''அது வந்து.....''

''இழுக்காதே. மூடைக்கு வாங்கறே. அவனுக்கும் மூடை. உன்னை வந்து கேட்கிறான். பொஞ்சாதியோட சங்கிலி, கம்மலு எதையாவது அடகு வச்சுத் திருப்பிட வேண்டியது தானே?''

''என்னண்ணே! அவன் என்ன பேச்சுப் பேசிட்டான் தெரியுமா?''

''சும்மா பேசியிருப்பானா? நீயும் வாயடி அடிச்சிருப்பே. உன்னால் ஆனதைப் பார்த்துக்கன்னு தொடையைத் தட்டிச் சவால் விட்டிருப்பே.''

''எல்லாம் சரிதாண்ணே. ஆனால் அவன் பேசினதுல என் ஒடம்பும் மனசும் சூடேறிப் போய்க் கெடக்குது. குளிரணுமின்னா நீங்க உதவி செஞ்சே ஆகணும்.''

''என்ன செய்யணும்?''

''வளக்கமான வேலைதான்.''

''விளக்கமா சொல்லு.''

''அவனை நடக்கவிடாமல் செஞ்சிடணும்.''

''அவனோட காலை வாங்கச் சொல்றே?''

''ஆமாண்ணே....''

''காலே வெட்டறது, கையை வெட்டறது, முளியைத் தோண்டறது இதெல்லாம் பாவ காரியம், தனபாலு.''

''நீங்க முன்னாடி செஞ்சதுதானுங்களே?''

''நெசம்தான். அது பாவம்னு தெரிஞ்சு இப்ப யோக்கியமா நடந்திட்டிருக்கேன்.''

''பாவ புண்ணியமெல்லாம் பார்க்க ஆரம்பிச்சிட்டீங்களே!''

''அது மட்டுமில்லேப்பா. ஒரு மனுசனோட ஒடம்பைக் கூறுகூருச் சிதைக்கிறது ரொம்பக் கொடுமை. அந்த நேரத்துல அவன் அனுபவிக்கிற வேதனையைக் கொஞ்சம் நெனேச்சுப்பாரு.''

''நம்பிக்கையோட . உங்களைத் தேடி வந்திருக்கேன். . புத்திமதி சொல்ல ஆரம்பிச்சிட்டீங்களே!''

''ஆமாம்பா. மனுச சாதியில் மூணு தினுசு. ஒண்ணு இயற்கையாகவே ஒழுங்கா கட்டுக்கோப்பா இருக்கிறது. இன்னொண்ணு சொல்லித் திருந்தறது. மூணாவது என்னன்னு புரியுதா?''

''புரியலேண்ணே....''

''இப்ப புரிஞ்சுக்க.''

தரையில புரண்டுகிட்டிருந்த கைலியை முட்டிக்காலு வரைக்கும் ஒசத்திக் காத்தப்பன் காட்டினப்ப மனசு பக்குன்னுச்சு.

அவனோட வலது காலேக் காணலே!

''டாக்டர் இன்னைக்கு என்னோட வியாதி தீர சரியான வழி சொல்லிட்டார்.''

''என்ன சொன்னார்?''

''வேறு ஒரு நல்ல டாக்டரைப் பார்க்கச் சொன்னார்!''

— கடுவை கோபால்சாமி.





ஆலோசனைப் பெட்டிக்கோர் ஆலோசனை

கல்கத்தா பல்கலைக்கழகக் கட்டிடத்தின் வாயிலில் 'ஆலோசனைப் பெட்டி' யொன்று வைக்கப்பட்டிருந்தது. அது எந்தக் காலத்திலேயோ செய்த பெட்டியாகையால் வண்ணம் அழிந்து, உடைந்து வெகு மோசமான நிலையில் இருந்தது. சமீபத்தில் அப்பெட்டியில் கிடந்த ஆலோசனைக் கடிதத்தின் வரி:


''ஆலோசனைப் பெட்டியைப் புதுப்பிக்கவும்.''

— காயத்ரி.

காதல் என்பது உள்ளம் என்னும் பிளாஸ்க்கில் இருக்கும் ஐஸ் கட்டி. கொஞ்சம் நேரம் வாழ்க்கை என்னும் வெய்யிலில் வெளியே எடுத்து வைத்தால் சீக்கிரம் உருகிக் கரைந்துவிடும்.

— ஆர். மணிவண்ணன்.





சினிமாப் பாட்டு

தெறல் சங்கீதத்துக்கு
தொண்டிக்
கவிதை
நடனமாடுகிறது

— பாலாஜி ஸ்ரீனிவாசன்.

A ஃபார் ஆப்பிள் M ஃபார் மர்டர்

12

ஜி. ஹெச்.
''குட்மார்னிங் டாக்டர்....''
''குட்மார்னிங்.... அந்தப் பொண்ணு யாமினியோட பி.எம். ரிப்போர்ட்டை இப்பத்தான் எழுதி முடிச்சேன் இன்ஸ்பெக்டர்..''
''டாக்டர்.... இவங்கதான் அந்தப் பொண்ணோட பேரண்ட்ஸ்... பாடியைப் பார்க்க வந்திருக்காங்க....''
''போய்ப் பார்க்கச் சொல்லுங்க. ஆனா மனசைத் திடமா வைச்சுக்கணும். ரொம்பவும் அழகான பொண்ணு. குரூரமா கொன்னிருக்காங்க... மூஞ்சியை பொசுக்கிறதுக்காக ஹைலி கான்சன்ட்ரேட்டட் ஆஸிட்டை ஊத்தியிருக்காங்க.... ஓர் அரை மணி நேரம் வெயிட் பண்ணினா பாடியையே வாங்கிட்டுப் போயிடலாம்....'' டாக்டர் அறைக்குள்ளே கையைக் காட்டினார்.
ஆனந்தியை அமைதிப்படுத்திக் கொண்டே திருஞானம் அவளுக்குப் பின்னால் சென்றார். டாக்டர், கோகுல்நாத்தை ஏறிட்டார்.
''அந்த டாக்ஸி டிரைவரைப் பாக்கிறதுக்கு ரொம்பவும் சாதுவா தெரியறான் டாக்டர். ஆனா அவனுக்குள்ளே அந்த மிருகத்தனமான எண்ணம் இருந்திருக்கு.... பி.எம். ரிப்போர்ட்ல ரேப் அட்டெம்ப்ட் பண்ணினதுக்கான சிம்டம்ஸ் இருக்கா டாக்டர்....?''
டாக்டர் புன்னகைத்தார். ''இருக்கான்னு கேட்கறீங்க...? பிரதானமே அதுதான் இன்ஸ்பெக்டர். முரட்டுத்தனமான உடலுறவு காரணமா உயிர் பிரிஞ்சிருக்கு.''
''டெத் எத்தனை மணியிலிருந்து எத்தனை மணிக்குள்ளாக நடந்திருக்கு டாக்டர்?''
''நாள் பூராவும் பெய்ஞ்ச மழையிலே வெதரே மாறியிருக்கு. ஆனாலும் பாடியோட ரிஜிட்னெஸ்ஸை வெச்சு பார்க்கும்போது சாயந்தரம் அஞ்சு மணியிலிருந்து, எட்டு மணிக்குள்ளே அந்தப் பொண்ணு இறந்திருக்கணும்.''
கோகுல்நாத் நெற்றியைத் தேய்த்தார். ''ஏழு மணிக்கு மேலேதான் அந்தப் பொண்ணு டாக்ஸியிலே ஏறியிருக்கா டாக்டர். சம்பவம் ஏழிலிருந்து எட்டு மணிக்குள்ளேதான் நடந்திருக்கு.''
''அது உங்களோட பிரச்னை இன்ஸ்பெக்டர். என் சோதனையின் முடிவை நான் சொல்றேன்.''

அந்த ஏ.ஸி. அறையிலும் முகம் முழுவதும் பிசுபிசுப்பாய் வியர்த்திருந்தான் சந்திரபோஸ். உதடுகள் உலர்ந்து போய், எச்சில் விழுங்கவே சிரமப்பட்டான். திணறிச்சொன்னான்.
''ஸார் எனக்கு ஒண்ணுமே தோணலை ஸார். பயமாயிருக்கு. பாடி போஸ்ட் மார்ட்டத்துக்குப் போயிருக்கு. இன்ஸ்பெக்டரும் டாக்டரும் ரொம்ப நேரம் ஜி. எச்சில் பேசிட்டிருந்தாங்க....''
பிரபு எழுந்து அறையில் குறுக்கும் நெடுக்குமாய் உலாவினார். நான்கைந்து உலாவலுக்குப் பின் திரும்பினார்.
''நீ ரெண்டு நாளைக்கு ஆபிஸுக்கு வரலேன்னாலும் பரவாயில்லை. இன்ஸ்பெக்டரையும் அந்த டாக்டரையும் மாறி மாறி வாட்ச் பண்ணு. அப்பப்ப எனக்குத் தகவல் கொடுத்திட்டிரு. பப்ளிக் பூத்திலிருந்து என்னோட பிரைவேட் டெலிபோனுக்கு போன் பண்ணு.''
''சரி ஸார்.''
''இந்த நிமிஷத்திலிருந்து உனக்கு ஒவ்வொரு நிமிஷமும் முக்கியமான நிமிஷம். டாக்டரோ, இன்ஸ்பெக்டரோ உம்மேலே சந்தேகப்பட்டுடும்படியா வாட்ச் பண்ணாதே. பட்டும் படாம நின்னு வாட்ச் பண்ணு.''
''சரி ஸார்.''
''கீதா எங்கே இருக்கா?''
''வீட்லே.''
''அவளை டிரான்ஸ்பர் பண்ற வரைக்கும் வீட்டை விட்டு வெளியே போக வேண்டாம்னு சொல்லிடு....''
சந்திரபோஸ் தலையாட்டியபடி எழுந்தான்.
''நான் வர்றேன் ஸார்.''
''ஒரு நிமிஷம் சந்திரபோஸ்.''
நின்றான்.
''நாம ஒருவேளை போலீஸ்லே மாட்டிக்கிற சந்தர்ப்பம் வந்ததுன்னா, அந்த சந்தர்ப்பம் திடீர்னு வந்துடாது. கீதா மூலமாத்தான் வரும். அந்த சந்தர்ப்பம் வரக்கூடிய அறிகுறி லேசா தெரிஞ்சாலே நாம காஷியஸ் ஆயிடணும். நான் என்ன சொல்றேன்னு புரியுதா

ராஜேஷ்குமார்

சந்திரபோஸ்?''

''புரியுது ஸார்.''

''என்ன புரியுது?''

''சீதாவையே இல்லாம பண்ணிடணும்.''

''சரியா புரிஞ்சு வெச்சிருக்கே. காதலை பெரிசுன்னு நினைச்சுடாதே. இந்த இருபத்தாறுவது வயசிலேயே தூக்குக்கு போயிடுவே. என்னைப் போலீஸ் சந்தேகிக்கிற நிலை வந்துச்சுன்னு உன்னையும் இழுத்து விடாம இருக்க மாட்டேன்.''

பிரபு கண்களை விரித்துக் குரூரமாய் எரிக்க சந்திரபோஸ் முதுகில் வழியும் வியர்வை வாய்க்கால்களோடு வெளியே வந்தான். நெஞ்சு திக்திக்கில் இருந்தது.

ஸ்டேஷன் வாசலில் தன் ஹோண்டா



பைக்கை அணைத்து ஸ்டாண்ட் இட்டான் விவேக். உதடுகளில் தொற்றியிருந்த சிகரெட்டை சாக்கடையை நோக்கி சுண்டிவிட்டு ஸ்டேஷன் வாசற்படி ஏறினான்.

கான்ஸ்டபிள்கள் விறைப்பான சல்யூட்களை விநியோகிக்க, தளர்வான கையசைப்போடு ஏற்றுக் கொண்டபடி உள்ளே போனான்.



கேஸ் பைல் ஒன்றை புரட்டி, சப்—இன்ஸ்பெக்டர் நவநீத கிருஷ்ணனுக்கு இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்துக் கொண்டிருந்த கோகுல்நாத் நிமிர்ந்தார்.

முகம் பிரகாசத்திற்கு வந்தது.

"அட விவேக் நீங்களா....? வாங்க.... டெல்லியிலிருந்து எப்போ திரும்பினீங்க?"

"மத்தியான ப்ளேட்ல."

"ட்ரெயினிங்கெல்லாம் எப்படி?"

"'A' HIGH வாங்கின அஞ்சு பேர்லே நானும் ஒருத்தன் கோகுல்நாத்."

"ஜனிட்! கங்கிராட்ஸ்...." விவேக்கின் கையைப் பற்றி குலுக்கி உட்கார வைத்தான் கோகுல்நாத்.

(என் விவேக்கைப் பற்றி நான் கல்கி வாசகர்களுக்குச் சொல்லியாக வேண்டும். க்ரிமினல் இன்வெஸ்டிகேஷன் டிபார்ட்மெண்டின் பிரதான அங்கமான விவேக் ஓர் அதி சுறுசுறுப்பான இளைஞன். அவனுடைய மூளையின் எல்லா செல்களுக்கும் புது பிளேடின் கூர்மை. இதுவரை நான் எழுதிய எழுபது மர்ம நாவல்களில் பாதிக்கு மேல் விவேக்பிரசன்னமாகிகுற்றவாளிகளை கண்டு பிடித்துக் கொடுத்திருக்கிறான் — ராஜேஷ் குமார்.)

"சாயந்தரம் கமிஷனர் ஆபீஸ்லே ஒரு மீட்டிங் இருக்கு கோகுல்நாத். நீங்க அவசியம் வர்றீங்க.....

"என்ன விஷயமாய்?"

விவேக்ஏதோசொல்லவாயெடுத்தநேரம்.

வாசலில் அந்த அழுகைச் சத்தம் கேட்டது. "அய்யா.... இன்ஸ்பெக்டரய்யா.... எம் புருஷன் மூஞ்சியைக் காட்டுங்கய்யா.. ஒரு நிமிஷம் பார்த்துட்டுப் போயிடறேன். கொஞ்சம் தயவு பண்ணுங்கய்யா...."

"யாரது?" மெல்லிய குரலில் கேட்டுக் கொண்டே விவேக் திரும்பினான்.

ஸ்டேஷன் வாசலில் தலைவிரி கோலமாய் பம்மிய வயிற்றோடு அந்தப் பெண் கண்களில் நீர் வழிய நின்றிருந்தாள்.

கோகுல்நாத் கத்தினார்.

"கன்னியப்பனோட பெண்டாட்டி வந்துட்டாய்யா கான்ஸ்டபிள்! ஒரு ரெண்டு நிமிஷம் கன்னியப்பனை லாக்—அப்பிலிருந்து கொண்டாந்து காட்டிட்டுக் கூட்டிட்டு போயிடு. தினசரி இதே ரோதனையாப் போச்சு."

விவேக் அந்தப் பெண்ணையே பார்த்தான். கோகுல்நாத்திடம் கேட்டான். "பாவம் ப்ரக்னெண்ட் லேடி! புருஷனை ஏன் லாக்—அப்பில் தள்ளியிருக்கீங்க?"

"மர்டர்."

"மர்டரா?"

"ம்" என்றவர் ஒரு ஐந்து நிமிஷ நேரத்துக்குள் எல்லாவற்றையும் சொல்லி முடித்தார்.

விவேக் தன் அடர்த்தியான கிருதாவைக்

கிறிக் கொண்டே மரகதாவைத் திரும்பிப் பார்த்தான். லாக்—அப்பிலிருந்து கசங்கிப் போன காகிதம் மாதிரி வெளிப்பட்ட கன்னியப்பனையும் பார்த்தான். கோகுல்நாத்திடம் திரும்பிக் கேட்டான்.

''கேஸ் பைல் பண்ணிட்டீங்களா கோகுல் நாத்?''

''இன்னும் ரெண்டு நாள்ல பண்ணப் போறேன்.''

''பிராசிகூட்டர் யாரு?''

''பார்த்தசாரதி.''

''அப்போ தூக்குத் தண்டனை நிச்சயம்.''

விவேக் சொன்னதைக் கேட்டு விதிர்த்துப் போன கன்னியப்பன் அப்படியே மண்டியிட்டு உட்கார்ந்து விவேக்கின் கால்களைப் பற்றினான். கண்களில் நீர் சிதறக் கதறினான்.

''அய்யா....! பொறக்கப் போற எம் புள்ளை சத்தியமா சொல்றேன்யா. நான் அந்தப் பொண்ணை கொலை பண்ணலை. ஒரு குத்தமும் செய்யாத என்னை தூக்குலே போட்டுடாதீங்கய்யா.''

விவேக் கன்னியப்பனின் தோளைத் தட்டி எழுப்பி நிற்க வைத்தான். ''உனக்குத் தூக்குத் தண்டனை கிடைக்காம நான் பார்த்துக்கிறேன். அந்தப் பெண்ணைக் கொலை செஞ்சதை நீ ஒத்துக்கறியா?''

''நா அந்தக் கொலையை பண்ணலைய்யா.''

கோகுல்நாத் விவேக்கைப் பார்த்துப் புன்னகைத்தார். ''என்ன உதை உதைச்சாலும் மூணு நாளா இதே வார்த்தையைத் தான் சொல்றான் விவேக்.''

''இப்போ நான் அவனை கேக்கிற கேள்வியிலே உண்மை எப்படி வருது பாருங்க கோகுல்நாத்'' என்று சொன்ன விவேக் கன்னியப்பனின் அருகே வந்தான்.

''அந்த ஆசிட்டை என்ன விலை குடுத்து வாங்கினே கன்னியப்பா?''

''ஆசிட்டா? எந்த ஆசிட்டய்யா?''

''பொண்ணோட மூஞ்சியைப் பொசுக்கிறதுக்காக வாங்கினியே அந்த ஆசிட்டை சொல்றேன்.''

''அதெல்லாம் என்னன்னே எனக்குத் தெரியாதய்யா.''

''அந்தப் பொண்ணு ரொம்பவும் முரண்டு பிடிச்சாளா கன்னியப்பா?''

''அது கம்னுதான் உட்கார்ந்துட்டு வந்துச்சய்யா.''

''அந்தப் பொண்ணு எங்கே போகணும்னு சொல்லி உன்னோட டாக்ஸியிலே ஏறிச்சு?''

''அமிஞ்சிக்கரை.''

''அமிஞ்சிக்கரை போனியா?''

''இல்லே அந்தப் பொண்ணு சகாதியேட்டராண்டையே இறங்கிடுச்சு.''

''ஏன்?''

''எனக்குத் தெரியல்லேய்யா....''

''அப்போ உன்கூட அந்தப் பொண்ணு சண்டையே போடலை....''

''ஊஹூம். சத்தியமா போடலேய்யா.''

''போலீஸ் வந்து உன்னை விசாரிக்கிற வரை டாக்ஸியோட டிக்கியிலே பாடி இருந்த விஷயம் உனக்குத் தெரியாது?''

''நிஜமா தெரியாதய்யா.''

''யாரோ கொண்டு வந்து போட்டிருக்காங்கன்னு சொல்றே?''

''ஆமாய்யா.''

''உனக்கு யார் மேலேயாவது சந்தேகம் இருக்கா?''

கண்களில் நீர் வடிய கைகூப்பினான் கன்னியப்பன். ''எம் மேலே யார்க்கும் எந்த கோபமோ பகையோ வர நியாயமில்லேய்யா. என்னைச் சுத்திப் பழகற அத்தினி பேரையும் நல்லவங்களாத்தான் நினைச்சிட்டிருக்கேன்.''

அவன் பேசப் பேச வாசலில் நின்றிருந்த மரகதா ஸ்டேஷன் படியேறி வந்து கன்னியப்பனின் முகத்தைப் பாசம்பொங்கத் தடவினாள். கண்ணீர் மின்னியது.

''பயப்படாம இருய்யா. நம்ம தெரு முப்பாத்தம்மன் கோயில்ல் மொளகாயும் உப்பும் கொட்டியிருக்கேன். ரெண்டே நாள்லே குத்தம் பண்ணினவன் உடம்பெல்லாம் எரிய எரிய ஸ்டேஷனுக்கே வந்து விளுவான்.''

கன்னியப்பன் கைகளால் கண்ணையும், மூக்கையும் தேய்த்துக் கொண்டு ஒரு பள்ளிக்கூடத்துப் பையனைப் போல் அழுதான்.

கோகுல்நாத் அதட்டினார் மரகதாவை. ''இந்தாம்மா, இனிமே நீ ஸ்டேஷனுக்கு அடிக்கடி வந்து அழுது ஆர்ப்பாட்டம் பண்ணக் கூடாது. நீங்க ரெண்டு பேரும் அடிக்கிற கூத்துலே ரோட்லே வர்றவன் போறவன் நின்னு வேடிக்கை பார்க்க ஆரம்பிச்சுட்டான்.''

''இனிமே வரல்லேய்யா....'' மரகதா அழுதபடி நகர்ந்தாள்.

திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு போகும் கன்னியப்பனை லாக்கப்பிற்குள்



தில்லி நகர பஸ் கட்டணத்தை உயர்த்தியதை கண்டித்து தில்லி மக்கள் புதுமையான போராட்டம் நடத்துகிறார்கள்! 'பஞ்சம்' என்கிற ஒரு குழு 'தில்லி போக்குவரத்துக் கழக'த்தின் ஊழல்களைப் பற்றி நடை பாதை நாடகம் போடுகிறது. இதை மக்கள் வரவேற்கிறார்கள். நாடகக் குழுவில் சிலரையும் பார்வையாளர் சிலரையும் போலீஸ் கைது செய்துள்ளபோதிலும் போராட்டம் தொடர்கிறது. கட்டணத்தைக் குறைக்கும்வரை இப்படி செய்வதாக இருக்கிறார்களாம்!

— சம்பத்குமாரி

ஆதாரம்: 'ஸண்டே'



அருள்வாக்கு

ஒவ்வொரு இந்திரியத்தையும் எடுத்துக் கொண்டு அது பராசக்தி பண்ணின ஒரு மிஷின் — ஆனால் ஜடமான மிஷினாக இல்லாமல் ஜீவனுள்ள மிஷினாக இருப்பது — என்று பார்த்தால் அது ரொம்பவும் உசந்ததாகத்தான் தெரியும். இத்தனூண்டு ஒரு கண் — இது ஒரு பெரிய மலைத் தொடரையே பார்க்கிறது: இனுஸு இனுஸான வர்ண பேதங்களைப் புரிந்து கொள்கிறது. அப்படியே காது ஆயிரம் வகைப்பட்ட சப்த பேதங்களை இது இன்னாருடையது, இது இந்த ம்ருக—பக்ஷியுடையது, இன்ன வாத்யத்துடையது என்றெல்லாம் தெரிந்து கொள்கிறது. இதே மாதிரிதான் நாக்கு நாலாயிரம் ருசி பேதங்களைத் தெரிந்து கொள்கிறது. இப்படியே வாஸனை நாற்றம் என்று ஒவ்வொரு பண்டத்துக்கும் ஒன்றாக எத்தனையோ, மூக்குக்கு விஷயமாகின்றன. ஸ்பர்ச உணர்ச்சியை எடுத்துக் கொண்டால் அது எல்லாவற்றையும்விடப் பெரிய ஆச்சர்யம்! எழுபதடி, எண்பதடி ஆழக் கிணறு. அதிலே பத்து இருபதடி ஜலத்துக்கு அடியிலே ஏதோ ஒரு பொருள் எப்போதோ விழுந்தது அப்படியே கிடக்கிறது. அதை நாம் கண்ணால் பார்க்க முடியவில்லை. கையால் ஸ்பர்சிக்க முடியவே முடியாது. ஆனாலும் இத்தனை தூரத்துக்கு வெளியிலிருந்து ஒரு நீளமான கோலை விட்டு அதைத் தொட்டுவிட்டால் கூடப் போதும்— ஒரு மாதிரி அதன் 'ஷேப்' என்ன, அது கெட்டியாயிருப்பதா, மெத்தென்றிருப்பதா என்றெல்லாம் புரிந்து கொண்டு விட முடிகிறது. அதனால் இந்தத் திறமைகளைப் பெற்ற இந்திரியங்களை உசந்தவை என்று சொல்வதில் தப்பில்லை அல்லவா?

கடைசியில்பெரியவிநோதம்என்னவென்றால் இப்படிக் கலர்கள், சப்தங்கள், வாஸனைகள் இத்யாதிகளை வாஸ்தவத்தில் தெரிந்து கொண்டவை இந்தக் கண், காது, மூக்கு அல்ல. இவற்றின் மூலம் மூளைதான் தெரிந்து கொள்கிறது. நுண்ணியதாக அந்த மூளை கொடுக்கும் கனெக்ஷன்களில்தான் சைதன்ய கரண்ட் ஓடி, இந்திரியங்களுக்கு இந்த சக்திகளைக் கொடுத்திருக்கிறது. இது அத்தனைக்கும் ஆதாரம் மனஸ். அதனால்தான் இந்திரியங்கள் உசந்தவை என்று சொன்னதற்கப்புறம் அவற்றைவிட மனஸ் உசந்தது என்கிறார். ''இந்திரியேப்ய :பரம்மந!'' மனஸின் கருவிகளே இந்திரியங்களானதால் இவற்றைவிட அது உசந்தது.

அப்புறம் அந்த மனஸையும் விட உசந்தது ''மன ஸஸ்து பரா புத்தி.'' மனஸில் உணர்ச்சிகள் அவைபாட்டுக்குக் கிளம்பி விடுகின்றன. இது நல்லதா, கெட்டதா என்று பார்ப்பதில்லை. மனஸில் நல்லது, கெட்டது எல்லாமேஒருபோலத்தோன்றிவிடுகின்றன. இவற்றிலே எது நல்லது எது கெட்டது என்று பார்த்து, கெட்டதைத் தள்ளி நல்லதை எடுத்துக் கொள்ளும்படி செய்வதுதான் புத்தி.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

தள்ளித் தாழிட்டார் கான்ஸ்டபிள்.

''கோகுல்நாத்.''

''என்ன விவேக்?''

''இந்த கன்னியப்பன் விவகாரத்தை இன்னொரு வாட்டி நிதானமா சொல்லிட்டு வாங்க. உங்க அஸெம்ஷனையும் சேர்த்துச் சொல்லுங்க.''

கோகுல்நாத் சொன்னார்.

விவேக் உன்னிப்பாய்க் கேட்டான். கோகுல்நாத் சொல்லி முடித்ததும், விவேக் மோவாயைத் தேய்த்துக் கொண்டே கோகுல்நாத்தைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''என்ன விவேக் சிரிக்கறீங்க?''

''நான் ஒரு கேள்வி கேட்கட்டுமா கோகுல்நாத்?''

''ம். கேளுங்க.''

''கன்னியப்பன் தன் வீட்டு வாசல்லே டாக்ஸியை நிறுத்திட்டுச் சந்தோஷமா, பிரியாணி பொட்டலத்தோடும் மல்லிகைப் பூவோடும் தன் பெண்டாட்டியோட பேசிட்டிருந்தப்ப இன்ஸ்பெக்டர் போய் அரஸ்ட் பண்ணியிருக்கார் இல்லையா?''

''ஆமா விவேக்.''

''கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க விவேக். ஒரு பெண்ணைக் கற்பழிச்சு கொலை பண்ணி, அவ மூஞ்சியை திராவகத்தாலே பொசுக்கி, கோணிப் பையிலே மூட்டையா கட்டி, டிக்கியிலே அடைச்சுகிட்டுத் தன்னோட வீட்டு வாசல்லே டாக்ஸியை நிக்க வெச்சுக் கிட்டுப் பெண்டாட்டிக்குப் பிரியாணியும் பூவும் குடுத்து சந்தோஷமா பேசிட்டிருக்க முடியுமா? இந்த இடம் லாஜிக்கா உதைக்கலே?''

''வி... விவேக்.''

கோகுல்நாத் யோசிப்போடு நிமிர்ந்தார்.

''என்ன சொல்ல வர்றீங்க விவேக்?''

''குற்றவாளி வெளியே இருக்கான்னு சொல்றேன்.''

(தொடரும்)

தவிர்க்கக்கூடியவை



ஹெல்மட்டின் இடம் ஹாண்டில்பார் அல்ல!

எங்கள் உறவினர் ஒருவர் பிறர் எவ்வளவோ சொல்லியும் கேளாமல், ஹெல்மெட்டைத் தலையில் அணிந்து கொள்ளாமல், மோட்டார் சைக்கிளின் ஹாண்டில் பாரில் தொங்க விட்டுக் கொண்டு ஓட்டிச் சென்றார். ஒரு குறுகிய வளைவில் திரும்பிய போது, ஹெல்மட் ஹாண்டில் பாருக்கும் டாங்குக்கும் இடையே போய்ச் சிக்கிக் கொண்டது. இதனால் வண்டியைத் திருப்ப முடியாமல் போயிற்று. அந்தச் சமயத்தில் எதிரே ஒரு லாரி வர, பயங்கரமான விபத்து நேர்ந்துவிட்டது. கல்யாணமாகி ஒரே வருடமான அந்த நபர் இரண்டு கால்களையும் விபத்தில் இழந்து நிற்பதைப் பார்த்தால் சோகம் நெஞ்சைப் பிழிகிறது.

— வி. ஜனார்த்தனன், சேலம்—11.

தீக்குச்சியால் பார்வை போயிற்று!

சிகரெட் பற்ற வைப்பதற்காக நெருப்புக் குச்சியைத் தீப்பெட்டியில் கீழிருந்து மேல் நோக்கி உரசிய எனது நண்பர் அதன் பயனாக ஒரு கண் பார்வையை இழந்துவிட்டார். குச்சியை 'ஸ்டைலாக' உரசியபோது அதிலிருந்து கருமருந்து நெருப்புடன் தெறித்துக் கண்ணில் பட்டுவிட்டது. ஆபரேஷன் செய்தும் ஒரு கண்ணில் பார்வை திரும்பவில்லை.

— ப. முனீஸ்வரன், தூத்துக்குடி.

பெண்கள் கவனிக்க!

அன்று வீட்டு வாசலை மெழுகிக் கொண்டிருந்த நான், பாதியில் 'ஆ...' வென்று அலறியபடி கீழே விழுந்தேன். வீட்டிற்கு 'வயரிங்' செய்து நாளாகிவிட்டிருந்ததால் மின்சாரம் 'லீக்' ஆகிக் கொண்டிருந்திருக்கிறது. இந்நிலையில் வீட்டைக் கழுவுகிறேன் பேர் வழி என்று மெயின் போர்டின் அடியில் தண்ணீரைக் கொண்டு கொட்டியது எத்தனை மடமை! மெயினை 'ஆஃப்' செய்திருந்தால் இப்படி ஆகியே இருக்காது.

— வி. ரெங்கம், ஸ்ரீவைகுண்டம்.

தூங்கும்போதே விபத்து!

நாமக்கல்லுக்குப் பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தோம். எனக்கு முன் சீட்டில் ஒருவர் ஜன்னல் ஓரமாக அமர்ந்து தூங்கிக் கொண்டு வந்தார். பஸ் கலங்காணியை நெருங்கியபோது எதிரில் இன்னொரு பஸ் வந்தது. அடுத்த விநாடி என் முகத்தில் ஏதோ தெறித்தது. துடைத்துப் பார்த்தால் — ரத்தம்! முன் சீட்டு நபர் தூக்கத்தில் கையை வெளியே நீட்டியதால் விளைந்த விபரீதம்—கை ஒடிந்து தொங்கிவிட்டது!

— ஜே. லலிதா, சேலம்.

கணச் சோம்பல்

ஒரு முறை ரயில்வே மேம்பாலம் ஏறிக் கடக்கச் சோம்பல்பட்டுத் தண்டவாளங்களை நடந்தே கடக்க முற்பட்டேன். ரயில் வருவது தெரிந்ததும் நின்றேன். வேகமாக வந்த கன்னியாகுமரி எக்ஸ்பிரஸிலிருந்து இரும்புத் துண்டு போன்ற ஒன்று துருத்திக் கொண்டிருந்தது. என் வலது காலை நன்றாகப் பதம் பார்த்துவிட்டது. எலும்பு முறிவு ஏற்பட்டு மூன்று மாதங்களுக்குப் படுக்கையில் இருக்க வேண்டியதாகப் போயிற்று.

— ஆர். லதா, சென்னை—88.

விதிகளை மதிக்க வேண்டும்

இரவு ஏழு மணிக்குமேல், போலீஸ்காரர் இருக்க மாட்டார் என்ற 'தைரியத்தில்' 'நோ எண்ட்ரி' சாலைக்குள் குடும்பத்துடன் ஸ்கூட்டரில் சென்றார் என் நண்பர். எதிர்ப் பக்கத்திலிருந்து வேகமாக வந்து கொண்டிருந்த 'கார்'

விபத்துக்கள்

வாசகர் பங்கு



மோதியதால் அவர் மனைவி தலத்திலேயே மாண்டார். அவர்கள் குழந்தை இன்று அநாதை! சாலை விதிகள் நமக்கென்று ஏற்படுத்தப்பட்டவையே அன்றிப் போலீசுக்கு அல்ல என்பதை நினைவில் வைத்துக் கொண்டால்.,.. எத்தனையோ விபத்துக்களைத் தவிர்க்கலாம்!

— பா. வாசுதேவன், வேலூர்.

சிகரெட் விளைவித்த விபத்து

என் நண்பரும் நானும் பஸ்ஸில் ஓட்டுனருக்குப் பின்னால் அமர்ந்து கொண்டு பிரயாணம் செய்கையில் நண்பர் சிகரெட் பிடித்தவாறு வந்தார். அவர் கையிலிருந்த சிகரெட் தவறி என் காலில் விழ, நான் 'ஐயோ' என்று கத்த, ஓட்டுனர் என்னவோ ஏதோ என்று திரும்பிப் பார்க்க, எதிரில் சாலையில் திடீரென்று ஒரு வளைவு தோன்ற, அதில் சரியாகத் திரும்ப நேரமில்லாமல் ஒரு மரத்தில் போய் இடித்து நின்று விட்டது பஸ்.

— ஆர். பாலாஜி, திருத்தணி.

வைக்கோல் உலர்த்தவா சாலை?

போக்குவரத்து அதிகமாக உள்ள சாலையில் கணவனும் மனைவியுமாக வைக்கோல் உலர்த்திக் கொண்டிருந்தனர். உச்சி வேளை வெயில் தாங்காமல் மனைவி மயக்கமுற்று விழுந்துவிட்டாள். அவசர அவசரமாக வைக்கோலை அள்ளிப் போட்டு அவளை மூடிவிட்டு, (வெயிலுக்குப் பாதுகாப்பாய்!) சாலையிலேயே விட்டுவிட்டுத் தண்ணீர் எடுத்துவரச்சென்றார் கணவர். அவர் திரும்புவதற்குள் அவ்வழியே வந்த பயணிகள் பேருந்து வைக்கோலுக்கடியில் கிடந்த பெண்ணைக் கவனியாமல் ஓட்டியதால் அப்பெண் அதே இடத்தில் இறந்து போனாள்.

— இராமு. இராஜேந்தர், பூத்தமங்கலம்.

இப்படியும் நேரக் கூடும்!

வேலைக்குச் சென்றுவிட்டுச் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார் என் கணவர். நெற்குன்றம் பகுதியில், எதிரே ஒரு லாரி வந்தது. மணலை இறக்கிவிட்டு வந்த அந்த லாரியின் பக்கக் கதவு சரியாகத் தாள் போடாமல் விடப்பட்டிருந்ததால், திடீரென்று திறந்து கொண்டது. அந்தச் சமயம் பார்த்து என் கணவர் லாரியைக் கடக்க, கதவு அவர் தோளில் தாக்கிப் புதரில் தூக்கி எறியப்பட்டார். நல்ல காலமாய்த் தோளில் காயத்தோடு தப்பினார்.

— கு. மாலதி குசேலன், சென்னை—92.

ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள்

லாரி ஓட்டுனரான என் நண்பர் தன் வழக்கப்படி லாரியை நிறுத்திவிட்டு எஞ்சினை அணைக்காமல், டயருக்கு அடியில் முட்டுக் கட்டை வைத்துவிட்டு டீ குடிக்கச்சென்றார். கட்டையை அகற்றிவிட்டு வண்டிக்குள் தாவி ஏறுவது அவர் வழக்கம். இம்முறை அப்படிச் செய்தபோது கால் தவறி, லாரிச் சக்கரங்களுக்கடியில் விழுந்து, இரண்டு கால்களையும் இழந்து ஊனமாகிவிட்டார்.

— எஸ். ராஜா, பாளையங்கோட்டை.

அஜாக்கிரதையால் ஆபத்து!

இரும்பு பீரோவின் மேல் வைத்திருந்த ஸூட்கேஸை அவசரமாக நெம்பி இழுத்தேன். ஸூட்கேஸின் மேல் வைக்கப்பட்டிருந்த கண்ணாடி சரசரவென்ற சப்தத்துடன் விழுந்து, சுக்கல் நூறாகியதுடன், பீரோவின் அருகே நாற்காலியில் அமர்ந்திருந்த என் அக்காவின் கழுத்தை நன்றாகப் பதம் பார்த்துவிட்டது. உடனே ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றதால் அவளைப் பிழைக்க வைக்க முடிந்தது. கண்ணாடி போன்ற பொருட்களை உயரமான இடத்தில் வைப்பதிலும், அஜாக்

கிரதையாகப் பொருள்களைக் கையாள் வதிலும் எவ்வளவு ஆபத்து இருக்கிறது!

— ஆர். சகினு பீவி, உளுந்தூர்பேட்டை.

பிறந்தநாளும் அதுவுமாய்...

பிறந்த நாளும் அதுவுமாகப் புதிய அயல் நாட்டு நைலக்ஸ் புடைவையை உடுத்திக் கொண்டு கிளம்பிய ஒரு பெண்மணி கடையில் நின்று காய்கறிகள் வாங்கிய போது, கடைக்காரர் ஏற்றி வைத்திருந்த மண்ணெண்ணெய் விளக்கிலிருந்த தீ, புடைவையில் பட்டு, புடைவை குபீர் என்று பற்றிக் கொண்டுவிட்டது. ஆஸ்பத்திரிக்கு அவசரம் அவசரமாக அழைத்துப் போயும் அந்தப் பெண்ணைக் காப்பாற்ற முடியாமல் போய் விட்டது. விளக்கைப் பாதுகாப்பான இடத்தில்வைப்பதன்மூலம்இந்தவிபத்துதவிர்க்கப் பட்டிருக்கலாம்.

— எஸ். ஸ்ரீராமன், சென்னை—78.

வேண்டாம் மொஸைக் தரை

இப்போதெல்லாம் புதிதாக வீடு கட்டுகிறவர்கள் குளியல் அறையில் மொஸைக் தரை போடுகிறார்கள். என் நண்பரின் தந்தை வயதானவர். மொஸைக் தரையில் ஸோப்பு நீரும் சேர்ந்து கொண்டு வழுக்கிவிடக் குளிக்கும் போது பாத்ரூமில் தடுமாறி விழுந்து தொடை எலும்பை முறித்துக் கொண்டார். ரொம்பக் காலத்துக்கு நடக்க முடியாமல் அவதிப்பட்டார்., குளியலறையில் தோற்றப் பொலிவுக்காக மொஸைக் போடுபவர்கள் ஓட்டைகளை உடைய ஒரு பலகை மீது நின்று கொண்டு குளிக்க வேண்டும். சோப்புத் தண்ணீர் ஓட்டைகள் வழியே வடிந்து விடுவதால் வழுக்காமல் இருக்கும்.

— டி. ஆர். நடராஜன், பூனே.

சாலை என்பது பொது இடம்

இரவு சுமார் பத்து மணி அளவில் எங்கள் வீட்டு வாசலில் ஸ்கூட்டர் ஒன்று விபத்துக்குள்ளாகி, அதை ஓட்டி வந்தவர் படுகாயமுற்றார். அவரை அவசர அவசரமாக ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு ஜி. எச். சுக்குப் புறப்பட்டோம். அப்போது எதிரில் வான் ஒன்று வந்து நின்றது. வானில் வந்தவர் தன் வீட்டுக்கு ஆழ் குழாய் இணைப்புத் தருவதற்காக வீதியில் பள்ளம் தோண்டியிருக்கிறார். பள்ளத்தைச் சரியாக மூடாததால் தான் ஸ்கூட்டர் ஓட்டி வந்தவருக்கு விபத்து நேர்ந்தது. இதை அறிந்ததும் விபத்துக்குக் காரணமாக இருந்தவர் மிகவும் வருந்தி, விபத்துக்குள்ளானவரைத் தாமே ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார்.

— பாகீரதி இராமநாதன், திருப்பத்தூர்.

இரவோடு இரவாக!

என் ஒன்றுவிட்ட சகோதரன் இரவுக்காட்சிக்குப் போய்விட்டுத் திரும்புகையில் திடீரென்று சாலையின் நடுவே முளைத்திருந்த அலங்கார வளைவை எதிர்பார்க்கவில்லை. மோட்டார் சைக்கிளை அதன் மீது மோதிவிட்டான். அவனுக்குக் கால் முறிந்ததோடு வாகனத்திற்கும் சேதம். அமைச்சர்களை வரவேற்பதற்காக இப்படிப் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கலாமா?

— ஏ. பி. முகுந்தகுமார், கோவை.

விளக்கு கட்டாயம் வேண்டும்


துளிக்கூட வெளிச்சமே இல்லாத சாலையில் டைனமோ இல்லாத சைக்கிளில் போய்க் கொண்டிருந்தான் என் நண்பன். எதிரே பளிச்சென்ற ஒற்றை விளக்கு ஒளி தெரியவே ஸ்கூட்டர் அல்லது மோட்டார் பைக்காக இருக்கும் என்று நினைத்தவாறு போனான். மிகச் சமீபத்தில் வந்த பிறகுதான் அது ஒற்றை லைட் மட்டுமே உடைய ஜீப் என்பது தெரிந்தது. நிலைதடுமாறி ஜீப் மீது விழுந்ததில் அவனுக்குப் படுகாயம் ஏற்பட்டுவிட்டது.

— கே. ராஜசேகரன், மதுரை — 7.

அதிகாலையில் ஓர் அதிர்ச்சி!

விடியற்காலையில், பொசுங்குகிற வாடை வரவே விழித்துக் கொண்டு சுற்றும் முற்றும் தேடினேன். அருகே படுத்திருந்த மனைவியின் நீண்ட கூந்தல் பாதிக்குமேல் எரிந்து போயிருந்தது! தலைமாட்டில் கொசுவத்திச் சுருளை ஏற்றி வைத்துக் கொண்டு தூங்கியதால் உண்டான வினை இது.

— எஸ். குஞ்சப்பன், சென்னை—33.



ப்ளோப்ளாஸ்ட் வழங்கும் வி. ஐ. பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

வீ. ரெங்கம்,
43, சன்னதித் தெரு,
ஸ்ரீவைகுண்டம்,
628 601.

ரத்தம் உறிஞ்சும் நூலகம்!

போடிநாயக்கனூர் நூலகத்தில் சிறிது நேரம் உட்கார்ந்தால் போதும் — உடம்பில் உள்ள இரத்தம் முழுவதும் உறிஞ்சப்பட்டு விடும். ஒவ்வொரு ஸ்டூல் சேரிலும் அந்த அளவுக்கு மூட்டைப் பூச்சிகள். இதனை நூலகரோ—மற்றும்பணியாளர்களோ,கண்டு கொள்வதில்லை. அதோடு அவர்கள் போடும் கூச்சல்களும் நூலகத்தின் அமைதியைக் கெடுத்து விடுகின்றன.

ஐயோ, வாசகர்கள், இவ்வளவு இரத்தம் கொடுக்கிறார்களே என்ற இரக்க எண்ணத்திலாவது இரும்பு நாற்காலிகளை வெயிலில் போட்டு மூட்டைப்பூச்சிகளை அகற்றக் கூடாதா? சரி, வேண்டாம், படிக்கும் வாசகர்களிடமாவது நாற்காலிகளை வெயிலில் தூக்கிப் போடச்சொன்னால் சந்தோஷமாகச் செய்வார்களே, நல்ல காரியத்தைத் தாங்களும் செய்ய மாட்டார்கள் — செய்பவர்களையும்விட மாட்டார்கள் என்ற நிலைதான்!

— கவிகண்ணன், போடிநாயக்கனூர்.

தியேட்டரில் நடக்கும் கொள்ளை

சென்ற வாரத்தில் ஒருநாள் சைக்கிளில் 'தேவி குரூப்' திரையரங்குக்குச் சென்றேன். சைக்கிள் ஸ்டாண்டில் சைக்கிளை விடச் சென்றபோது, ஸ்டாண்டில் இருந்த நபர் 35 பைசா கேட்டார். 'சைக்கிளுக்கு எல்லாத் தியேட்டரிலேயும் 15 அல்லது 20 பைசா தானே நீங்கள்,என்ன 35 பைசா கேட்கிறீர்கள்?' என்று கேட்டேன். அந்த நபரோ, '35 பைசா கொடுக்க இஷ்டமானால்கொடுங்கள். இல்லையென்றால் இடத்தைக் காலி செய்யுங்கள்' என்றார்.

என்னைப் போலவே சைக்கிளில் வந்த நபர்கள், படம் பார்க்க வேண்டும் என்ற ஆவலில், 'என்ன இவன் அஞ்சு பைசா பத்து பைசாவுக்குக் கணக்குப் பார்த்துக் கிட்டு இருக்கான்' என்று என்னைப் பார்வையாலேயே கேட்டுவிட்டுச் சைக்கிளை விட்டுச் சென்றனர். சரி என்று 35 பைசாக் கொடுத்து டிக்கெட் (டோக்கன்) வாங்கினால் கார் டிக்கெட் ரூ. ஒன்று என்ற டிக்கெட்டை என்னிடம் கொடுத்தார். நான், "என்ன கார் டிக்கெட்டைக் கொடுக்கிறீர்களே?" என்றதற்கு, "சைக்கிள் டிக்கெட் இல்லை. அதான்" என்றார்.

தேவி குரூப் தியேட்டரில் ஒரு நாளைக்கு சுமாராக ஆயிரம் சைக்கிள்களுக்கு மேல் வரும். ஒரு சைக்கிளுக்கு ஐந்து பைசா தானே அதிகம் கேட்கிறார்கள் போனால் போகிறது என்று நாம் கொடுத்தாலும் ஒரு நாளைய வருமானம் அதிகப்படியாக ஐம்பது ரூபாய் கிடைக்கிறது. ஒரு சைக்கிளுக்கு இருபது பைசா என்றால் ஒருநாளைக்கு அதிகப் படியாக இருநூறு ரூபாய் ஏ... அப்பா எத்தனைகொள்ளைஎன்றுயோசித்துக்கொண்டே வந்ததும், ஒரு நபர், 'என்ன சார் இதெல்லாம் தியேட்டருக்கும் இவர்களுக்கும் ஒரு கணக்கு. பிறகு எப்படி இதைக் கேட்பான்?' என்றார்.

இந்தப் பகல் கொள்ளையை யாராவது கேட்பார்களா?

— ஜி. டி. ராஜா, சென்னை — 28.



நான் எப்பொழுதும் தபால் கார்டுக்குப் பதிலாக அதே சைஸில் ஒயிட் கார்டை (Drawing Sheet) கட் செய்து வைத்துக் கொண்டு, எழுத வேண்டிய கடிதங்களை எழுதுவேன்! இப்படி எழுதுவதால் கார்டு சுத்தமாக — அழகாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம்! இந்தக் கார்டுக்கு, உரிய பதினைந்து காசு ஸ்டாம்புதான் ஒட்டுவேன். (அச்சடித்த கார்டுக்குத்தான் 25 பைசா ஸ்டாம்பு ஒட்ட வேண்டும்) ஆனால் சமீபத்தில் நான் அனுப்பிய கடிதங்கள் பல எனக்கே திரும்பி வந்துவிட்டன! அதுவும் இருபது காசு 'ட்யூ' போட்டு! காசைக் கொடுத்து என் வீட்டிலும் அதை வாங்கி வைத்துவிட்டார்கள். நியாயப்படி அந்தக் கார்டுக்குப் பதினைந்து பைசா ஸ்டாம்புதான் ஒட்ட வேண்டும் என்பது தெரியாமல், தபால்காரர்கள் இப்படி ஏனோதானோவென்று வேலை பார்ப்பது மனத்துக்கு எவ்வளவு எரிச்சலாகப்படுகிறது! பலமுறை போஸ்டாபீஸில் ரிப்போர்ட் செய்தும் இப்படியே அடிக்கொரு தரம் நடந்து கொண்டிருக்கிறது! உண்மையிலேயே தபால்கார்டு அச்சிடுவதால் அரசுக்கு எத்தனையோ நஷ்டமாகிறது! ஆனால் நான் செய்யும் முறையில் கவர்ன்மெண்டுக்கு எந்த நஷ்டமுமில்லை! இருந்தாலும் என்னை நஷ்டப் படுத்துகிறார்களே...?

— கா. சு. வேலாயுதன், கோவை — 16.

கிழக்கே ஓர் உலகம்

வாஸந்தி

11 கர்ணனின் குணம் கொண்டவர்கள்.

ஸ்வாமி பாஸ்கர ஆரண்யாவின் பூர்வாசிரமப் பெயர், பாஸ்கர ஐயர். காவி உடையும் சாந்தமான பார்வையும் பேச்சுமான அவரிடம் ஃபீஜியருக்கும் ஃபீஜி இந்தியர்களுக்கும் ரொம்ப மரியாதை இருப்பதை நான் கவனித்தேன்.

சுத்தத் தமிழில் என்னிடம் பேசினார். 1953 இல் சென்னையிலிருந்து ஃபீஜிக்கு வந்ததாகச் சொன்னார்.

''ராமகிருஷ்ண மிஷன் இங்கே பல நல்ல காரியங்கள் செய்து வருகிறது. இங்கே நமது கலாசாரமே இல்லாமல் இருந்தது. பிறமதப் பாதிப்பினால், பல ஹிந்துக்கள் கோவிலுக்குப் போய்க் கும்பிடுவது கூட அவமானம் என்று நினைக்க ஆரம்பித்துவிட்டார்கள். அந்தச் சமயத்திலே கல்கத்தாவிலிருந்து சுவாமி அவினஷாநந்தா வந்தார். அவருடைய வரவு இவர்களுடைய வாழ்க்கையிலே பெரிய மாறுதலை ஏற்படுத்திவிட்டது.''

''இந்தியாவிலே தற்கால இந்தியர்களிடம் இல்லாத பண்பும் அடக்கமும் மரியாதையும் பிரியமும் ஃபீஜி இந்தியர்களிடம் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.'' என்றேன்.

''உண்மை. இவர்கள் எளிமையான ஜனங்கள். கஷ்டப்பட்டு, இந்தநிலைமைக்கு வந்திருக்கிறவர்கள். தவிர உள்ளூர ஓர் ஏக்கம்: இந்தியப் பண்பாடு ரொம்ப உயர்ந்தது; தங்களுக்கு அதைப் பற்றிய தெளிவான அறிவு கிடையாது; இங்கே ஏற்பட்டுப் போன கலப்படத்திலே பாரம்பரியத்தைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் வாய்ப்பே போய் விட்டது என்பதாக ஒரு வருத்தம் இருக்கிறது. அதனால் இந்தியாவிலிருந்து யார் வந்தாலும் ரொம்பப் பிரியம் காட்டுகிறார்கள்.

''இன்னொரு பக்கத்தில் ஃபீஜியர்கள். இவர்களிடம் உழைப்பும், படிப்பும் இந்தியர்களுடன் ஒப்பிடும்போது குறைவு என்றாலும் சில அம்சங்களில் நம்மை விடவும் சிறந்த பண்பாடு உடையவர்கள். உதாரணமாக யாராவது ஒரு பொருளைக் கேட்டால் அது தன் வசம் இருந்தால் ஒரு ஃபீஜியன் கொடுக்காமல் இருக்க முடியாது. அது எத்தனை விலைபெற்ற பொருளானாலும்! இதனாலேயே ஃபீஜியனுக்குப் பொருள் சேர்க்கிற வழக்கமே இல்லை! சேர்த்தால் அதற்கு அவனால் சொந்தம் கொண்டாட முடியாது! பொருளாதார ரீதியிலே ஃபீஜியர் முன்னேறுவதற்கு இந்த மரபு முக்கிய காரணம். சேமிக்கிற குணமும் இதனாலேயே இவர்களுக்குக் கிடையாது. கொடுத்த வாக்கை மீறுத குணமும் உண்டு. இத்தனை நல்ல குணங்கள் இவர்களிடம் இருப்பதினால்தான் எத்தனையோ வித்தியாசங்களுக்கு இடையில் இங்கே இந்தியர்களும் ஃபீஜியர்களும் ஒற்றுமையாக இருக்க



• சுவாமிஜியின் ஆசிரமம்.

முடிகிறது. சலசலப்போ, கைகலப்போ வெளிப்படையாக ஏற்பட்டதில்லை. இருக்கிற சில வித்தியாசங்களும் வெள்ளைக்காரனால் அவனுடைய சுயநலனுக்காக ஏற்படுத்தப் பட்டவை.''

சுவாமிஜியிடம் பேசிக் கொண்டிருந்த போது என் மனம் சற்று லேசாகியிருந்தது. பட்டேலின் பயங்கள் அதீதமானவை என்று தோன்றின.

மேற்கொண்டு அரசியல் பேச விரும்பாதவர் போல் சுவாமிஜி எழுந்தார். ''வா என்னுடைய கீதா ஆச்ரமத்தை உனக்குக் காட்டுகிறேன்'' என்றார்.

எழுபத்தைந்து வயதுக்கு மேல் ஆனாலும் தினமும் நடந்து சென்று கட்டிட வேலையை மேற்பார்வை பார்த்துவிட்டு வருவதாகச் சொன்னார் சுவாமிஜி. கட்டிடத்திற்குள் ஃபீஜியரும் ஃபீஜி இந்தியருமாக மும்முரமாக வேலையில் இருந்தார்கள்.

தியானக் கூடம், அலுவலகம், விருந்தினர் அறை, சமையல் அறை, கீழ் தளத்தில் மிகப் பெரிய வாசகசாலை (எல்லாத் தேசத்துத் தத்துவப் புத்தகங்களும் இருக்குமாம்.) ஆகிய இடங்களை சுவாமிஜி உற்சாகத்துடன் காண்பித்தார். கணபதி ஸ்தபதி இங்கு வந்து ஆசிரமக் கட்டிடத்திற்கான வரை படம் போட்டுக் கொடுத்ததாகச் சொன்னார்.

ஃபீஜி நகரமான 'பா'விலிருந்த புனித

ஜேவியர் கல்லூரியில் சுவாமிஜி சில காலம் ரசாயனம் போதித்திருக்கிறார். கல்லூரியின் முதல்வர் பாதிரி டேவி, சுவாமிஜியிடம் மிகுந்த ஆர்வத்துடன் யோகம், தியானம் ஆகியவற்றையும் ஹிந்து தத்துவத்தையும், கீதையையும் கற்றாராம். அந்தக் கிறிஸ்துவக் கல்லூரியில் இந்திய மாணவர்களுக்காக இந்து மத வகுப்புக்கள் நடத்தும்படி கேட்டுக் கொண்டாராம்.

உண்மையான பழைய கால ஃபீஜியரின் கிராமம் ஒன்றை நான் பார்க்க விரும்புவதாகப் பேச்சுவாக்கில் சொல்லியிருந்ததைச் சிரமேற்கொண்டு, சனிக்கிழமை விடுமுறை பாழாவதைப் பொருட்படுத்தாமல் தன் பளபளக்கும் டாட்ஸன் காரை எடுத்துக்கொண்டு ஹெட் மாஸ்டர் ரெட்டி என்னை அழைத்துப் போக வந்தார்.

'நாவலா' என்ற அந்தக் கிராமம் 'பா'விலிருந்து சுமார் முப்பது நாற்பது மைல் தொலைவில் இருந்தது. அந்தக் கிராமத்தின் தலைவனது தங்கை ஒரு கன்யா ஸ்த்ரீ. அவரும் உடன் வந்தார்.

நாவலா மிக அழகிய புராதன கிராமம். எல்லாம் கனமான கூரை வேய்ந்த குளிர் காலத்தில் அடக்கமாகவும் வேனிற்காலத்தில் குளுமையாகவும் இருக்கும்படியான குடிசைகள். முன்னறிவிப்பின்றி நாங்கள் சென்றதால் தலைவனும் மற்ற ஆண்களும் நகருக்கு வேலையாகச் சென்று விட்டிருந்தார்கள். ஸிஸ்டர் என்னைத் தன் அண்ணன்



* போஸ் கொடுத்த ஜப்பானிய அழகிகள்.

வீட்டிற்கு அழைத்துச் சென்று, அங்கு யாருமில்லாவிட்டாலும் பாயில் அமர்த்தி வெகு பிரியமாக உபசரித்தார்.

பேச்சினிடையில் திடீரென்று ஸிஸ்டர் இந்திராகாந்தியின் மரணத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்.

''ஒரு பெண்ணைச் சுட்டுத் தள்ளுவதற்கு எப்படி மனசு வந்தது? எப்படிப்பட்ட கிராதகம் அது! செய்தி கேட்ட பிறகு எனக்கு ஏற்பட்ட துக்கத்தை நான் எப்படி விவரிப்பேன்? அன்று முழுவதும் நான் யேசுவின் சன்னதியில் மண்டியிட்டு அழுதேன்!'' என்றார்.



* சுவாமி பாஸ்கர ஆரண்யா.

அவர் வார்த்தைகளை என்னால் நம்ப முடிந்தது. அவர் கண்களிலிருந்து புதிதாகக் கண்ணீர் வடிந்தது!

வன்முறை இன்னும் நுழையாத இந்தத் தீவுகளில்



* மானுத் தீவில் இறங்கும் பயணிகள்.

இதுபோன்ற செய்திகளும், செயல்களும், செயல்களுக்குப் பின்னால் இருக்கும் மன வக்கிரங்களும் கிரகித்துக் கொள்ள முடியாத அதிர்ச்சியைத்தான் கொடுக்கும் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையை உல்லாசமாகக் கழிக்க ''மானுத்தீவு'' என்ற ஓர் அழகிய தீவுக்கு வசந்தியுடன் செல்ல ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அது ஒரு மிக இனிமையான அனுபவமாக இருந்தது. அந்தத் தீவுக்கு மிக வசதியான நீராவிக் கப்பல்கள் நேரம் தவறாமல் பயணிகளை அழைத்துச்செல்கின்றன. கப்பல் முழுவதும் ஆஸ்திரேலியர்கள், ஜப்பானியர், நியூஜிலாந்துக்காரர்கள். வழியில் இருந்த சில சின்னத் தீவுகளில் சிலர் இறங்கிக் கொண்டார்கள். 'மானுத்'தீவு கடைசி. எல்லாவற்றையும் விடப் பெரியது. கரை சேர்ந்ததுமே ஃபீஜி இளைஞர்கள் தங்கள் தேசிய உடையில், ''புலா'' என்று பளிச் சென்று சிரித்து வரவேற்றார்கள். மிக அழகிய தீவு. தீவைச் செயற்கையாகவும் அழகுபடுத்தியிருந்தார்கள். நெடுகத் தென்னையை நட்டிருந்தார்கள். அங்கே தங்க விரும்புபவர்களுக்குச் சகல நவீன வசதிகளுடன் ''புரே'' (குடில்)க்கள். தீவு முழுவதும் மகா சுத்தம். தேங்காய்



* மிக அழகிய தீவு மாரு — சில காட்சிகள்.

கள், முதிர்ந்து போவதற்கு முன் பறித்துவிடுகிறார்கள். உல்லாச விருந்தினர்கள் தலைமேல் விழுந்துவிடக் கூடாது என்று!

நானும் வசந்தியும் வெளியில் ஓர் உலகம் இருப்பதையே மறந்து கடலில் தனித்தனியே படகைச் செலுத்தினோம். இரண்டு ஜப்பானியப் பெண்கள் Wind Surfing செய்வதில் அசகாய சூரத்தனம் காண்பித்தார்கள். நான் புகைப்படம் எடுக்க அழகாக போஸ்கொடுத்தார்கள்.

தன் சொந்தத் துக்கத்தை மறந்து என்னை இங்கு அழைத்து வந்த வசந்தியின் விருந்தோம்பல் பண்பை நினைத்து நினைத்து நான் நெகிழ்ந்து போனேன்.

மறுநாள் ஃபீஜியின் தலைநகருக்கு டிலக்ஸ் கோச்சில் பயணமானேன். மிக நெருக்கமானநிகழ்ச்சிநிரல்அங்குளனக்குக்காத்திருந்தது. போதாக்குறைக்கு நானாக ஒரு சந்திப்பை ஏற்படுத்திக் கொண்டேன். கிர்மிட் காலகட்டத்தில் வந்து இன்னும் உயிரோடு இருந்த இரண்டு பேர்களைச் சந்தித்துப் பேசிய அந்த அனுபவம் மறக்க முடியாதது!

* வெளியில் ஓர் உலகம் இருப்பதையே மறந்து....



(தொடரும்)

* என் நண்பன் ஒருவன் 'கும்பக்கரை' அருவியில் குளிக்கப் போய் இறந்தான் என்ற வருத்தமான செய்தியைத் தெரிவிக்கிறேன். அவன் பெயரும் (ஆர். வேணுபாலச்சந்தர்) அந்த அருவியில் இறந்தவர்களின் பட்டியலில் அடங்க வேண்டியதே ஆகும்.

கொடைக்கானல், வெ. பாலன்.

* 'ஒரு தந்திரமும் ஓர் வஞ்சனையும்!' தலையங்கம் கண்டேன். 'கல்கி'க்கே உரிய தனி பாணியில் அழகாக இருந்தது.

வடலூர், ஆர். ரமேஷ்.

* மதுரை மாவட்டத்தில் கண்டறிந்த குறைகளை வாசகர்களுக்குக் கூறுவதோடு நில்லாது இன்னும் ஒரு படி மேலே சென்று, மக்களின் பிரதிநிதியாக, மாவட்ட ஆட்சியாளரைச் சந்தித்துக் குறைகள் களைய வழி வகுத்தமைக்குப் பாராட்டுக்கள். பத்திரிகைகள் என்பது வெறும் செய்தித் தாள்கள் மட்டுமல்ல. அவை



தூய தொண்டு தொடரட்டும்!

சமுதாய மேம்பாட்டுச் சாதனங்களுமாகும் என்பதை உண்மை உள்ளத்துடன் செயல்படுத்திய தங்கள் தூய சமுதாயத் தொண்டு தொடரட்டும்.

திருமங்கலம் கே. நாராயணன்.

* சமுதாய பிரச்னைகளுக்கு மட்டும் முக்கியத்துவம் தராமல், தனி மனித சோகங்களுக்கும் முன்னுரிமை தரும், உங்கள் மாறுபட்ட மனோபாவம் நெகிழ வைக்கிறது!

வேலப்புதம்பாளையம், எம். சம்பத்.

* மக்களுக்குத் 'தண்ணி' காட்டி வந்த தமிழக அரசுக்குத் தமிழ்நாடு ஹவுஸிங் போர்டு தண்ணி காட்டிய செய்தியைப் படித்துப் பிரமித்தேன்! தமிழக அரசின் மூக்கே அறுந்து போச்சு சார்!

கவுந்தப்பாடி, ராம்தினகர்.

* தராசுவின் 'மனித நேயம்தான் எல்லாவற்றையும் விடச் சிறந்தது' என்பதன் மூலம் தமிழ்ப் பத்திரிகைகளில் 'கல்கி'யை வேறுபடுத்தி உயர்த்திவிட்டீர்கள். தொடரட்டும் அன்பும், நடுநிலைமையும்.

க. உப்பிலிபாளையம், இரா. நல்லசாமி.

* ஹம்மாடி! அதுவும் அந்தக் கடைசி வரிகள், 'தனியே குத்துக்காலிட்டுத் தேம்பி அழத் தொடங்கினான்' — வாசகர்கள் மனத்தில் ஓர் அழுத்தமான பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. மேலும் தொடர்ந்து அளியுங்கள் திரைவிழாப் படக்கதைகளை!

திருமங்கலம், நா. ராகவன்.

* ஆண்டிப்பட்டி தொகுதியில் உள்ள ஆண்டிப்பட்டி, கடமலைக் குண்டு ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் எதிர்க்கட்சி வேட்பாளர்கள்தான் வெற்றி பெற்றுள்ளனர் எனக் கட்டுரையாளர் எழுதியிருக்கிறார்; அது தவறு. ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் அ. இ. அ. தி. மு. க. வைச் சேர்ந்த பாண்டித்துரைதான் வெற்றி பெற்றுள்ளார் என்ற உண்மையான விவரத்தைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

போடிநாயக்கனூர், எஸ். சையது முகமது.

* 16.3.86 கல்கி இதழில் மின்வாரியத்தைப் பற்றி உமது நிருபர் விளாசிக் கட்டியிருந்தார். ஒரே ஒரு கேள்வி. மின்வாரியத்துக்கும் ரே. கோ. காலனிக்கும் என்ன சம்பந்தம்? மதுரையில் மின் விநியோகம் செய்வது மின்வாரியம் அல்ல; மதுரை கார்ப்பரேஷனின் மின் இலாகா!

பெரம்பலூர், அ. சிங்காரவேலு.

* கடந்த 9.3.1986 'நீங்கள் கேட்டவை' பகுதியில் வங்கிகளில் போதுமான ஆட்கள் இருந்தும் வேலைகள் மோசமாக நடப்பதற்குக் காரணம் கேட்டதற்கு நீங்கள் மிக மோசம் என்று ஊர்ஜிதம் செய்திருக்கிறீர்களே தவிர காரணங்களைக் கூறவே இல்லையே?

கனரா வங்கியைத் தவிர வேறு எந்த வங்கியிலும் கிளார்க்குகளுக்கு வேலையில் மாற்றம் (Transfer) கிடையாது; மேலும் நிர்வாகம், மானேஜர்களிடமிருந்து கிளார்க்குகள் பற்றிய Confidential Report கேட்பதே இல்லை. வங்கிகளில் கிளார்க்குகளுக்கு அவர்கள் வேலையில் எப்படி இருந்தாலும் தொடர்ந்து இருபது வருடங்களுக்கு இன்கிரிமெண்ட்டை நிறுத்த முடியாது; இரேட் பார் என்றும் ஒன்றும் கிடையாது; அவர்கள் வாங்கும் சம்பளத்திற்கும் அவர்கள் பொறுப்பிற்கும் சம்பந்தமே இல்லை. இதுதான் காரணம்!

மதுரை, கே. எல். ரகுபதி.

* மதுரை மாவட்ட மலர் பார்த்தேன். அநேக பேட்டிகளில் உங்கள் நிருபர் பெயரே போட்டுள்ளீர்கள். உங்களுக்குத் தகவல் தெரிவித்த நபர்களின் பெயரே காணோமே? இந்த ஓரவஞ்சனை ஏன் ஸ்வாமி!

ஈரோடு—10, ராஜு. சௌந்தர்.

(தங்களுடைய பெயர் வெளிவர வேண்டாம் என்று கேட்டுக்கொண்டவர்களைத் தவிர மற்ற அனைவருடைய பெயர்களும் சம்பந்தப்பட்ட பேட்டிக் கட்டுரைகளில் வெளி வந்துதான் இருக்கின்றன. — ஆசிரியர்)

* "டாக்டர், என் பையன் எப்போப் பார்த்தாலும் சிரிச்சுக்கிட்டே இருக்கான்..."

"16.3.86 இதழ் கல்கியை அவன் கையில் குடுங்க! அப்புறம் சிரிக்கவே மாட்டான்; சீரியஸ்ஸாயிடுவான்!"

சென்னை—17. எஸ். இந்திரா.



திரைவிழாப் படக்கதை: 9

பள்ளிக்கூடம் பிரும்மாண்டமாக, கம்பீரமாகக் காட்சியளித்தது. ஒரு பத்துப் பதினைந்து படிகள். நீளமான படிகள். மாணவர்கள் உற்சாகமாக அந்தப் படிகளில் ஏறினார்கள். பேசினார்கள். பள்ளிக்கு முன்னால் ஓர் உயரமான கம்பத்தில் கொடி பறந்தது. அந்தக் கொடியிடம் ஒரு 'கர்வம் இருந்தது. நான் அமெரிக்கக் கொடி என்ற பிரதாபம் இருந்தது.

ஆண்டி நோரிஸ் காரை நிறுத்தினான். ஒரு பிரமிப்புடன் யாவற்றையும் பார்த்தான். இந்த இளமையான, துடிப்பான, விதவிதமாக உடை அணிந்த மாணவர்கள் அவனுக்கு ஓர் உற்சாகத்தைக் கொடுத்தனர்.

'இந்தப் பள்ளியில்தான் நாம் வேலை செய்யப் போகிறோம்' என்று வெகு உற்சாகத்துடன் நினைத்தான். வரப்போகும் நாட்களைப் பற்றி அறிந்திருந்தால் அவன் அப்படி நினைத்திருக்க மாட்டான். உடன் காரைத் திருப்பிக் கொண்டு போயிருப்பான்.

பீட்டர் ஸ்டெக்மென் தன் சகாக்களுடன் அந்தப் படிகளில் ஏறினான். கூடவே அவர்களுடைய ஹஹ்ஹா சிரிப்பு. எதிர்ப்பட்ட மாணவியின் பின் பக்கத்தைத் தட்டும் 'பட் பட்' சத்தங்கள், பூனையைக் கண்ட எலி போல் மற்ற மாணவர்களின் ஒதுங்கல்கள்.

பள்ளி காரிடாரின் ஆரம்பத்தில் செக்யூரிட்டி ஆஃபீஸர்கள் நின்றிருந்தார்கள். ஒவ்வொரு மாணவனாக அனுமதித்தார்கள். மெட்டல் டிடெக்டர் வைத்துப் பரிசோதித்தார்கள். சின்னச் சின்ன கத்திகள், பிளேடுகள் ஆகியவை மாணவர்களிடமிருந்து அகற்றப்பட்டன.

ஆண்டி நோரிஸ் பிரின்ஸிபாலுடன் கை குலுக்கினான்.

பிரின்ஸிபால் சக ஆசிரியர்களை அறிமுகப் படுத்தினார்.

''இது மைக்கேல் ஃபாக்ஸ். பயாலஜி டீச்சர்.

''ஹலோ.... ஹவ் டூ யூ டூ?''

''ஹலோ....'' என்றார் பயாலஜி டீச்சர். கன்னங்களில் லேசாகச் சுருக்கம் விழுந்து, லேசாக முதுமையைத் தொட்டுவிட்ட, அலையும் கண்களையுடைய பயாலஜி டீச்சர். ''உங்கள் குறுந்தாடி கவர்ச்சியாக இருக்கிறது'' என்றார்.

''தாங்க் யூ'' என்றான் ஆண்டி நோரிஸ்.

பீட்டரும் அவன் சகாக்களும் டாய்லெட் அறையில் இருந்தனர். சுவர் முழுக்க வண்ணப் பென்ஸில்களால், பேனாக்களால் கிறுக்கப்பட்ட டாய்லெட் அது. அனாடமி வகுப்பை யாரோ அங்கே நடத்தியிருந்தார்கள் போல. அதிலும் பெண்களின் படங்கள் பாகங்களுடன் மிகத் துல்லியமாக. நிறைய கெட்ட வார்த்தைகள். ஏதோ ஓர் ஆண் மகன், யாரோ ஒரு பெண்ணை.... சொல்லக் கூச்சமாய் இருக்கிறது.

பீட்டர் ஸ்டெக்மென் பையிலிருந்து ஒரு சிறிய பாக்கெட்டை எடுத்து ஒரு மாணவனுக்குக் கொடுத்தான். அந்த மாணவன் உலகமே கையில் கிடைத்ததுபோல் மகிழ்ந்து வெளியேறினான். அப்புறம் இன்னும் சில மாணவர்

இன்று அமெரிக்காவில்...

..நாளை இந்தியாவில்?

கள்! ஹெராயின் எத்தனை பேரை அடிமைப் படுத்தியிருக்கிறது!

மாலை பள்ளிவிட்டபோது மாணவர்கள் வெளியே ஓடி வந்தார்கள்.

உயரமான கொடிக் கம்பத்தைப் பார்த்துத் திடுக்கிட்டார்கள்.

கொடிக் கம்பத்தில் அந்த ஹெராயின் மாணவன் ஊசலாடினான். உளறினான். அபாயகரமான ஊசல் அது. மாணவர்கள் 'திக் திக்' நெஞ்சங்களுடன் சுற்றி நின்று, அண்ணாந்து பார்க்க, ஆன்டி நோரிஸ் கூட்டத்தைப் பிளந்து முன்னே வந்து பார்க்க, தூரத்தில் ஸைரன் ஒலி கேட்கத் தொடங்கி, அது தீவிரமான ஒன்றாய் மாறிய நேரம்....

".....ஆகையால் எனது அன்பான தோழர்களே..,.. இந்தக் கொடி, எனது நாட்டுக் கொடி.... இதை நான்...." மேலே முடிக்க முடியாமல் அந்தக் கொடியைப் பற்றி அந்த மாணவன் தன்னுடைய போதை தோய்ந்த கரங்களால் இழுக்க —

கொடி அறுந்து போய் பாரம் தாங்க முடியாமல் புவி ஈர்ப்புக்குக் கட்டுப்பட்டு, கன வேகமாகக் கீழே இறங்க —

'தட்.'

அவன் ரத்தச் சிதறலாய் இருந்தான். முகத்தில் கடைசி வினாடியின் வலி. காற்றில் கொடி பறந்து மெல்ல அவனை மூட, கூட்டம் மொத்தமும் பிரமை அடித்துப் போய் நின்றது.

ஆன்டி நோரிஸ் பரிதாபப்பட்டான். கண் முன்னே ஒரு மாணவனின் மரணம். மைக்கேல் ஃபாக்ஸ் அந்த அலையும் விழிகளுடன் ஆன்டி நோரிஸைப் பார்த்தார்.

"இந்த மரணத்திற்கு யார் காரணம் தெரியுமா, நோரிஸ்?"

"யார்?"

"பீட்டர்ஸ்டெக்மென்" என்றார் பயாலஜி டீச்சர்.

அந்த டாய்லெட் கதவை மோதிக் கொண்டு உள்ளே நுழைந்தான் ஆன்டி நோரிஸ்.

உள்ளே பீட்டர், அட்டகாசமான சிரிப்புடன். கூடவே அவனுடைய சகாக்கள். சகாக்களில் அந்தப் பெண்ணும் கூட. அகல விழிகள். தொடை தெரியத் தெரிய அணிந்திருந்த பான்டீஸ்.

ஆன்டி நோரிஸின் கோப முகத்தைப் பார்த்து அவர்கள் விலக, பீட்டர் மட்டும் தனியாக நின்று அலட்சியமாக ஆன்டி நோரிஸை எதிர் கொண்டான்.

"நீதானே அந்த மாணவனுக்கு ஹெராயின் கொடுத்தாய்?"

"நோ."

"நீதானே அந்த மாணவன் செத்துப் போகக் காரணமாய் இருந்தாய்?"

"நோ."

ஆன்டி நோரிஸின் கை நரம்புகள் புடைத்தன. கட்டுப்படுத்திக் கொண்டான். பீட்டரை முறைத்தான். பீட்டர் சடாரென்று தன் நெற்றியைச் சுவரில் இடித்தான். ரத்தம். தன் மோவாயை வாஷ்பேஸினில் இடித்தான். ரத்தம். கன்னத்தைச் சுவரில் மோதினான். ரத்தம்.

சத்தம் கேட்டு மாணவர்கள் உள்ளே வர, "என்னையா அடித்தாய்.... ரத்தம் வருமளவுக்கு என்னையா அடித்தாய்?" என்று கேட்டான் பீட்டர்.

ஆன்டி நோரிஸை பிரின்ஸிபால் எச்சரித்தார். மாணவர்களிடம் இன்னும் மென்மையாக நடந்து கொள்ள வேண்டும் என புத்தர் பேரல் எச்சரித்தார்.

ஆன்டி நோரிஸ் தலையைக் குனிந்து கொண்டு வெளியேறினான்.

அன்று இரவு ஆன்டி நோரிஸ் தன் மனைவியுடன் படுக்கையறையில் இருந்தான். நோரிஸ் மூடில் இல்லை என்று அவளுக்குத் தெரிந்தது. அவனது தலைமுடியைக் கைகளால் துழாவினாள். அவனது கவர்ச்சியான குறுந்தாடியை வருடிவிட்டாள். ஆன்டி நோரிஸ் ஒரு மயக்கத்தில் ஆழ்ந்து மெல்லக் கண்களை மூடிய நேரம் வெளியே ஒரு வெடிச் சத்தம் கேட்டது. அவசர அவசரமாக எழுந்து வந்து பார்த்தான் நோரிஸ்.

அவனது அழகான கார், சீறி விளையாடிய சிங்காரி, நெருப்புப் பிழம்பாய் மாறியிருந்தது. ஆன்டி நோரிஸ் முகத்தைப் பொத்திக் கொண்டு 'நோ' என்று கத்தினான். தூரத்தில் பீட்டரும் அவனுடைய சகாக்களும் ஆர்ப்பாட்டமாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

ஆன்டி நோரிஸ் அந்த அபார்ட்மென்ட் வாசலில் காத்திருந்தான். பொறுமையற்றுப் போய் இன்னொரு முறை மணியடித்தான். சடாரென்று கதவு திறந்து அந்தப் பெண் தெரிந்தாள். "யார் நீ?" என்று குரைத்தாள்.

இந்த வாரம் மீண்டும் பாக்யராஜ்!

சென்னை ஃபிலிம் இன்ஸ்டிடியூட் மாணவர்களுடன் ஒரு சந்திப்பு ஏற்பாடு ஆகியிருக்க —

ஒரு மாணவர் மேடைப் பேச்சாளர் போல் 'பேரன்புமிக்க....' என்று தொடங்கிச் சுயபிரதாபத்தைப் பாட, ஒரு மாணவர் காலணு கவிதையால் கவனத்தைக் கவர ஈடுபட, மாணவர்கள் தங்களுடைய அமைதியின்மையை ஆரவாரங்களினால் காட்டினார்கள்.

இரண்டொரு மாணவர்கள் மட்டுமே, சினிமாவைப் பற்றி, அந்த சினிமாக்களால் அவர்களிடம் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி பேசினார்கள். அவர்கள் நிச்சயம் முன்னுக்கு வரப் போகிறார்கள்.

வேறு பல மாணவர்கள் சினிமாவை விட்டு பாக்யராஜைப் பிடித்துக் கொண்டார்கள்.

'நீங்கள் ஏன் புதிய வார்ப்புகளில் அப்படி செய்தீர்கள்!'

'நீங்கள் ஏன் சின்ன வீட்டை இப்படிச் செய்தீர்கள்?'

முன்னுக்கு வந்தவனைப் பார்த்து ஏற்படுகிற பொறாமையால் தொடுக்கப்படுகிற கேள்வி அம்புகள் மட்டுமே தங்களிடம் மிகுதியாக உள்ளன என்று நினைக்கச் செய்தார்கள்.

'அனுபவம்தான் ஒரு மனிதனை முழுமையாக்க முடியும்' என்ற பாக்யராஜின் சித்தாந்தம் மறுக்கப்பட்டது.

அவர்கள் இன்ஸ்டிட்யூட்டில் படித்துவிட்டு சினிமாக்காரர்களிடம் உதவியாளர்களாகச் சேர்வதை பெருத்த அவமானமாகக் கருதுகிறார்கள் என்று இன்ஸ்டிடியூட் பிரின்ஸிபால் பேசியதிலிருந்து கிரகிக்க முடிந்தது: ''எங்கள் கல்லூரியில் படித்த மாணவர்களில் பெரும்பாலோர் இந்தியா முழுவதிலும் உள்ள டீ.வி. ஸ்டேஷன்களில் காமிரா மேன்களாகவும், டைரக்டர்களாகவும் பணியாற்றுகிறார்கள். அப்படியிருக்கும் போது அவர்கள் சினிமா இண்டஸ்ட்ரியில் இன்னொரு டைரக்டரின் கீழ் உதவியாளனாகச் சேர்வதா? என்கிற ரீதியில் பிரின்ஸி பேசியது கொஞ்சம் மன வருத்தத்தை அளிப்பதாகவே உள்ளது.

இவர்கள் தங்கள் ''ஈகோ'வைக் களைந்து யதார்த்த உலகிற்கு வந்தால் என்ன?



''நீங்கள்தானே பீட்டரின் அம்மா?''

''நீ யார்?''

''நான் பீட்டரின் பள்ளியில் பணிபுரியும் ம்யூஸிக் டீச்சர்.''

''ஸோ வாட்?''

''உங்கள் மகனை நீங்கள் கண்டிக்க வேண்டும்.''

''உனக்குக் கற்றுக் கொடுக்கத் தெரியவில்லை. என் பேபியைக் கண்டிக்கச் சொல்கிறாய். கெட் அவுட். யூ ஸன் ஆஃப் எ பிட்ச்''

ஆண்டி நோரிஸ் அதிர்ந்து போன அதே சமயம், மாடிப் படிகளில் பீட்டர் இறங்கினான். ''மாம்'' என்றான்.

''என் கண்ணே' என்று அந்தப் பெண் திரும்ப, பீட்டர் அவள் அருகில் வந்து அவள் கன்னத்தோடு கன்னமிழைத்து ''ஸ்வீட் மாம்'' என்றான். ஆண்டி நோரிஸுக்கு டாட்டா காண்பித்தான்.

நோரிஸுக்கு ரத்த அழுத்தம் எகிறியது. அந்தவாசலைவிட்டுவிலகிலிஃப்டில் அத்தனை மாடிகளையும் விழுங்கிக் கீழே வந்தான். பீட்டரின் கார் அவனை 'வா' என்றது. போனான். திறந்தான். அமர்ந்தான். சீறினான்.

நிறையத் தூண்கள் நிறைந்த, கார்கள் நிறுத்தப்படுகிற அந்தப் பெரிய கூடத்தில் பீட்டரின் கார் திணறியது. கான்க்ரீட் தூண்களை முத்தமிட்டு, முத்தமிட்டு..... இனி கார் ஒன்றுக்கும் உதவாது என்று ஆனபிறகுதான் நோரிஸ் சமாதானமடைந்தான்.

ஏறக்குறைய ஸ்கூலே அமளிப்பட்டுக் கொண்டிருக்க, உள்ளே நுழைந்த ஆண்டி நோரிஸ் கூட்டம் மொய்த்திருந்த பயாலஜி லாப் பக்கம் போனான். கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

பரிசோதனைக்கூடம் சின்னாபின்னமாகியிருந்தது. சோதனைக்காகவைக்கப்பட்டிருந்த முயல்கள் எல்லாம் சாகடிக்கப்பட்டு, தோலுரிக்கப்பட்டு, சின்னச் சின்ன சிகப்புப் பிண்டங்களாகக் காட்சியளிக்க, அந்தச் சோதனைக்கூடத்தை பீட்டர் ஸ்டெக்மெனின் மாணவச் சூறாவளி தாக்கியிருந்தது.

நடுவில் பயாலஜி டீச்சர்! உயிரோடுதான் இருந்தார். விசித்துக் கொண்டிருந்தார். அந்தக் கோரத்தை அவர் தாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்க ஆண்டி நோரிஸ் அவர் அருகில் சென்று அவரைத் தட்டிக் கொடுத்தான்.

''என் முயல்கள்.... என் சோதனைக் கூடம்... என் உயிர்'' வார்த்தைகள் வராமல் துடித்தார் மைக்கேல் ஃபாக்ஸ்.

மறுநாள்.

பயாலஜி டீச்சர் அறைக்குள் அமைதி. மயான அமைதி. அறைக்குவெளியேபிரின்ஸிபாலும் செக்யூரிட்டி காவலர்களும் கைகளைப் பிசைந்தார்கள். ஆண்டி நோரிஸுக்கு ஆள் போயிருந்தது. நோரிஸ் வந்து, அந்த அமைதியில் கலந்து, மெதுவாக, மிக மெதுவாக அந்த அறைக்குள் எட்டிப்



பார்க்க....

மைக்கேல் ஃபாக்ஸ் பயாலஜி நடத்திக் கொண்டிருந்தார். கையில் துப்பாக்கியுடன்! துப்பாக்கி முனையில் பீட்டரை, அவன் சகாக்களைக் கேள்வி கேட்க, அவர்களின் முகத்தில் பய சமுத்திரம்.

''சொல். என் கேள்விக்குப் பதில் சொல்'' என்றார். நெற்றியை நோக்கித் துப்பாக்கியை நிறுத்தினார். தப்போ சரியோ பதில் சொன்னார்கள் நடுங்கியவாறே. விசையில் மைக்கேல் ஃபாக்ஸ் ஆட்காட்டி விரலை வைத்திருக்க, எந்நேரமும் துப்பாக்கி செயல்படக் காத்திருக்க, ஆண்டி நோரிஸ் பூனைப் பாதங்களுடன் உள்ளே நுழைந்து, மைக்கேல் ஃபாக்ஸை அப்படியே பிடித்து அணைக்க —

துப்பாக்கி வெடித்தது. கூரைச் சில்லைப் பெயர்த்தது.

''என் கேள்விகளுக்கு இன்று பதில் சொன்னார்கள் நோரிஸ்'' என்றார் மைக்கேல்.

பீட்டர் ஸ்டெக்மென் சகாக்களுடன் ஆலோசனை நடத்தினான். யாவற்றுக்கும் ஆண்டி நோரிஸ்தான் காரணம். அவனால் தான் மைக்கேல் ஃபாக்ஸுக்குத் தங்களைக் கேள்வி கேட்கிற தைரியம் வந்தது. இந்தத் துணிவு வேறு ஆசிரியர்களிடமும் தொற்றிக் கொள்ளலாம். எனவே அவனை அழிக்க வேண்டும். தீர்மானித்தான். அந்தக் குழு ஆண்டி.நோரிஸின் வீட்டை நோக்கிப் புறப்பட்டது.

ஏறக்குறைய ஆண்டி நோரிஸ் அந்த நேரத்தில் வகுப்பில் சங்கீதம் கற்றுத் தந்து கொண்டிருந்தான். கிடாரின் துடிப்புக்களை மாற்றி, வயலினை இன்னும் இழையவிட்டு ட்ரம்ஸில் இன்னும் கொஞ்சம் சுருதி கூட்டி....

அந்தக் குழு ஆண்டி நோரிஸின் வீட்டில் புகுந்தது. அவனுடைய மனைவி மெர்ரிலின் ரோஸ் கடைசி கடைசியாக உதட்டிற்குச் சாயத்தைப் பூசிவிட்டு வாயை 'O' என்று திறந்து பார்த்த நேரம் அறைக் கதவு திறந்தது. கண்ணாடியில் அவர்கள் தெரிந்தார்கள்.

''ஓ! நோ.''

அவர்கள் மெதுவாக அவளை நெருங்கினார்கள், படுக்கையில் தள்ளினார்கள். பீட்டர் ஸ்டெக்மென் முதல் ஆளாக அவளை அந்தரங்கமாக நெருங்க — அவனுடைய சகா ஒருவனின் கையிலிருந்த காமிரா 'கிளிக்' என்றது. அந்தக் காட்சிகளை எடுக்கக் காமிரா கூச்சப்படவேயில்லை.

கடைசியில் வியர்வை வழிய அவர்கள் எழுந்தார்கள். மெர்ரிலின் ரோஸை ஒரு கையில் பற்றி அழகிய பெண் கலைமானை இழுத்துப் போவது போல் இழுத்துச் சென்றார்கள்.

ஆண்டி நோரிஸ் தான் அமைத்திருந்த அந்தப் பாடலைத் தொடங்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தான். பிரின்ஸிபால் முதற் கொண்டு அத்தனை பேரும் ஆண்டி நோரிஸின் கையசைப்பிற்காகவும், அவன் சொல்லப் போகும், 'ஒன், டூ, த்ரீ'க்காகவும் காத்துக் கொண்டிருக்க, பீட்டரின் பெண் சகா ஆண்டி நோரிஸின் முதுகைத் தொட்டாள். நோரிஸ் திரும்பினான். அவன் கையில் அந்தக் கவரை வைத்தாள் அந்தப் பெண். வகுப்பு வாசலுக்குப் போய் நின்றாள். நோரிஸ் அந்தக் கவரில் இருந்த புகைப்படங்களை எடுத்துப் பார்த்தான்.

மனம் 'மெர்ரிலின்' என்று கதற, நிமிர்ந்து பார்த்தான் நோரிஸ். அந்தப் பெண் டாட்டா காட்டினாள். 'மெர்ரிலின் ரோஸ் எங்களிடம்' என்று சைகை செய்தாள்.

''ஒரு நிமிஷம்'' என்று வெளியே வந்தான் ஆண்டி நோரிஸ்.

நோரிஸை அந்தப் பள்ளியின் நிழலான இடங்கள் வரவேற்றன. இருளான காரிடாரில் நோரிஸ் அந்தப் பெண் ஓடிய திசையை மையமாக வைத்து ஓட, ஒரு மூலையிலிருந்து அவள் வெளிப்பட்டாள்.

'உய்' என்று கத்தினாள். மறுபடி ஓடினாள். இந்த முறை அவளைத் தப்பவிடக் கூடாது. ஆண்டி நோரிஸ் தீர்மானத்துடன் துரத்தினான். வேகம். வேகம். வேகம்.

ஒரு திருப்புத்தில் அவன் எதிர்பட்டான். பீட்டர் ஸ்டெக்மெனின் இன்னொரு ஃப்ரெண்ட். ஒல்லி.மொட்டை. விகாரமான முகத்துடன், விகாரமான சிரிப்புடன், கையில் கோடாலியுடன்.

'ஹக்.'

ஆண்டி நோரிஸ் அவனைத் தோளில் மோதினான். எதிர்பாராத அந்த மோதலில் கோடாலி பறந்து தரையில் எங்கேயோ விழுந்து 'க்ளாங்' என்றது.

ஆண்டி நோரிஸ் உலகத்து சக்திகளைத் திரட்டினான்.

'ஹக்.' இன்னொரு மோதல். எதிரி கீழே சரிந்தான், தடாலென்று. அவன் முதுகு தரையில் மோதிய இடத்தில் ஒரு மரம் அறுக்கும்

முட் சக்கரம் வெகு வேகமாகச் சுற்றிக் கொண்டிருக்க — ஆஆஆஅஆஆ!

பீட்டர் ஸ்டெக்மென் மெர்ரிலின் ரோஸை இழுத்துக் கொண்டு ஓடினன். கூடவே சகாக்கள் மூவர். "எங்கே அந்த நோரிஸ்?" என்று இரைந்தான். "அவனைக் கண்டு பிடித்துக் கொல்லுங்கள். அவன் மனைவிக்காக நம்மைத் தேடிக் கொண்டிருப்பான்! தனித்தனியாகப் பிரியுங்கள். அவனைத் தேடுங்கள். அவனை ஒழியுங்கள்."

ஒரு குண்டன் தனியாகப் பிரிந்து ஆண்டி நோரிஸ் கையில் இரும்புத் தடியுடன் காத்திருந்த அறைக்குள் நுழைந்தான்.

"வா" என்றான் ஆண்டி நோரிஸ்.

'ணங்' — ஓர் எதிரி ஒழிந்தான்.

இருளான காரேஜ். ஆண்டி நோரிஸ் வெறியுடன் பார்த்தான்.

காரேஜில் பெட்ரோல் இருந்தது. தரையில் ஊற்றினன். ஆக்ஸி — அஸிடிலீன் காஸ் சிலிண்டர் பக்கத்தில் இருக்க அந்த பைப்பைக் கையில் ஏந்தினன். காத்திருந்தான் காரேஜ் வாசலில் அந்த எதிரி தெரிந்தான். மெல்ல நடந்து பெட்ரோல் குளத்திற்கு அருகில் வந்து நிற்க —

'புஸ்ஸ்ஸ்ஸ்ஸ்....' — இப்படியாகச் சில ட்வர்களின் கணக்குத் தீர்ந்தது.

அப்புறம் அந்தப் பெண் மிச்சமிருந்தாள். பீட்டர் ஸ்டெக்மென் இருந்தான். மெர்ரிலின் ரோஸ் அவனிடம் சிக்கியிருந்தாள்....

நினைத்துக் கொண்டேயிருந்த வேளையில் காரேஜில் இருந்த ஒரு கார் இரு வெளிச்சத் தலைகளுடன் நோரிஸை நோக்கிச் சீறி வர —

நோரிஸ் உருண்டு தப்பித்தான்.

கார் திசையறியாமல் சீறி, மற்ற கார்களை இடிக்க, கண்ட்ரோல் இழந்து உருள.... ஸ்டியரிங் வீலைப் பற்றியபடி அந்த எதிரிப் பெண்..... சாவைத் தொட்டுக் கொண்டிருந்தாள்.

"எங்கே பீட்டர் ஸ்டெக்மென்?" என்று உறுமினன் ஆண்டி நோரிஸ்.

"கோ டு ஹெல், யூ ஸன் ஆஃப் எ பிட்ச்" என்றாள். அவளுடைய கடைசி வாக்கியம்.

கடைசிகடைசியாக மொட்டை தளத்தில் பீட்டர் ஸ்டெக்மெனைக் கண்டான் ஆண்டி நோரிஸ். அவனுடைய வலிமையான கைப்பிடியில் மெர்ரிலின்.

'மெர்ரிலின்' என்று ஆண்டி நோரிஸ் கத்த, ஆகாய நட்சத்திரங்கள் அந்தக் குரலை வாங்கி ஏப்பம் விட்டன.

பீட்டர் சிரித்தான். "பக்கத்தில் வராதே" என்று எச்சரித்தான்.

ஆண்டி நோரிஸ் பாய்ந்தான். கடைசி கட்டப் போராட்டம்.

அந்தப் போராட்டத்தில் பீட்டரின் கை தாழ்ந்து போக மேற்கூரையைப் பிளந்து கொண்டு கீழே சங்கீதம் நடந்து கொண்டிருந்த ஹாலில் அந்தரத்தில் இறங்கினன். சாண்டலியரின் சங்கிலி ஒரு கோணத்தில் அவன் கழுத்தைச் சுற்றி இறுக, அந்த வினாடியில் அவன் உயிர் பிரிந்தது. கீழே கூட்டம் 'ஹா' என்றது.

மெர்ரிலின் ரோஸ் ஓடி வந்தாள். ஆண்டி நோரிஸை இறுக்கமாய்ப் பிடித்தாள். கண்கள் பனிக்க ஆறுதலாக நீண்ட தழுவல். மிக நீண்ட ஒரு முத்தம்!

Class of 1984 என்ற இப்படம் ஒரு U.S.A. தயாரிப்பு.

ஆசிரியரின் சிகப்புப் பென்ஸிலுக்குப் பயந்து பல காட்சிகள் விலக்கப்பட்டுள்ள இக்கதையில் மிகப் பயங்கரமான வன்முறைக் காட்சிகள். ஒரு அமெரிக்கப் பள்ளிக்கூடத்தின் உள்ளே நடந்த உண்மைச் சம்பவங்களை வைத்து எடுக்கப்பட்ட படம்.

இந்தியாவில் இப்படம் நுழைய தடை விதித்திருக்கிறார்கள் என்றாலும் இப்படத்தின் மிகச் சிறந்த திரைக் கதை, உணர்ச்சி பூர்வமான நடிப்பு, தத்ரூபமான வன்முறைக் காட்சிகள் கண்களுக்கு விருந்து தான்.

ஆசிரியர் ஆண்டி நோரிஸ் சாட்சிகள் எதுவும் இல்லாததால் தண்டனையிலிருந்து தப்பினார் என்று கடைசியில் ஸ்லைடு ஓடுகிறது. இந்த மாதிரி மாணவர்களைக் கொண்ட அந்த ஆசிரியர் தப்பித்ததில் ஒரு தார்மீக நியாயம் இருக்கிறது.

இந்த மாதிரி 'பள்ளி' இந்தியாவில் இன்று இல்லை; நாளை......?

— ஜெயமன்மதன்.



அமரர் கண்ணதாசனிடம், ஓர் அன்பர், "தங்களின் புஸ்தகங்கள் அனைத்தையும் படித்திருக்கிறேன். தங்களின் நல்லாசி வேண்டுகிறேன்" என்றார்.

அதற்குக் கண்ணதாசன், "புஸ்தகங்களைப் பின்பற்றுங்கள். ஆசிரியரைப் பின்பற்றாதீர்கள்" என்று சட்டென்று பதில் சொன்னார்!

— தேனி எஸ். மாரியப்பன்.



sunware lights up your life with such sophistication
Buffet plate
Rice platter
Dinner plate
Donga big and small
Cup and Saucer
sunware
MELAMINE CROCKERY
Naik BROTHERS
56, Purasawalkam High Road,
Ist Floor, Madras-600 007.
Phone: 66 10 34, 66 29 65



ஹெச் எம் டி
கைகெடிகாரங்கள்
hmt
WATCHES
hmt
விதவிதமான, எச்சம்டி சாவி கொடுக்கும் கைகெடிகாரங்கள் (Handwounds) ஆட்டோமடிக் மற்றும் குவார்ட்ஸ் கைகெடிகாரங்கள் அவற்றில் உங்கள் மனத்திற்கிசைந்த விலை மதிப்புள்ள ஹெச் செம் டியை தேர்ந்தெடுத்திடுவீர்.
அங்கீகாரம் பெற்ற பூரண விநியோகஸ்தர்கள்:
தோஷி & தோஷி
3, பிளாக்கர்ஸ் சாலை,
(காஸினோ தியேட்டருக்குப் பக்கத்தில்)
சென்னை-2
போன்: 849158-35688
116, ராயப்பேட்டை
நெடுஞ்சாலை
மைலாப்பூர், சென்னை-4
போன்: 72325
உங்களுக்கு மனமிருந்தால் எங்களிடம் நேரமிருக்கிறது

* சிவாம்பிகை, அரகண்டநல்லூர்.

? அ.தி.மு.க.வின் தோல்விக்கு அதிகாரிகளே காரணம் என்று அமைச்சர் வீராசாமி குற்றம் சாட்டியிருக்கிறாரே, அதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

! ஓட்டு எண்ணிக்கையில் நேர்மையாக நடந்துகொண்டுவிட்டார்களேஎன்றஆதங்கமாக இருக்கும்!





யார் குரல்... * ...ஏற்றது?

* ஜி. பாலகிருஷ்ணன், விசலூர்.

? தமிழ்த் திரையுலகத்திற்குப் புதிதாக வந்திருக்கும் இரட்டை இசையமைப்பாளர்களான லட்சுமிகாந்த்—பியாரிலால் பற்றி?

! அவர்கள் எங்கே வந்தார்களாம்? இளையராஜாவிடம் ஏற்பட்ட மனத்தாங்கலால், கோவைத் தம்பிதான் பம்பாய்க்குச் சென்று கையோடு அவர்களை அழைத்து வந்தார். சென்னை வந்த ல—பி ஜோடி உ.உ.க்கான பாடல்களுக்குமட்டும்இசையமைத்துவிட்டுக் கேட்ட தொகையைக் கேட்ட கோ. த. மயக்கமடையாத குறைதானும்! அதனால் ரீ—ரிகார்டிங்குக்கு நம்ம ஊர் ஆள் ஒருவரையே போட்டுவிட்டார்! அதுசரி, அத்தனை தொகை கொடுத்து இசையமைக்கப்பட்ட உ.உ. பாட்டுக்கள் எல்லாம் டக்கரா என்ன?

* த. ஜெயக்குமார், கொப்பம்பட்டி *

? மத்திய அமைச்சர்களை மாநில முதல்வர்களாகவும் மாநில முதல்வர்களை மத்திய அமைச்சர்களாகவும் மாற்றிக் கொண்டே இருப்பதால் என்ன பயன்?

! உள் கட்சித் தேர்தல்களை நடத்தி, மாநிலங்களில் புதிய தலைவர்கள் உருவாகி, உயர்ந்து போட்டிக்கு வருவதைத் தடுக்க முடிகிறதல்லவா, அதுதான் பயன்!

* தே. காந்தி, கிருஷ்ணகிரி.

? லஞ்சம்னு என்ன? அன்பளிப்புன்னு என்ன? கொஞ்சம் வித்தியாசப்படுத்திக் காட்டுங்களேன். வித்தியாசமே தெரிய மாட்டேங்குது....!

! சமீபத்தில் திஹார் ஜெயில் விஷயங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ஆயிற்று? தப்பிக்கக் கொடுக்கப்படுவது லஞ்சம். தப்பித்தவர்களை மீண்டும் பிடிக்கக் கொடுக்கப்படுவது அன்பளிப்பு. அந்த அன்பளிப்பையும் உயர்த்தச் சொல்லிக் கேட்பது அரசியல். புரிந்திருக்குமே!

* க. அன்பழகன், சேத்தூர்.

? சென்னை வானொலியில் காலை 7.25க்கு ஒலிபரப்பாகும் நகர்வலம் நிகழ்ச்சி சமீபகாலமாக அரசை இடிப்பது போலவே இருப்பதைக் கவனித்தீர்களா?

! எல்லாம் பஞ்சாயத்துத் தேர்தல் முடிவுகள் கொடுத்திருக்கும் தைரியம்தான்.

* குமரி ஜெய், சென்னை—5.

? தேர்தல் தோல்வியால் ஆளுங் கட்சியின

நீங்கள் கேட்டவை
— தராசு

சின் ஊழல் குறைய வாய்ப்பு இருக்கிற தல்லவா?

! குறையும் என்று நம்ப முடியவில்லை. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளும் வேகம்தான் அதிகமாய் இருக்கும்.

* எம். செல்லையா, சாத்தூர்.

? ரூபாய்க்கு பதினாறு படி அரிசி அளந்து வாங்கிய காலம் மீண்டும் எப்போது வரும்?

! உங்கள் மாதச் சம்பளம் வெறும் ஏழு ரூபாயாக மாறும்போது! சம்மதமா?

* எஸ். இந்திரா, சென்னை — 17.

? ஜேசுதாஸ், எஸ்.பி.பி. — யாருடைய குரல் விடியற்காலையில் கேட்க ஏற்றது?

! பறவைகளின் தேவ கீதங்களுக்கு ஈடு இணை வேறு எதுவுமே கிடையாது.

* உமார்த்தி. கோவை — 43.

? 'இக்கடவுள் பற்றி இருபது பேருக்காவது கடிதம் எழுது. இல்லாவிடில் ஆபத்து' என்று வரும் கடிதங்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! அப்படி வரும் மிரட்டல் கடிதங்கள் இறைவனுக்கே பிடிக்காதவை. கொஞ்சம்கூட யோசிக்காமல் கிழித்துப் போட்டுவிடுங்கள். பயமே வேண்டாம்.

* இரா. கந்தையா, ஆவடியூர்.

? 'பிராந்தியக் கட்சிகள் நாடாளுமன்றத்திற்குப் போட்டி இடுவதைத் தடை செய்ய வேண்டும். அப்போதுதான் தேசிய ஒருமைப்பாடு வளரும்' என்று சி. சுப்பிரமணியம் கூறியுள்ளார்களே. இது சாத்தியமா?

! மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போதே இது பற்றியெல்லாம் யோசித்திருக்க வேண்டும். இப்போது டூ லேட்!

* ப. விஜயபாலன், பம்பாய் — 23.

? மனிதன் முதன்முதலில் எந்தச் சந்தர்ப்பத்தில் அழுதிருப்பான்?

! 'பிறக்கும்போதும் அழுகின்றான்
இறக்கும்போதும் அழுகின்றான்
ஒருநாளேனும் கவலையில்லாமல்
சிரிக்கமறந்தாய் மானுடனே' — என்ற கண்ணதாசனின் பாடலைக் கேட்டதில்லையா நீங்கள்? மனிதன் முதன்முதலில் சிரித்த சந்தர்ப்பத்தைத்தான் தேடிப்பார்க்க வேண்டும்!

* டூ லேட்



* 'அதிகாரிகளே காரணம்?'



லஞ்சம்னா என்ன? அன்பளிப்புன்னா என்ன?

* ஆர். அப்துல் சலாம், மன்னார்புரம்.

? வேலியே பயிரை மேய்கிற கதை வர வர அதிகமாகி கொண்டு வருவது எதைக் காட்டுகிறது?

! இப்போதெல்லாம் வேலிகள் போடப்படுவது பயிர்களுக்காக அல்ல; களைகளுக்காக என்பதையே காட்டுகிறது.

* கே. எஸ். ராதாகிருஷ்ணன், உடுமலைப்பேட்டை.

? மனிதனிடம் இயற்கையாகவே அமைய வேண்டிய நீதி, நேர்மை, நியாயம் முதலிய நற்குணங்களை ஒருவன் பெற்றிருந்தால் மற்றவர்கள் வியப்புறும் இன்றைய நிலைமை பற்றிச் சொல்லுங்களேன்?

! நிலைமை அப்படித்தான் மாறிவிட்டது. ஆளுங்கட்சியோ அல்லது ஓர் அமைச்சரோ அல்லது ஓர் அதிகாரியோ தப்பித் தவறி ஏதாவது உபயோகமான காரியத்தைச் செய்யும்போது — அப்படிச் செய்ய வேண்டியது தான் அவர்களுடைய கடமை — அதற்காகத் தான் அவர்களுக்கு அந்தப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் மறந்துவிட்டுக் கடமையைச் செய்ததற்காக அவர்களுக்கு 'ஆஹா ஓஹோ...' என்று புகழ்மாலை சூட்டுகிற நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம்!

---

* ரூ. 10 பரிசு பெறும் கேள்வி:

த. ஜெயக்குமார்,
சிவன் கோவில் தெரு,
கொப்பம்பட்டி P.O.
திருச்சி ஜில்லா, 621 012.

முதலில் டீ.வி. பேட்டி என்று ஆரம்பித்து அந்தப் புதுக் கதாநாயகர் தம் குடும்பத்தினரை அறிமுகப்படுத்தும் காட்சி கொஞ்சம் புதுமையாக இருந்தாலும், அமெச்சூர்க்காரர்கள் எல்லாம் சேர்ந்து படம் பண்ணியிருக்கிறார்களோ என்று நினைக்க வைத்துவிடுகிறது.

அப்புறம் சுலக்ஷணா, மகேந்திரன், ராகேஷ் க்ரூப்பின் காதல். ஆள் வைத்து அடிப்பது, பின்னணி பாடுவது என்று ஏகப்பட்ட ஸீன்கள். என்னவோ தெரியவில்லை. இந்தப் படம் வெளியாவதற்கு முன்னாலேயே இந்த காட்சிகளை எல்லாம் மற்ற படக்காரர்கள் கையாண்டுவிட்டார்கள். யாராவது ஸீன்களை லீக்—அவுட் செய்துவிட்டார்களா என்ன?

இடைவேளைக்குப் பிறகு ஆஸ்பத்திரி, கட்டில், சிறுநீரக சிகிச்சை என்று மாற்றி மாற்றிக் காட்டப் போவதால் கொஞ்சம் கிளுகிளுப்பாக இருக்கட்டுமேயென்று டைரக்டர் காதல் காட்சிகளை நீட்டிவிட்டார் போலும்! ம். பரவாயில்லை!

வெகு அழுத்தமான கதை. சுஜாதாவின் காகிதச் சங்கிலிகள்.

அந்தப் புதுமுகம் ராகேஷ் ஒரு கோணத்தில் ஆனந்த் பாபுவை நினைவுபடுத்தினாலும் வெகு இயல்பு. காமிரா கூச்சம் பயம் எதுவும் இல்லாமல் சுலக்ஷணாவுடன் இயல்பாக நடித்திருக்கிறார்.

சுலக்ஷணா முதலில் கல்லூரிப் பெண்ணாக வந்து, குடும்பப் பெண்ணாக மாறி, மூக்கைச் சிந்தி நன்றாகவே செய்திருக்கிறார். பாந்தமான ரோல்தான் என்றாலும், அவர் குண்டாகியிருப்பதைப் பார்த்தால் கொஞ்சம் கவலையாக இருக்கிறது.

இந்தப் படத்தில் மகேந்திரன் பாத்திரம் ஓர் அழகான சிறுகதை, ஓர் அழகான கவிதை, என்று எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம். முதலில் கொஞ்ச நேரம், கடைசியில் கொஞ்சமோ, கொஞ்ச நேரம் என்று வந்தாலும் வாழ்ந்துவிட்டார்.

பாட்டுக்களில் மூன்று 'மறுபடி கேட்கலாமே, மறுபடி கேட்கலாமே' என்று எண்ண வைக்கின்றன. ஷங்கர்—கணேஷ் சின்சியராகச் செய்திருப்பதைப் பாராட்டித்தான் ஆக வேண்டும்.

கடைசியில் ராஜா—சுஜாதாவின் கதைப் பிரகாரம் — இறந்துவிடப் போகிறானே என்ற 'பக் பக்'குடன் காத்திருந்தால் அதிர்ச்சி. ஆனந்த அதிர்ச்சி. பிழைக்க வைத்துவிடுகிறார்கள். ஒரிஜினல் கதையை மீறினாலுங்கூட வெளியே வருகையில் மனம் லேசாக இது உதவுவதால் 'வெரிகுட்' என்றுதான் சொல்ல வேண்டும்.

சி.வி. ராஜேந்திரன் மீண்டும் எழுந்துவிட்டார்!


பொய் முகங்கள்













சிம்மாசனம்

மூக்கின் மேல் விரலை வைக்கும்படி ஒரு படம் பண்ண வேண்டும் என்று கிருஷ்ணா முடிவு செய்து விட்டார் போலும். படம் ஆரம்பிக்கும்போது காட்டும் பிரும்மாண்ட, பிரும்மாண்ட செட்டிங்ஸ்களைப் பார்த்து மூக்கில் விரலை வைத்தால், தெலுங்கு எழுத்துக்களில் வணக்கம் போடும்வரை விரலை எடுக்க முடியவில்லை. புரியவில்லை? படம் தெலுங்கிலிருந்து டப்பிங்.

கலிங்க தேசம், அவந்தி தேசம் என்று இரண்டு தேசங்களின் பெயர்களும் ஆதித்தவர்மன், வீரசிம்மன் என்று கிருஷ்ணா போடும் இரட்டை வேடங்களின் பெயர்களும் மட்டுமே இப்போது நினைவிருக்கிறது. மற்ற கதாபாத்திரங்களின் பெயர்களெல்லாம் இந்தக் காதில் நுழைந்து உள்ளே ஒரு குண்ட குடைந்து விட்டு அந்தக் காது வழியே டாட்டா சொல்லி வெளியேறிவிட்டன.

கணீர் கணீர் குரல்களில் டயலாக் பேசுபவர்களின் நாக்குக்கும்பல்லுக்கும்சிரமமான வேலை வைக்கும் வசனங்கள். பேனா பிடித்திருப்பவர்: ஆரூர் தாஸ்.

டாக் டாக் என்று குதிரையில் அணி அணியாய் வரும் சிப்பாய்களுக்குச் சீருடை தைத்துப் போட்டிருப்பதிலிருந்து பாடல் காட்சிகளில் வர்ணங்களை வகை வகையாய் வாரி யிறைத்திருப்பது வரை பார்த்தால்.... (மீண்டும் முதல் வரியைப் படிக்கவும்.)

எந்த இடத்தில் வேண்டுமானாலும் இசகுபிசகாய்ச் சிக்கல் விழக் கூடிய ஒரு ராஜாக் கதையைக் குழப்பமேயில்லாமல் கடைசி வரை எடுத்துச் சென்றிருப்பது மகா ஆச்சரியம். எதிரிகள் கூடிக்கூடி சூழ்ச்சி செய்வதும், வீரசிம்மன் திட்டம் போட்டு ஒவ்வொன்றையும் சமயத்தில் முறியடிப்பதும் சுவையான கட்டங்கள்.

ஆடல் ரசிகர்களுக்காக உடம்பைக் குலுக்கிக் கவர்ச்சி நடனம் ஆடும் ஐந்து நாட்டியக்காரிகளில் ஐந்தாவதாய் — அது யார் முதல் மரியாதை, மனக்கணக்கு படங்களில் நடித்த அதே ராதாவா? ஹூம்!

கறிவேப்பிலையாய்ப் பயன்பட்டிருக்கும்இன்னும் சில பிரபலங்கள்: அம்ஜத் கான், மந்தாகினி, ஜெயப்ரதா — எல்லாம் வடக்கு ரசிகர்களை சிக் என்று பிடிப்பதற்காகவோ?

பப்பி லஹரியின் இசை ஏனோதானோ.

மகா பிரும்மாண்ட ஜோடனைகளும், தொடர்ச்சியான சண்டை, டான்ஸ் எட்செட்ரா சமாச்சாரங்களும் சேர்த்ததில் பாதிப் படம் முடிந்தவுடனேயே, முழுப் படமும் பார்த்து விட்ட திருப்தி வந்துவிட்டது.

தெலுங்கு, இந்தி, தமிழ் என்று மூன்று மொழிகளிலும் ஒரே தேதியில் ரிலீஸாம். ஒரு மொழியாவது காப்பாற்றி விடாதா என்ன? •

—ஜெயமன்மதன்

மருந்துக்கு ஒரு ரூபாய்; மையத்துக்கு ஒரு ரூபாய்!

சென்னை பெஸண்ட் நகரிலுள்ள ரத்ன கிரீசுவரர் கோயில் வாசலில் புற்றீசல் போல் ஒரு கும்பல். பிரதான நுழைவாயிலை அடுத்துள்ள சிறிய கட்டிடத்திற்குள் இருவரும் மூவருமாக மக்கள் நுழைந்து கொண்டும் வெளியேறிக் கொண்டும் இருக்கிறார்கள். இடுப்பில் ஒன்று, கையில் ஒன்று எனக் குழந்தைகளுடன் பெண்கள், காலிக் கண்ணாடி பாட்டில்களுடன் சில முதியவர்கள்... இவர்களைப் பார்த்தால் கடவுளைத் தரிசனம் செய்ய வந்தவர்களாகத் தோன்றவில்லை. சந்தேகத்துடன் ஒருவரை அணுகி விசாரித்தால், 'ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கரா மெடிகல் டிரஸ்ட்' நடத்தும் மருத்துவ மையத்துக்குத் தான் இவ்வளவு கூட்டமும் என்று தெரிகிறது.

கோயில் வளாகத்தில் ஒதுக்குப்புறமாக



உள்ள சிறிய கட்டிடத்திற்குள் எட்டிப் பார்த்தால் நீளவாட்டில் ஒரு சிறிய அறை தெரிகிறது. அதை இரண்டாகத் தடுத்து காத்திருத்தலுக்கு ஒன்று, பரிசோதனைக்கு ஒன்று என்று பிரித்து வைத்திருக்கிறார்கள். இங்கு தேனீக்களின் சுறுசுறுப்புடன் ஒரு சிறிய படையே இயங்கிக் கொண்டிருக்கிறது.

உள்ளே நுழைந்த ஒரு பெண்மணி ஒரு பக்கமாக உள்ள மேஜைக்கருகே சென்று மிகச் சுவாதீனமாகத் தன் அடையாள அட்டையையும் ஒரு ரூபாயையும் எடுத்துக் கொடுக்கிறார். அவற்றைப் புன்னகையுடன் வாங்கிக் கொள்ளும் பெண், அடையாள அட்டையில் உள்ள பெயருக்குரிய 'கேஸ் ஷீட்டை' அகர வரிசையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பல நூறு கேஸ் ஷீட்டுகளுக்கிடையேயிருந்து நொடியில் எடுத்துத் தருகிறார். 'டோக்கன்' ஒன்றையும் வழங்குகிறார். பரிசோதனைக்கு வந்த ஒவ்வொரு நோயாளியும் இப்படி கேஸ் ஷீட்டையும் டோக்கனையும் பெற்றுக் கொண்ட பிறகு டாக்டரைப் பார்க்க அதிக பட்சம் பத்து நிமிடங்களே காத்திருக்கிறார். இந்தத் துரிதத்தின் ரகசியம் என்ன என்று வியந்து கொண்டே தடுப்புப் பலகைக்குப் பின்னால் உள்ள பரிசோதனை அறைக்குள் எட்டிப் பார்த்தால்...

ஒரே மேஜைக்கருகே எதிரும் புதிருமாக இரண்டு டாக்டர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். ''வாங்கம்மா. இன்னைக்கு எப்படி இருக்கா குழந்தை? இழுப்பு எதுவும் இல்லையே...'' ஒரு டாக்டர் பரிவுடன் விசாரித்துக் கொண்டே ஸ்டெத்தைப் பொருத்திக் குழந்தையைப் பரிசோதிக்கிறார். அதே சமயத்தில், ஒரு வயதான பெண்மணியைப் பரிசோதித்துவிட்டு ''ஆம்பிஸிலின் மூன்று, பாரஸிடமால் மூன்று'' என்று குரல் கொடுக்கிறார் மற்றொரு டாக்டர். அவர் கேட்ட மருந்துகளை அடுத்த நிமிடமே அலமாரியிலிருந்து எடுத்து எண்ணித் தருகிறார் பக்கத்தில் நிற்கும் ஓர் உதவியாளர். நோயாளியிடமிருந்து கேஸ் ஷீட்டை வாங்கி விவரங்கள் குறித்துவிட்டு மருந்தையும் கொடுத்து அனுப்பி வைக்கிறார்கள் டாக்டர்கள். வெளியே வரும் நோயாளிகளிடமிருந்து நினைவாக 'கேஸ் ஷீட்டுகளை'த் திரும்பப் பெற்றுக் கொள்கிறார் முதலில் அதை எடுத்துக் கொடுத்த பெண். இத்தனையும் ஐந்து நிமிடங்களுக்குள் நடந்து முடிந்துவிடுகிறது. ஆக, ஓரிரு ரூபாய் செலவில், ஓர் ஏழை நோயாளிக்குச் சிகிச்சையும், மருந்தும் கிடைத்துவிடுகின்றன. டாக்டரைப் பார்ப்பதற்காகக் காத்திருக்க வேண்டிய நேரமோ பத்துப் பதினைந்து நிமிடங்கள் தான்.

தன் அடையாள அட்டைக்குப் பதிலாகத் தன் கணவனின் அடையாள அட்டையை மாற்றி எடுத்து வந்துவிட்ட ஒரு அப்பாவிப் பெண்ணிடம் 'ஏன் எங்கள் நேரத்தை வீணாக்குகிறாய்?' என்று இங்கு யாரும் எரிந்து விழுவதில்லை. மாறாக, ஒரு நீண்ட நாளைய நண்பரைப் போல் நோயாளியை வரவேற்று சிரித்த முகத்துடன் சிகிச்சை அளிக்கிறார்கள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கரா டிரஸ்ட் நடத்தும் இந்த 'மெடிகல் எய்ட் சென்டர்' தோன்ற பல வகைகளில் பாடுபட்ட டாக்டர் ஸ்ரீதர் சொன்னது:

''ஓரளவிற்குச் சமூகத்திற்கு உதவியாக எங்கள் மையம் இருக்கிறதென்றால் நாங்கள் ரொம்பத் தீவிரமாகக் கடைபிடிக்கும் நான்கு கொள்கைகளே அதற்குக் காரணம்:

''இலவச உதவியையே நாங்கள் முழுவதும் நம்புவதில்லை. தினமும் சென்டருக்கு



வரும் டாக்டர் பார்த்தசாரதிக்கு எங்கள் சக்திக்கு ஏற்ப ஒரு சிறு தொகையை ஊதியமாகத் தருகிறோம். அவர் ஞாயிறு தவிர மற்ற எல்லா நாட்களிலும் மாலை நாலு மணி முதல் ஆறு மணி வரை இங்கு கட்டாயம் இருப்பார். இவரைத் தவிர வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் ஒரு மருத்துவர் தம் சேவையை சென்டருக்கு இலவசமாக அளிக்கிறார்.

''அதேபோல் இலவசமாக சிகிச்சை அளிப்பதும் கிடையாது. ஒவ்வொரு முறை வரும்போதும் நோயாளியிடம் ஒரு ரூபாய் வசூலிக்கிறோம். இதைத் தவிர சில மருந்துகளுக்கு ஒரு ரூபாய் தனியாக வசூலிக்கிறோம். சில சமயங்களில் எங்களிடம் தகுந்த உபகரணங்கள் இல்லாமல் போனால் நோயாளிகளைத் திருப்பி அனுப்பி விடுவதில்லை. அவர்களை நல்ல மனம் படைத்த சில ஸ்பெஷலிஸ்டுகளிடம் அனுப்பி இலவசமாகச் சிகிச்சை பெற்றுத் தருகிறோம். அவர்கள் எழுதித் தரும் மருந்துகளை நாங்களே வழங்குகிறோம். ரத்தப் பரிசோதனைகள் போன்றவை தேவைப்பட்டால் குறைந்த தொகை செலுத்திப் பரிசோதனைகள் நடத்த எங்களுக்குத் தெரிந்த பரிசோதனை மையத்துக்கு அனுப்பி வைக்கிறோம்.

''ஜாதி, மத வித்தியாசம் பாராட்டாமல், எங்களை அணுகுபவர்கள் எல்லோருக்கும் உதவுகிறோம். ஏழை, எளியவர்களுக்காகத் தான் மையத்தை நடத்துகிறோம் என்றாலும் அவர்களுடைய பொருளாதார நிலைமைக்குச் சான்றுகள் கேட்பதில்லை. நம்பிக்கையின் அடிப்படையில்தான் இந்த மையம் நடத்தப்படுகிறது.

''பெரும்பாலும் மருந்துகளை விலை கொடுத்தே வாங்குகிறோம். சில கம்பெனிகள் தாமே முன்வந்து அளிக்கும் மருந்துகளை ஏற்றுக் கொள்கிறோம். மற்றபடி மருந்து கம்பெனிகள் விநியோகிக்கும் இலவச 'சாம்பிள்களை' நம்பி நாங்கள் காலம் தள்ளுவதில்லை. இதனால் 'எங்களிடம் மருந்து இல்லை' என்று சொல்ல வேண்டிய அவசியம் ஒரு நாளும் ஏற்படுவதே கிடையாது.

இரண்டே ரூபாயில் மருத்துவ சிகிச்சை!

''நாங்கள் பெரிய தொகைகளை வசூலிக்கும் முயற்சியில் ஈடுபடுவதேயில்லை. விரும்புவோர் மாதம் பத்து ரூபாய் அல்லது வருடம் நூறு ரூபாய் கொடுத்து உதவலாம். இப்படித் தருவோருக்குக் காஞ்சிப் பெரியவரின் ஆசியுடன் பிரதி மாதமும் காமாட்சியம்மன் குங்குமப் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.''

''காஞ்சிப் பெரியவருக்கும் இந்த அமைப்புக்கும் தொடர்பு ஏற்பட்டது எப்படி?''

டாக்டர் ஸ்ரீதரே தொடர்ந்து சொன்னார்:

''ஏழைகளுக்கு மருத்துவ உதவி அளிக்கும் அமைப்பை ஏற்படுத்த நான் எடுத்துக் கொண்ட பல முயற்சிகள் பலிக்கவில்லை. ஒரு முறை காஞ்சிபுரத்தில் காஞ்சிப் பெரியவர் மேற்பார்வையில் நடந்த ஒருநாள் மருத்துவ முகாமுக்குப் பணியாற்றச் சென்ற போது, பெரியவர் என்னைத் திடீரென்று அழைத்துச் சென்னையில் ஒரு முகாம் ஆரம்பிக்கும்படி சொன்னார். நான் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. என் உள் மனத்தில் என்றுமே உறுத்திக் கொண்டிருந்த ஓர் எண்ணத்தையே இந்த ஆக்ஞை பிரதிபலித்ததால் அதை உடனே செயல்படுத்த முனைந்துவிட்டேன்.

''முன்பு பலமுறை பலிக்காமல் போன

முயற்சி இந்தத் தடவை வெற்றி கண்டது. பெஸன்ட் நகரிலுள்ள என் நண்பர்களை அழைத்து என் எண்ணத்தைச் சொன்னேன். நான் எதிர்பார்த்ததை விட அதிவேகமாகப் பணம் சேர்ந்தது. சீக்கிரமே ஒரு டிரஸ்ட் நிறுவப்பட்டு மருத்துவ மையமும் உருவாகியது. அதனை ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் திறந்து வைத்தார். ரத்னகிரீசுவரர் கோயில் பக்த மண்டலியினர் இடம் ஒதுக்கித் தந்து உதவினார்கள். இந்த மார்ச் மாதம் இந்த மையத்தைத் துவங்கி ஓராண்டு பூர்த்தியாகிறது'' என்றார் டாக்டர் ஸ்ரீதர்.

''விரிவாக்கத் திட்டங்கள் ஏதேனும் உண்டா?'' என்று கேட்டபோது உற்சாகமாகச் சொன்னார்:

''எங்கள் மையத்துக்கு வரும் நோயாளிகளில் அநேகம் பேர்கள் ஓடைக்குப்பம் என்ற பகுதியைச் சேர்ந்தவர்கள். முதல் கட்டமாக இந்தப் பகுதியிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் தடுப்பு ஊசி போட வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். அதோடு மையத்துக்கு வரும் மற்ற பகுதி குழந்தைகளுக்கும் தடுப்பு ஊசி போடுவதையும், தாய்மார்களிடம் இதன் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லி விளக்கும் பணியையும் மேற்கொள்ளப் போகிறோம்., மேலும், இப்பகுதியில் வசிக்கும் ஒருவரையே நியமித்து அவர் மூலம் இப்பகுதி வாழ் மக்களுக்கு அடிப்படை சுத்த, சுகாதார முறைகளைப் போதிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

''எங்களுக்குக் கிடைக்கும் ஆதரவைப் பார்த்தால் ரொம்ப உற்சாகமாக இருக்கிறது. மூன்று கிரவுண்ட் நிலத்தை இலவசமாகத் தருகிறேன் என்கிறார் ஒரு பெஸன்ட் நகர் வாசி. மற்றொருவர் தம் ஆயுள் காலம் வரை தம் வீட்டை மையத்தை நடத்துவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிறார். சென்னையின் பல பகுதிகளிலும் இதுபோன்ற மையங்களை அமைத்து, அவை எல்லாவற்றுக்கும் பொதுவாக ஒரு மருத்துவமனையையும் அமைக்க முடியுமானால் மிக நன்றாக இருக்கும். ஆனால் இதுவரை நாங்கள் பொருள் உதவி நாடி யாரிடமும் சென்றது இல்லை. எல்லாவிதமான உதவியும் தானாகத் தேடி வந்ததுதான். இந்த பெஸன்ட் நகர் மையத்தில் கூட பிளாஸ்டிக் டோக்கன்களைத் தவிர வேறு ஒரு பொருளையும் நாங்கள் விலை கொடுத்து வாங்கவில்லை. இங்கு உள்ள மருத்துவப் பரிசோதனை உபகரணங்கள் சில, உபரியாக என்னிடம் இருந்தவை. அவற்றை நான் இங்கு கொண்டு வந்து வைத்தது போல் பெஸன்ட் நகர் வாசிகள் பலர் நாற்காலி, பெஞ்ச், அலமாரி, மேஜை என்று தங்கள் வீட்டில் உபயோகிக்கப்படாமல் கிடந்த பொருட்களைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். இந்த ஃபிரிட்ஜ் கூட அப்படி வந்ததுதான்'' என்று டாக்டர் ஸ்ரீதர் சொல்லிக் கொண்டிருந்தபோது அவர் கூற்றை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் கையில் கூடையுடன் வந்தார் ஒரு பெண்மணி. ''கோயிலுக்கு வந்தேன்... அப்படியே இந்தக் காலி பாட்டிலெல்லாம் குடுத்துட்டுப் போலாம்னு...'' என்றவாறு ஐந்தாறு கண்ணாடி பாட்டில்களைக் கொடுத்துவிட்டுப் போனார்.

''பெரும்பாலும் உயர், உயர் மத்திய வகுப்பைச் சேர்ந்த பெஸன்ட் நகர் வாசிகள்தான் இந்த மையத்தின் வெற்றிக்குக் காரணம் என்கிறீர்களா?''

''நிச்சயமாக அந்தப் பெருமை பெஸன்ட் நகர் வாசிகளைச் சேரும்'' என்றார் டாக்டர் ஸ்ரீதர்... ''ஆனால் அவர்கள் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது உண்மையல்ல. எங்களுக்கு உதவுபவர்களுள் பெரும்பாலானவர்கள் மத்திய, கீழ் மத்தியதர வகுப்பினர்தான். இவர்கள்தான் எளியவர்களின் கஷ்டங்களைப் புரிந்துகொண்டு, உண்மையான ஈடுபாட்டுடன் செயல்படுகிறார்கள். வாரத்தின் ஒவ்வொரு நாளும் டோக்கன் வழங்குவது, டாக்டருக்கு உதவுவது போன்ற வேலைகளைச் செய்ய முறை வைத்துக் கொண்டு வருகிறார்கள். பத்து ரூபாய் தருபவர்களுக்குப் பிரசாதம் வினியோகம் செய்வது போன்ற வேலைகளையும் மேற்கொள்கிறார்கள். டாக்டர்களுக்கு மருந்துகளை எடுத்துக் கொடுத்து உதவ மருந்து தயாரிக்கும் நிறுவனங்களில் பணியாற்றும் பலரே வருகிறார்கள். லிடாடல், டி. டி. கே., தமிழ்நாடு தாதா, போன்ற சில நிறுவனங்கள் அவ்வப்போது நன்கொடையாக மருந்துகள் தந்து உதவுகின்றன'' என்று முடித்தார் டாக்டர் ஸ்ரீதர்.

கடைசி நோயாளி திருப்தியுடன் வெளியேறியதும் டாக்டர்கள் களைத்துப் போய் எழுந்திருந்தார்கள். ''தினமும் மாலை நான்கு முதல் ஆறு மணி வரை இங்கு வேலை செய்யும் நேரத்தில் நீங்கள் உங்கள் சொந்த 'ப்ராக்டீஸை'க் கவனித்தால் பல மடங்கு சம்பாதிக்கலாமே'' என்று டாக்டர் பார்த்தசாரதியைக் கேட்டபோது, ''இதில் இருக்கும் சந்தோஷம் அதில் கிடைக்கவில்லையே'' என்று ரத்தினச் சுருக்கமாகப் பதில் சொல்லிவிட்டார். அந்த அந்தி நேரத்தில் எழுந்த ரத்னகிரீசுவரர் ஆலயத்தின் மணி ஓசை அவர் கூற்றை ஆமோதிப்பது போல் ஒலித்தது.

— எஸ்ஸார்

புகைப்படங்கள்: சுபா ரவி

சாப்பிடுபவர்: எங்க உங்க ஓட்டல் முதலாளியைக் காணோம்?

சர்வர்: எதிர்த்த ஹோட்டலுக்குச் சாப்பிட போயிருக்கார் சார்.

— கலைபிரியன்





மேஜரின் விரல்கள்

மேஜர் சுந்தரராஜனின் லேட்டஸ்ட் நாடகம் விரல்கள். இது பம்பாயிலும் டெல்லியிலும் மேடையேறிவிட்டாலும், சென்னையில் மேடையேறவில்லை!

ஆபத்பாந்தவர்

எந்த நாடகக் குழுவில் யார் வரமுடியாது போனாலும் தகவல் பறக்கும் முன்றிக்கு. மதியம் இரண்டு மணிக்குத் தகவல் சொன்னால்கூட ஸ்கிரிப்டை ஒரு தடவை படித்துவிட்டு, ஒத்திகை கூடப் பார்க்காமல், நன்றாய் நடித்து, நாடகக் குழுவை இக்கட்டிலிருந்து மீட்கும் ஆபத்பாந்தவர் முன்றி.

அது சரி 'முன்றி' என்று ஏன் பெயர் வைத்துக் கொண்டார்?

புதிய சங்கமம் படத்தில் நடித்துக் கொண்டிருந்த போது, சுஹாசினி இவரை முரளி — முன்றி என்று கேலி செய்வாராம். (முரளி: இயற் பெயர்) பிறகு தன் பெயரையே 'முன்றி' என்று மாற்றிக் கொண்டு விட்டார்.





இயக்குனர் வரைந்த படம்

இந்தப் படத்தை வரைந்தவர் ஒரு திரைப்பட டைரக்டர். யார் என்று கண்டு பிடித்துச் சொல்லுங்களேன்! (ஒரு க்ளூ: தமிழ்ப் பட டைரக்டர் இல்லை)

விடை: சத்யஜித்ரே.

தர்கா யார்? கோயில் யார்?

இந்த இருவரில் ஒருவர் வெள்ளிக் கிழமை தோறும் மவுண்ட் ரோடு தர்காவுக்குப் போய் வருவார்; இன்னொருவர் ஞாயிற்றுக்கிழமை தோறும் திருவேற்காடு கோயிலுக்குப் போய் வருவார்.

யார் எங்கே போகிறார்கள்? யூகியுங்கள் பார்க்கலாம்!

விடை: தர்காவுக்கு: சங்கர்
திருவேற்காட்டுக்கு: கணேஷ்



தகவல்: ஜூலி

...முதல் பக்கத் தொடர்ச்சி



ஆர். எம். வீ. — மனம் வைப்பாரா?

கொள்கிறோம்.

பிரதான கட்டுரை வெளியான பிறகு நம்மை அழகப்பன், வேங்கடராமன் கோஷ்டியினர் மட்டுமின்றி குருமூர்த்தி குழுவினரும் வந்து சந்தித்தனர். இருதரப்பிலும் முக்கியமான குறை என்னவென்றால் குற்றச்சாட்டுக்களும் சரி, மறுப்புக்களும் சரி, பதில் குற்றச்சாட்டுக்களும் சரி முழுமையான அளவில் கல்கியில் இடம் பெறவில்லை என்பதே. இது போன்ற விஷயங்களில் உணர்ச்சிகள் உச்சத்துக்குப் போவது இயல்பே. ஆனால் எல்லாக் குற்றச்சாட்டுக்களையும் மறுப்புக்களையும் விரிவாகப் பிரசுரிப்பதென்றால் ஒரு கல்கி இதழ் முழுவதையும் ஏன், அதற்கு மேலும் கூட கே. கே. நகர் சக்தி விநாயகர் கோயில்விவகாரங்களுக்காகவே ஒதுக்கிவிட வேண்டியதாகும். இதை வாசகர்கள் விரும்ப மாட்டார்கள். எனவே இருதரப்பினரும் இவ் விஷயத்தில் நம்மீது கோபப்படுவதில் பொருள் இல்லை.

கே. கே. நகர் சமூக நலச் சங்கத்தின் அமைப்பாளர் நடராஜனும் காரியதரிசி யுவராஜூம் மற்றும் அவர்களது தோழர்கள் பலரும் நம்மை வந்து பார்த்தார்கள். குருமூர்த்தியினால் தங்களில் பலர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவதிப்பட்டிருப்பதாகவும் கதை கதையாகக் கூறினர். அழகப்பனிடம் பூரண நம்பிக்கை வெளியிட்டனர்.

''வாதப் பிரதிவாதங்களைக் கேட்டுக் கொள்கிறோம், ஆனால் தீர்ப்பு வழங்கப் போவதில்லை'' என்றோம். ஆனால் அதே நேரத்தில் இவர்கள் எல்லோருக்குமே ஒரு விஷயத்தில் ஒற்றுமை இருப்பதைப் பார்க்கிறோம். அது. 'சக்தி விநாயகர் கோயில் வளர்ச்சி பெறவேண்டும்; அதன் அன்றாட பூஜை நியமங்கள் சரிவர நடக்க வேண்டும்' என்பதுதான். இப்போது இந்தத் தகராறுகள் காரணமாகக் கோயிலின் வளர்ச்சி, கும்பாபிஷேகம் முழுக்கு முதலியன தடைப்பட்டிருக்கிறது. குருமூர்த்தி குழுவும் அழகப்பன் தரப்பும் ஒத்துப் போவது சாத்தியமல்ல என்பது நிதர்சனமாகத் தெரிகிறது. இந்த நிலை நீடிக்கும் வரை கோயிலின் வளர்ச்சி சாத்தியமில்லை என்பதும் புரிகிறது.

இந்த நிலை மாற ஒரே வழி தான் நமக்குத் தோன்றுகிறது. அறநிலையத் துறை அமைச்சர் ஆர். எம். வீரப்பன் இந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். குற்றச்சாட்டுக்களை வீசிக் கொண்டிருக்கும் இரு தரப்பினரையும் ஒதுங்கி இருக்கச் செய்துவிட்டு, கே. கே. நகர் வாசிகளின் நம்பிக்கைக்கும் மரியாதைக்கும் உரிய மூன்றாவது நபர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அந்தப் பெரிய மனிதரிடம் அதிகாரங்களை வழங்கி, கோயிலின் வளர்ச்சி, பராமரிப்புப் பொறுப்புக்களை அவரிடம் வழங்க வேண்டும். இவரிடம் இரு தரப்பினரும் தங்கள் வசம் உள்ள கணக்கு வழக்குகள், கோயில் சொத்துக்கள் முதலியவற்றை அமைச்சரின் மேற்பார்வையில் ஒப்படைத்துவிட்டு விலகிக் கொள்ள வேண்டும். புதிதாக நியமனமாகும் நபருக்கு உதவ ஒரு குழு அமையலாம். அந்தக் குழுவில் கோயிலின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் ஆதியிலிருந்து பாடுபட்டு வரும்சிலர் அங்கம் வகிக்கலாம். ஆனால் இவர்களுக்கு அதிகாரம் ஏதும் இருக்கக் கூடாது.

குருமூர்த்திக்குக் கே. கே. நகர் வட்டாரத்தில் கணிசமான எதிர்ப்பு இருப்பது தெரிய வருகிறது. அவரைத் ''தங்கமானவர்'' என்று கூறும் கே. கே. நகர் பிரபலஸ்தர்களும் உண்டு. அழகப்பனோ தமக்கு ஏகப்பட்ட வேலைகள் இருப்பதாகவும் அமைச்சரின் வற்புறுத்தலால் மட்டுமே கோயில் விஷயத்தில் ஈடுபட்டிருப்பதாகவும் கூறுகிறார். எனவே மூன்றாவது நபரை அமைச்சர் கொண்டு வருவதே நல்லது.

இதற்கு, அரசியல் ரீதியான சிக்கல்கள் இருப்பதும்புரிகிறது! கட்சி அரசியல், கட்சிக்குள் கோஷ்டி அரசியல் எல்லாம் சக்தி விநாயகரையே ஆட்டிப்படைக்கும் சக்தி உள்ளதாகிவிட்டன! இருந்தாலும் அமைச்சர் மனம் வைத்தால் சிக்கலைத் தீர்ப்பதில் வெற்றி அடையலாம். சட்டபூர்வமான சிக்கல் இருந்தாலும் அதைச் சரி செய்ய அமைச்சர் தீவிர முயற்சி எடுக்க வேண்டும்.

கணபதி ராயன் — அவனிரு
காலைப் பிடித்திடுவோம்;
குணமுயர்ந்திடவே — விடுதலை
கூடி மகிழ்ந்திடவே!


என்று பாடினார் பாரதியார்.

இன்று நமது குணம் உயர்ந்திட வேண்டும் என்பது மட்டுமல்ல; சக்தி விநாயகனுக்கு நமது பூசல்களிலிருந்து விடுதலை அளித்து மகிழ்விக்க வேண்டும்; நாமும் மகிழ வேண்டும். இதற்குத் தேவையான சக்தியை நாம் பெற அந்தச் சக்தி விநாயகரையே மனமுருகிப் பிரார்த்திப்போம்!

— ஆசிரியர்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543).
Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.

DAVANGERE



புடவைகள், சூட்டிங்ஸ், ஷர்ட்டிங்ஸ், டிரெஸ் மெட்டீரியல்ஸ்

தாவண்கெரே